75

SAIVA MUNNETTA SANGAM


UNITED KINGDOM

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்

சித்திரை- வைகாசி - ஆனி 2014

# KALASAM




லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்
மணி 21 கலசம் ஒலி 75
*Kalasam*
சித்திரை-வைகாசி-ஆனி 2014
75வது சிறப்பிதழ்
Saiva Munnetta Sangam (UK) 2 Salisbury Road, Manor Park, London E12 6AB Tel: 00(44) 208 514 4732
Registered Charity No: 292085
Website: www.saivamunnettasangam.com e-mail: smsukinfo@gmail.com

திருநாவுக்கரசர் திருமுறை

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுபோல்நட் டுணரவுக் கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் நிற்குமே.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| ஆன்மிகத்தை நோக்கி ஒரு பார்வை - நான் யார்? | 03 |
| ஒன்றும் நீயில்லை அன்றியொன்றில்லை | 04 |
| தமிழும் சுவையும் | 07 |
| முதற் பரிசு பெற்ற கட்டுரை - நான் பார்த்த தேர்த் திருவிழா | 08 |
| பக்தி இலக்கியங்களில் தமிழ் | 09 |
| அழைப்பிற்கு முன்னர் நாம் செய்ய வேண்டிய உழைப்பு | 12 |
| பயணக்கட்டுரை - ஆவுடையார் கோயில் | 15 |
| தமிழில் பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு | 18 |
| இறப்பும் பிறப்பும் | 22 |
| வாழ்க்கை முறையும் சமய வழிபாடும் | 26 |
| முதற் பரிசு பெற்ற கட்டுரை எனது வீட்டில் சமயவாழ்க்கை | 28 |
| மனித நேயம் | 29 |
| Sakthi - the all pervasive Kinetic Energy of Lord Siva | 30 |
| உபநிடதமும் சைவ சித்தாந்தமும் | 35 |
| முதற் பரிசு பெற்ற கட்டுரை சமய வாழ்க்கையும் எனது எதிர்காலமும் | 37 |
| திருமுறைப் பெருமை | 39 |
| முதற் பரிசு பெற்ற கட்டுரை என்னை ஏன் இறைவன் படைத்தான் | 43 |
| கண்ணனும் தாத்தாவும் - மாணவர் பகுதி | 48 |
| அறத்தால் வருவதே இன்பம் Cataract Surgery -சைவ முன்னேற்றச் சங்கம் | 52 |
| மிருசுவில் கொட்டிகை அம்மன் கோயில் | 54 |
| Hard work – key to a gold mine – மாணவர் பகுதி | 57 |
| வினைப் பயன் | 58 |
| சைவ முன்னேற்றச் சங்க அறப் பணி மூத்தோர் நிலையமும் சிவபூமியும் | |
| Kunkiliya kalaya nayanar- மாணவர் பகுதி | 64 |
| நமது சமயமும் இன்றைய தலைமுறையும் | |


R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Issn no. ISSN 2055-6616

# எழுவாய் பயன் நிலை!

பயன் நிலைத்து நிற்கும் வகையில் செயல் அமைந்தால் அனைவருக்கும் பலன் கிடைக்கிறது

சில ஆண்டுகளுக்கு முன் சிந்தித்துச் செதுக்கிய 'கலசம்' சைவத் தமிழ் மக்களுக்கு பயன் தரும் பணியில் ஈடுபட்டுள்ளமை இதற்கு ஓர் நல்ல உதாரணம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் பெரியவர்கள் எங்கள் நன்மைக்காக விட்டுச் சென்ற பயனுள்ளவற்றை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்முன்னோர் தமக்கென எவ்வித உரிமையும் வைத்துக் கொள்ளாமல் மனித முன்னேற்றம் ஒன்றையே நோக்கமெனக் கொண்டு தமது உழைப்பைத் தந்துள்ளார்கள். இயற்கையும் இவ்வாறே தொழிற்படுகிறது. ஒரு வேளை எம் முன்னோர்கள் இயற்கையை நன்குணர்ந்ததால் சுயநலமின்றிச் செயற்பட்டார்களோ!

இன்று சமயத்தொண்டு, ஆலயப்பணி, சமூகசேவை, என்று பணிகளில் ஈடுபடும் எங்களுக்கு எம்முன்னோர் காட்டித் தந்த இந்த நற்பண்பு ஏனோ கண்ணில் தென்படுவதில்லை. மாறாக கர்வமும், அளவு மீறிய பொறாமையுமே எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் தெரிகிறது. எம்மை முன்னிலைப்படுத்தும் எண்ணங்களையே நோக்கமாகக் கொண்டு அதற்கு சேவை என்ற ஒரு மாயையைக் காட்டிக் கொண்டு நிற்பதை சமுதாயம் இனம் கண்டுவிடும். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனை முறை சூரன் போர், கஜமுக அசுரவதம், மகிஷாசுரன் வரலாறு, நரசிம்ம அவதாரம் படித்தாலும் எங்களுக்குள் இருக்கும் நான் பெரியவன் என்ற முனைப்பு குறைவதாகத் தெரியவில்லை. இந்தக் குணம் முற்றாக அழியாது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மாமரம் போல் கிளை பரப்பி ஆரவாரம் செய்து கொண்டிருந்தால் அழிவுக்கு வேலை வந்துவிடும்.

> **"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்**
> **மக்கட்பண்பு இல்லாதவர்".** திருக்குறள், 997.

எத்தனை அறிவுள்ளவராக இருந்தாலும் பண்பில்லாதவர்களை ஓரறிவுள்ளமரம் என்றார் வள்ளுவர்.

'நான் செய்தேன்,' 'நான் பெரியவன்' என்பதில் நான் எனும் எழுவாய் போய் விட்டால் மீதியிருப்பது செய்தேன் என்னும் பயனிலை மட்டுமே. அதுவும் பயனிலையாகி விட்டால் செயப்படுபொருளாய் எஞ்சுவது ஒன்றுமில்லை.

மனமே,எழுவாய் நீ பயன் நிலை.

சதாசிவம் ஆனந்ததியாகர்
ஆசிரியர்

ஆசிரியர்: சதாசிவம் ஆனந்ததியாகர்.
நிர்வாகக்குழு: வை. சிவனருட்செல்வர் (வெளியீட்டுத் துறைச் செயலாளர்), க. ஜெகதீஸ்வரன், வ. இ. இராமநாதன், சி. அற்புதானந்தன், கவிஞர் பாலரவி, சிவதம்பு

# நான் யார்?

(லண்டன் அம்பி)



வாழ்வின் நோக்கம் எனும்போது முதற்கண் ஒருவர் அறிய வேண்டியது "நான் யார்" எனும் வினாவே. வேறு சில வினாக்களை எழுப்பியே இந்த அதி முக்கிய வினாவிற்கு விடை காண எத்தனிப்போம்.

இந்த ஊனுடம்பு பல ஏழு கூறுகளாலானது. இவற்றில் நான் என்பது எது?

கண், காது முதலான உணரவைக்கும் கருவிகளா? இல்லை.

பார்த்தல், கேட்டல், தொடுதல் போன்ற உணர்ச்சிகளை உணரவைக்கும் கருவிகளும் இல்லை.

எல்லையற்ற நினைவுகளைச் சேகரித்து வைத்துச் சிந்திக்க வைக்கும் மனமா? இல்லை.

சுவாசத்தை இயக்கும் வாயுக்களா? இல்லை.

விழிப்புணர்வு = இயங்குவதும், உணர்வதும், பரமானந்தமும் .....இவையா? ம்ம்மம்!
எம்முன் தோன்றும் இவ்வுலகில் நிலையற்றனவெல்லாம் தீர்ந்துபோக எஞ்சியிருப்பது யாது? இந்த வினாவை நோக்குபவன் **மனம்** மட்டுமே.
மனமானது மௌன நிலையை எய்துங்கால் சுய உணர்வு – நிலையற்றவை – அதாவது – சுற்றியுள்ளவை (உலகம்) என்பது இருக்காதே?
எனவே "நான்" என்பதற்குள் அடங்குவது "மனம்" என்னும் அபார **சக்தி**யல்லவோ! மனம் என்று ஒன்று உண்டா என்றால் அதுவும் கேள்விக்குறியே.

வெளியுலகிலுள்ளன (நிலையற்றவை) இருந்தால்தான் **மனம்** என்றொன்று இருப்பதாக உணரப்படும். இந்த உருவற்றதுதான் **ஆத்மா** (ஜீவன்)

**நான்** என்பது இந்த உடம்பிலுள்ள இந்த வியப்புமிக்க **மனம்** என்னும் **சக்தி**தான்.



"நான் யார்" என்ற வினாவுக்குரிய விடை – தேடத்தேட – அக்கினியைக் கிளறும் குச்சி இறுதியில் தன்னைத் தானே கரைத்துவிடுகிறது, எரித்துவிடுகிறது – போல அந்நிலையிலேயே சுய உணர்வு தென்படும்.

**நான்** என்னும் சொல்லின் தனித்துவத்துக்குரிய **ஆணவ**மிக்க தொனி இல்லாதுபோகும் தறுவாயில் எஞ்சியிருக்கும் சக்திதான் **சிவம்** என்றாகும்.

சுவாசத்தைக் கட்டுப்படுத்துதலால் மனதை விழிப்புணர்வுக்குக் கொண்டுவருவது இலகுவாகும். சுவாசமே மனதின் பூர்வ வெளிப்பாடு. மரணிக்கும்வரை மனம் சுவாசத்தை உடலில் வைத்துக் கொள்ளும். அதன்பின் அது சுவாசத்தை தன்னோடு எடுத்துக்கொண்டுவிடும்.

மன அமைதிக்கு சுவாசப் பயிற்சிகளும், தியானம்,யோக சாதனைகளும் உதவும்.

மனதிலுள்ள **பதிவுகள்** அழியுங்கால் **"நான் யார்"** என்பதற்கு விடை முற்றும்.


ஆன்மா(ஆத்மா) சுயதன்மையை இழக்கும் நிலையில் மௌனம் நிலைக்கும். அந்தச் சுயநிலையே இறைவன் / ஆத்மா என்றெல்லாம் அழைக்கப்படும். இந்நிலையில் ஆத்ம விமோசனம் கிட்டும்

.................................................................................................................................

உசாத்துணை 1. சத்குரு ஜக்கி வாசுதேவ் உரைகள் 2.ரமண மகரிஷியின் உபதேசங்கள்.

# ஒன்றும் நீயில்லை அன்றியொன்றில்லை

(சு. ஜயம்பிள்ளை)



கிராமத்துச் சிறுவன் ஒருவன் தன் தந்தையுடன் பட்டணஞ் சென்றான். பட்டணத்திலே தந்தையின் நண்பரொருவரின் வீட்டிலே இருவரும் சில நாட்கள் தங்கினர். அந்த வீட்டிலேயுள்ள பொருட்கள் பலவும் அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தன. வண்ண வண்ண மின்குமிழ்கள், அழகாகச் சுழலும் காற்றாடிகள், குளிர்சாதனப்பெட்டிகள், மின்சார அடுப்பு, தொலைக்காட்சிப் பெட்டி, தொலைபேசி போன்ற பல பொருட்கள் அவனது கவனத்தை ஈர்த்தன. வெளியே போயிருந்த தந்தை மீண்டதும் ஆர்வத்தோடு கேள்விகள் கேட்கத் தொடங்கினான்.

"அப்பா எண்ணெயுந் திரியும் இல்லாமல் இந்த விளக்குகள் எரிகின்றனவே, எப்படியப்பா?"

"அவையெல்லாம் மின்சார விளக்குகள். கம்பியினூடாகச் செல்லும் மின்சக்தியினால் எரிகின்றன".

"அப்போது மின்சக்திதான் வெளிச்சமானதா?. மத்தியானம் இந்த வீட்டு மாமி சமைக்கும்போது சமையலறைக்குப் போனேன். அடுப்பிலே சமைத்துக் கொண்டிருந்தார். விறகுமில்லை. மண்ணெய்யுமில்லை. வெளியே பெரிதாக நெருப்பின் சுவாலையுமில்லை. ஆனால் அடுப்புக்குக் கிட்ட நல்ல சூடாக இருந்தது. மிக விரைவாகவும் சமைத்து விட்டார். நான் கேட்ட போது மின்சார அடுப்பு மின் சக்தியால் இயங்குகின்றது என்று சொன்னார். மின்சக்தி சூடென்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன்?"

இதோ பார், மேலே காற்றாடி சுற்றுகிறது. எமக்குக் காற்று வருகின்றது. இந்தக் காற்று எப்படி வருகின்றது?"

"இதுவும் மின்சக்தி தானா அப்பா?"

"அது மட்டுமில்லை. இதோ இந்தப் பெட்டியில் இருக்கும் தண்ணீரைக் குடித்துப்பார்."

"அடேயப்பா! ஜில் என்று குளிராயிருக்கிறதே!"

"எப்படி இந்தக் குளிர் வந்தது தெரியுமா? அதுவும் மின் சக்திதான். இன்னும் பார்.அதோ தொலைக்காட்சிப்பெட்டி. நேற்றிரவு அதில் படம் பார்த்தாயல்லவா? பாடல்கள், பேச்சுக்கள் கேட்கின்றன. நேரடியாக ஆட்கள் தெரிகின்றனர். அவர்கள் அணிந்திருக்கும் வண்ண வண்ண ஆடைகள் அதே வண்ணத்தில் தெரிகின்றன. எத்தனையோ மைல்களுக்கப்பால் நடந்து கொண்டிருக்கும் விடயங்களை நேரில் பார்ப்பதுபோல் பார்க்க முடிகின்றது."

இப்படி எல்லா செயற்பாடுகளும் வெவ்வேறு சாதனங்கள் மூலமாக மின்சக்தியே செய்து கொண்டிருக்கிறது. கவர்ச்சியூட்டும் பல வடிவங்களிலும் நிறங்களிலும் அமைந்த மின்குமிழ்கள் ஊடாகப் பல்வேறு நிறங்களில் வெளிச்சம் வருகின்றது. உணவு சமைக்க வேண்டிய நெருப்பும் சூடும் அடுப்பிலே வருகின்றன. பொருட்கள் பழுதாகாமல் பாதுகாத்தும் குளிர்ச்சியூட்டிக் கொண்டும் குளிர்சாதனப்பெட்டி இயங்குகின்றது. எங்கோ தொலைவில் நடக்கும் நிகழ்ச்சியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. இவையெல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருப்பது மின்சக்தி. இதனைக் கண்ணாற் காணமுடியாது. தொட்டுப் பார்க்கமுடியாது. ஆனால் பலவிதமாக அது தன்னை வெளிக்காட்டுகிறது. வெளிச்சம் தரும் மின்விளக்கு மின்சக்தியா? இல்லை. காற்றுத்தான் மின்சக்தியா?அடுப்பில் இருந்து வரும் அனல்தான் மின்சக்தியா? அல்லது குளிர்சாதனப்பெட்டியில் இருந்து வரும் குளிர்தான் மின்சக்தியா? தொலைக்காட்சியில் இருந்து தோன்றும் உயிர்ப்புக் காட்சிகள் மின்சக்தியா? எது மின்சக்தி? இவை ஒன்றுமே மின்சக்தியில்லை. ஆனால் மின்சக்தி இல்லாமல் இவற்றின் இயக்கமும் இல்லை. கண்ணுக்குத் தெரியாத, தொட்டு உணரமுடியாத, தட்ப வெட்ப நிலைகள் காட்டாத மின்சக்தி, பல கருவிகளை ஊடகமாகக் கொண்டு ஒன்றுக்கொன்று

மாறுபட்ட செயற்பாடுகளை ஆற்றிக்கொண்டு அவற்றையெல்லாம் கடந்து நிற்கின்றது.

இவ்வாறே அண்ட சராசரங்கள் அனைத்துமாகி, அவற்றுக்கு அப்பாலுமாகி, அவற்றையெல்லாம் இயக்கி வருகின்ற மகாசக்தி இறைவன். இந்த இறையருட்சக்தி மாயை இருளிலே ஆன்மாக்கள் சிக்கித் தவிக்கையில் அவற்றுக்கு ஒளியூட்டுகின்றது. இன்னலடைந்து திணறும்போது தென்றலாகத் தவழ்ந்து வருகின்றது. மாயாமலங்களை தீமைகளை அழிக்கையில் தீப்பிழம்பாகத் திகழ்கின்றது. இறைவனின் பாதார விந்தங்களைச் சேர்ந்தோருக்குக் குளிர் தரும் நிழலாக, நறுமலர்ப் பொய்கையாக விளங்கிப் பேரருள் பொழிகின்றது. ஆகவே ஒன்றுக் கொன்று முரண்பட்ட பல்வேறுவிதமான அருட்செயல்களையும் ஆன்மாவின் நலன்களையும் இயற்றுகின்றது. அத்தகைய அருட்செயல்களைப் பஞ்சகிருத்தியங்கள் விளக்குகின்றன. அவ்வருட்செயல்களை அதற்குரிய வடிவங்கள் ஊடாகச் செய்கின்றது. அவ்வடிவங்கள் யாவும் ஒரே சக்தியினால் இயக்கப்பெறுகின்றன. இத்தன்மைகளை நடராசப்பெருமானது திருவுருவத்திலேயே அமைத்துக் காட்டியுள்ளமை வியந்து போற்றத்தக்கது.

நடராச மூர்த்தத்தின் வலக்கரத்திலே தாங்கிய துடி படைப்புத் தொழிலையும், தூக்கிப் பிடித்திருக்கும் மான் காத்தல் தொழிலையும், இடக்கரத்தில் தாங்கியுள்ள அக்கினி அழித்தற் தொழிலையும். முயலகனை ஊன்றி மிதித்துக் கொண்டிருக்கும் வலதுகால் மறைத்தலையும், தூக்கிக் கொண்டிருக்கும் இடது பாதம் முத்திப் பேற்றினையருளலையலும் குறிப்பதாக மெய்ஞானிகள் - சமய விஞ்ஞானிகள் - கூறிப்போந்தனர்.

*“தோற்றமும் துடியதனில் தோயும் திதியமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்*
*ஊன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோத முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு”*

என்ற உண்மைவிளக்கப் பாடல் இதனை எடுத்துக் காட்டுகிறது. சிவபெருமானது இடது புறத்திலே உமையம்மை இடங்கொண்டிருப்பதால் தூக்கிய இடது பாதம் உமையம்மையின் பாதமல்லவா? அது திருவருட்சக்தி.

இந்தச் சக்திதான் “தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சக்தி” இதுதான் “வாசியருளியதை வாழ்விக்கும் சக்தி”, வ – திருவருட்சக்தி, சி – சிவம், அது ஆன்மா எனவே, திருவருட்சக்தியானது சிவத்தினுடைய திருவடி நிழலையருளி ஆன்மாவை வாழ்விக்கும் பேரருட்சக்தி என்பது தெளிவாக்கப்படுகின்றது. சிவன் வேறு, சக்தி வேறன்று. இரண்டுமே இணைந்ததுதான் சிவசக்தி ரூபம். இதனையே

*“தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்”*

எனத் திருவருட்பயனில் உமாபதி சிவாசாரியார் எடுத்தியம்புகின்றார். “சக்திபின்னமிலான்” - சக்தியைவிட்டு வேறாகாதவன், நெருப்பு சிவம், அதிலுள்ள வெம்மை சக்தி, மலர்ப்பொய்கை சிவம், அதிலுள்ள தண்மை - குளிர்ச்சி - சக்தி. ஆன்மாக்களின் கண்டிப்புள்ள தந்தை சிவம், அவற்றை அன்பினால் அரவணைக்கும் தாய் சக்தி.

இந்தக் கருணையே வடிவான தாயான சக்தியின் அருளினாலேயே ஆன்மாக்கள் சிவத்தைச் சேருகின்றன. இத்தகைய திருவருளினாலேயே முதலமைச்சர் திருவாதவூரர் ஞானாசாரியரென்னும் தேனிலே மொய்த்த வண்டானார். அவரது திருவடி மலரிலேயூறிய வான் கருணைத் தேன் துளிகளைத் திவ்விய வாசகங்களாக்கி திருவாசகத்தேனை அளித்த மாணிக்கவாசகர் ஆனார். அவரளித்த தேன்துளிகளில் ஒன்றை நோக்குவோம்.

*“இன்றெனக்கருளி இருள்கடித் துள்ளத்*
*தெழுகின்ற ஞாயிறே போன்று*
*நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்*
*நீயலாற் பிறிது மற்றின்மை*
*சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்*



*தொன்றாந்*

*திருப்பெருந் துறையுறை சிவனே*
*யொன்று நீ யல்லை யன்றியொன் றில்லை*
*யாருன்னை அறியகிற் பாரே"*


திருப்பெருந்துறையின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! மும்மல காரணத்தால் உலகியல் இருளிலே கிடந்த என்னை, இன்று, தேவனே நீ ஞானாசாரியனாக வந்து எனக்கு நயன தீட்சை, திருவடி தீட்சை ஆகியவற்றால் மெய்யறிவைத் தந்ததோடு இருளை விலக்குகின்ற கதிரவனைப் போன்று என்னுள்ளத்திலே எழுந்து நிற்கின்றாய். ஞான சூரியனாக விளங்கும் உனது தன்மையை இடையறாது நினைந்த வண்ணமேயுள்ளேன். இப்போது என்னிடத்துள்ள ஜீவபோதம் தேய்ந்து தேய்ந்து சென்று பரம்பொருளான உன்னைத் தவிர எனது உணர்விலே வேறொன்றுமில்லை. நீயளித்த மெய்யறிவின் ஒளி கொண்டு பார்க்கின்றபோது எனது கண்ணிலேபடுகின்ற எந்தப்பொருளுமே நீயில்லை. அதே வேளை நீயில்லாமல் எந்தப்பொருளு மில்லை. உன் சித்தமில்லாமல் எந்த இயக்கமும் இல்லை. நீயே எல்லாவற்றிற்கும் அந்தர் யாமியாய்-உள்ளுறைபவனாய்-இருந்து செயற்படுத்திக் கொண்டிருக்கிறாய். இறைவா, உனது திருவிளையாடல்களை உண்மையான ஞானியரைத் தவிர வேறு யாரால் உணர முடியும் என்று நெக்குருகிப் பாடுகின்ற தன்மையை இற்கு காண்கிறோம்.

மறந்து போகும் ஒரு பொருளையோ அல்லது ஒரு விடயத்தையோதான் நினைக்க வேண்டிவரும். ஆனால் எப்போதுமே உள்ளத்திலே சூரிய ஒளி போன்று ஒளிர்ந்து கொண்டிருக்கும் பரம்பொருளைத் தொடர்ந்து நினைந்து கொண்டிருப்பதேயல்லாமல் மறந்து பின்னர் நினைவுக்கு வருவதல்ல இந்நிலை. ஒவ்வொரு கணமும் மூச்சை உள்வாங்கி வெளியே விடுகின்றோம். ஆனால் யாராவது "இப்போது மூச்சை உள்ளிழுக்கின்றேன். இப்போது மூச்சை வெளிவிடுகின்றேன்" என்று நினைத்துக்கொண்டு சுவாசிக்கின்றோமா? இல்லை. அதேவேளை மூச்சுவிட மறந்துவிட்டோமா? அதுவுமில்லை. நாம் நினையாமலே தொடர்ந்து செயல் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த மூச்சுப்போலவே ஞானசூரியன் உள்ளத்திலே உதயமாகி எழுந்து வருகின்றதைத் தொடர்ந்து அகக்கண்ணால் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கும் வாதவூரடிகளுக்கு இறைவனை நினைக்க ஒரு நிவூட்டல் தேவையற்றது. எனவேதான் "நினைப்பற நினைந்தேன்" என்றருளிப்போந்தார்.

*"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே"*

என்று இதனையே சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச் செய்தார்கள்.
"நமச்சிவாய நமச்சிவாய" என்று சொல்லிச் சொல்லி பயிற்றப்பட்ட நாவானது உள்ளம் சிந்திக்காமலே தாமாகவே நமச்சிவாய என்று சொல்லுந்தன்மை வாய்க்கப் பெறுகிறது. இந்நிலை சித்திக்கப் பெற்றவர்களுக்கு வெளியிலே காட்சியளிக்கின்ற பிரகிருதி எதுவும் பொருளல்ல. அதேவேளை பரம்பொருளில்லாமல் எந்தப்பொருளும் இல்லை என்ற உண்மை தெளிவாகவிளங்கும்.

இறைவா, நாம் காணுகின்ற பிரகிருதியில் தோற்றமளிக்கும் பொருட்களில் ஒன்றுமே நீயில்லை. நீயில்லாமல் ஒன்றுமேயில்லை!





# தமிழும் சுவையும் ①

-வைசி

பாலைவனம் என்றாலே தண்ணீரின் வாடையே இல்லாத, அதி வெப்பம் கூடிய, அதிவரண்ட, வெயிற் கொடுமை நிறைந்த நிலமாக இருக்கும் பகுதி என்பர். சில புலவர்கள் பாலைவனத்தை எதற்கு ஒப்பிடுகிறார்கள் எனப் பார்ப்போம்.

**ஒரு புலவர் தனது புலமையில்-**

*"பெரியவர் கோபத்தில் பிறந்த சாபத் தீ*
*யரிவையர் கற்புத் தீ யன்பர் துன்புறப்*
*புரிபிரிவென்னும் தீ பொறாமைத் தீ யவை*
*யொரு வழித் தொகையென யுளதைப் பாலையே!"*

அதாவது – தவறு இழைத்து விட்டுப் பெரியவர்கள் கோபப்படும்போது இடும் சாபத்தால் ஏற்படும் தீயின் தன்மை போலவும்;

கற்புடைக்கன்னியின் கன்னித்தன்மையைத் தவறாகப் பேசி அவளிடம் செம்மையாக வாங்கிக்கட்டும் அந்தத் தீயின் உஷ்ணம் போலவும்;

நண்பர்களிடம் பிரிவேற்படும் போது ஏற்படும் கொதிநிலை என்ற தீ போலவும்;

இந்த எல்லா வகையான நிலைகளும் ஒன்று சேரும்போது ஏற்படும் உஷ்ண நிலையின் தன்மை போலவும் இருக்குமாம் பாலைவனத்தின் வெப்ப நிலை.

**மற்றொரு புலவர் தனது பார்வையில் –**

*"சங்கரன் கண்ணென சாற்றும் பானுவைத்*
*திங்களைப் பார்த்துளேஞ் செவ்வழற்கணை*
*யெங்கணும் கண்டில் யெம்புவர்க்கு*
*இங்குள இதுவென விறுத்த தச்சுரம்"*

எம்பெருமானாகிய சிவனுடைய கண்களாகிய சூரியனையும் சந்திரனையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அவனுடைய செந்நிறமுடைய நெற்றிக் கண்ணினை நாம் பார்த்தது கிடையாது. அந்தக் கண் திறந்தால் அதனுடைய அனலின் கொடூரம் எப்படி இருக்குமென்றால் என்பதற்கு இந்தப் பாலைவனத்தின் சுட்டெரிக்கும் தன்மை ஈடாக இருக்குமாம்.

இது வேறொரு வகையான பாடல் (தமிழும் அதில் கணக்கும் )

*"ஒரு நான்கும் ஈரரையும் ஒன்றே கேளாய்*
*உண்மையாய் ஐயரையும் அரையும் கேட்டேன்*
*இருநான்கு மூன்றுடனே ஒன்றும் சொல்லாய்*
*இம்மொழியைக் கேட்டபடி ஈந்தாயாயின்*
*பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே*
*பின்னைஓர் மொழிபுகல வேண்டா இன்றே*
*சரிநான்கும் பத்தும்ஒரு பதினைந் தாலே*
*சகிக்க முடியாதுஇனி சகியே மானே"*

ஒரு நான்கும் ஈரரையும் ஒன்றே – ஒரு நான்கும் இரண்டு அரையும் ஒன்றும் சேர்வதால் உருவாகும் (4+1/2+1/2+1 = 6) ஆறு என்ற எண் குறிக்கும் ராசியான கன்னியே: கேளாய்; – கேட்பாயாக; உண்மையாய் ஐ அரையும் அரையும் கேட்டேன் - உண்மையாய் ஐந்து அரைகளோடு அரை சேர்வதால் உருவாகும் (5x1/2+1/2=3) மூன்று என்ற எண் குறிக்கும்

கிழமையாகிய செவ்வாயை (உன் சிவந்த வாயை)க் கேட்டேன்; இரு நான்கு மூன்றுடனே ஒன்றும் சொல்லாய்: - இரண்டு நான்குடன் மூன்றும் ஒன்றும் சேர்ந்து உருவாகும் (4+4+3+1=12) பன்னிரண்டு என்னும் எண் குறிக்கும் நட்சத்திரமான உத்தரத்தை (அதாவது விடையை)க் கூறுவாயாக! இம்மொழியைக் கேட்டபடி ஈந்தாய் ஆயின் - நான் கூறிய இந்த வாசகத்தைக் கேட்டதன்படி நீ எனக்கு உன் செவ்வாயை நல்குவாயென்றால்; பெரு நான்கும் அறு நான்கும் பெறுவாய் - நான்கோடு ஆறு நான்கு சேர்ந்து உருவாகும் (4+6x4=28) இருபத்தெட்டு என்னும் எண் குறிக்கும் தமிழ் வருடமான பெருமையான ஜெயத்தை (அதாவது வெற்றியை) நீ பெறுவாய்; பெண்ணே பின்னை ஓர் மொழி புகல வேண்டா இன்றே – மங்கையே, இன்னும் நானொரு வார்த்தை சொல்லத் தேவையில்லையல்லவா! சரி நான்கும் பத்தும் ஒரு பதினைந்தாலே – நான்கோடு பத்தும் ஒரு பதினைந்தும் சேர்வதால் உண்டாகும் (4+10+15=29) இருபத்தொன்பது என்னும் எண் குறிக்கும் சரியான தமிழ் வருடமான மன்மதனால்(அதாவது காமன்படுத்தும் பாட்டினால்) என் சகியே, மானே இனிச் சகிக்க முடியாது, என் தோழியே, மான் போன்றவளே, இனிமேல் என்னைால் காமவேதனைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது.

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 100 | 1000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௦ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ | ௱ | ௲ |

கலசம் 75ஆவது சிறப்பிதழிற்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில்
10வயதிற்கு உட்பட்டோர் பிரிவில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

## நான் பார்த்த தேர்த் திருவிழா

-ஆஜித்தா சிவனருள்- (7 வயது)

எனக்கு தேர்த்திருவிழா பார்க்க நல்ல விருப்பம். நானும் அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா எல்லோரும் முருகன் கோயில் தேர்த்திருவிழா பார்க்கப் போனோம்.

அங்கே கோயில் அழகாகச் சோடித்து இருந்தது. தேர் கோயிலின் முன்பாக நின்றது. அதுவும் மிக ஆழகாக சோடித்து அதற்குள் குருக்கள் இருந்து முருகனுக்கு தீபம் காட்டிக்கொண்டு இருந்தார். முருகனுக்கு அழகான பூமாலை போடடிருந்தார்கள். தேரையும் பூக்கள், வாழைமரம், வாழைக்குலை, அழகிய பட்டுத் துணிகள் என்பவற்றால் அழகாகச் சோடித்து இருந்தார்கள். மிகமிக அழகாக இருந்தது. தேரைச்சுற்றி நிறைய மக்கள் நின்று அரோகரா அரோகரா என்று சொல்லி வணங்கினார்கள். நாங்களும் வணங்கினோம். அம்மா அர்ச்சனைத்தட்டு வாங்கி அர்ச்சனை செய்தார். பின்பு தேரில் கட்டியிருந்த பெரிய கயிற்றைப் பிடித்து எல்லோரும் இழுத்துக்கொண்டு வீதியில் போனார்கள். இடையிடையே தேருக்கு முன்னால் தேங்காய் உடைத்தார்கள். வீதியில் கடலை, சர்பத், பிரசாதம் தந்தார்கள். நாங்கள் அதை வாங்கிச் சாப்பிட்டோம். சிலர் காவடி எடுத்துக்கொண்டு போனார்கள். எல்லாவற்றையும் பார்த்து ரசித்தோம். தேர் சுற்றி கோயிலுக்கு வந்ததும் நாங்கள் அங்கே சாப்பிட்டோம்.

எனது நண்பிகளும் பலபேர் வந்தார்கள். எல்லோருக்கும் அப்பா ஐஸ்கிறீம் வாங்கித்தந்தார். பின்னர் ஒரு பொம்மையும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தோம்.

# பக்தி இலக்கியங்களில் தமிழ்

- ஆழ்கடலோன் முருகவேள் பரமநாதன்-

தமிழின் தொன்மை மேன்மைகள் தொல்காப்பியத்தில் இருந்து சிதம்பர செய்யுட் கோவை வரை பேசப்பட்டிருக்கிறது. தமிழ் ஓர் இலக்கண வரம்புடைச் செம்மொழி.

இனிமையும் நீர்மையும் தமிழ் எனவாகும். என்பது பிங்கலந்தையாரின் கூற்று. நீர்மை என்றால் ஒழுங்கான இயல்பு என்று அர்த்தம். மூவர் தமிழென போற்றப்பட்டது தேவாரம். சும்பந்தர், சுந்தரரின் திருக்கடைக்காப்பிலே தமிழ் சுவறித்திகழக் காணலாம். அப்பர் இடையிடையே தமிழைப் பொழிந்துள்ளார்.

தமிழோடிசைபாடல் மறந்தறியேன். 4.1.6

வானவன்காண் வானவர்க்கு மேலானான் காண்
வடமொழியும் தென்தமிழும் ஆனவன்காண் 6.8.71

இத்தமிழின் வளத்தையும் திறத்தையும் குமரகுருபரர் தன் மீனாட்சிப்பிள்ளைத்தமிழில் வெளிப்படுத்தியுள்ளார்.

சொற்றமிழ் தழையவே, பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே, வடிதமிழ் தெரியுமவர், மதுர மொழுகிய தமிழ், முத்தமிழ் தேர்தருமதுரை, தமிழ்க்கடலின் அன்பினைந்திணை, வடிதமிழ்ப் பைந்தாமம், தெளிதமிழ் மதுரையில், தென்னன் தமிழின் உடன்பிறந்த முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ், கலிப்பகை நன்றமிழ், தெய்வத் தமிழ்க்கூடல், முழுதமிழ் திதியில், கொழுதமிழ்ப் பனுவற்றுறைப்படியும், நறை பழுத்த துறைத்தீன்தமிழ்.

(மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

இவ்வண்ணமே பன்னிரு ஆழ்வார் பாசுரங்களின் முத்திரைக் கவிதைகளிற் தமிழ் பொங்கித் ததும்பக் காணலாம். திருவாதவூரடிகள் புராணத்தில் 30 இடங்களிலே தமிழ் தேனாய்ப் பாய்கிறது.

1. வண்டமிழ் தெரிந்தவர்கள் - 7
2. மெய்த்தமிழ் புகன்ற திருநாடு -10
3. செந்தமிழில் வந்த சிவஞான அமுதுண்டு - 55
4. பொற்புடைய தமிழ்பாடும் புண்ணியர் -69
5. உபதேசஞ்தமிழ்செய்வார் - 70
   (திருமந்திரத்தில் - 81 தமிழ் செய்தல் - ஆகமத்தைத் தமிழில் கூறல்)
6. தண்டமிழ் பாடும் அன்பர் – 103 (தண்டமிழ் - தமிழ்வேதம்)
7. செந்தமிழாக்கிய மொழிந்தார் -104
   (வடமொழி வேதத்தைத் தமிழாக்கியவர் மாணிக்கவாசகர்)
8. தமிழ்க்கவிஞர் சூழ -42
9. சொற்றமிழ் வைகைநாடன் -161 (பாண்டியன்)
10. ஒண்டமிழ் வாதவூரர்க்கு உற்றதை உணர்ந்து - 169
11. ஞானச் செந்தமிழ் ஓது நீதிபோல - 173 (திருவாசகம்)
12. முத்தமிழின் திறநவிலும் புலவர் சூழ - 189
13. வெம்பரியின் அண்ணலை வியந்து தமிழ்மாறன் - 211
14. வண்டமிழ்வாதவூரர் - 214
15. வண்டமிழ்கிறையும்காண - 227 (செந்தமிழுக்கதிபராகிய திருவாதவூரர்)
16. மெய்தமிழ்மதுரைமூதூர் -229
17. முத்தமிழ்ப்பொருநைநாடன் -242 (பாண்டியன்)
18. என்றிரந்தான் தமிழ்மாறன் -320

19. வண்டமிழ்ப் பாண்டிநாடு - 328
20. சொற்றமிழ்வல்லார் - 364 (திருவாசகத்தில் வல்லவர்)
21. புல்லுஞ் சிவஞானத்தமிழ் போல் வண்டிசைபாட 389 (சிவநாமம் புல்லுந்தமிழ்போல வண்டு இசைபாட சிவநாமத்தோடு பொருந்தும் தமிழ் வேதமாகிய – திருவாசகத்தைப் போல இனிதாக வண்டுகள் கீதம் பாட)
22. நீடுமெய்த்தமிழும் அன்பால் ஓதினார் நீதிமிக்கார் (ஆராயத்தகும் - (அச்சிவபுராணமாகிய கலிவெண்பாவை ஒழித்து ஒழிந்த நல்ல கீர்த்தித்திரு அகவல், திருஅண்டப்பகுதி, போற்றித் திருஅகவல் என்னும் ஆசிரியப்பா – மூன்றுமாகிய உண்மைமிக்க தமிழ் வேதங்களையும் சிரத்தையோடு பாடியருளினார்) - 495
23. பரம்பரப் பொருளாமிந்தப் பைந்தமிழ் ஓதி - 412
24. ஆதியை மன்றுளாடும் ஐயனை அன்பினாலே ஓதிய தமிழின் பாடல் உள்ளவை ஓத - 517
25. எண்ணருந் தமிழின் பாடல் இயம்பிய ஐயா - 518 (ஐயா – மாணிக்கவாசகர்)
26. செந்தமிழ்க்கு அன்புமிக்கார் - (சிவன் - 522
27. விளம்பிய சைவ நூலோ, தாவு செந்தமிழோ என்று பார்ப்பது தக்கதென்றார் - 527 (இத்திருமுறை ஆன்மாக்களாகிய நம்மாட்டுத் திருவுள்ளத்து முகிழ்த்த கைமாறற்ற பெருங்கருணைத் திறத்தாலே, சதாசிவ நாயனார் திருவாய்மலர்ந்தருளிய வடமொழிச் சைவ ஆகமமோ, தாவு செந்தமிழோ என்று பார்ப்பது தக்கது என்றார் அல்லது முச்சங்கத்திலும் (தாவு-பரவிய) பரவிய செந்தமிழ் நூலோ என்று நாம் பார்ப்பதுவே இனிச் செயற்பாலது என்று ஒருங்கு கூறினார்கள். (தில்லை மூவாயிரவர் கூற்று இது)
28. தவமுடையோர் இயம்பிய இத்தமிழன்றி வீட்டு நெறிக்கு இனிச்சிவநூல் வேறுளதோ என்றார்கள். – 530
அனந்த கோடி பூர்வ ஜென்மங்களிலே அரிதினர்ச்சித்த, மெய்மையாகிய தவத்தை யுடைய, திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய இத்தமிழ்ப் பிரபந்தங்கள் அல்லது வீட்டு நெறியைவிடச் சிவநூல் இனி வேறு உளதோ என்றார்கள். இவ்வண்ணம் இறை விண்ணப்பமாகக் கேட்கப்பட்டபோது பாடியருளிய திருவாசகத்தின் நுண்(உட்)பொருள் என்னவெனத் தில்லைவாழ் அந்தணர்கள் கேட்டனர்..

29. தில்லையில் எம்பெருமான் செப்பிய இத்தமிழ்மாலை, நல்லவரும் பொருள் கேட்க வேண்டுமென நவின்றார்கள். (நவிலுதல் - சொல்லுதல்) அப்போ மணிவாசகப் பெருமான் சிதம்பர நடராசனைக் காட்டி உள்ளே சென்றார். வெளியே வரவில்லை.



நின்ற புகழ் புலியூரர்
நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான
செம் பொன்னம் பலமெய்தி
ஒன்றிய இத் தமிழ்மாலைப்
பொருளிவரென்று உரை செய்து
மன்றதனிற் கடிதேகி
மறைந்தனர் அங்கவர்காண - 536

செய்காட்டுங் கழுகடவித்
தில்லையுளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவங்
காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவம்
பணியுடையான் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே
மேவியநீர் ஆக்கினார். - 537

பாலோடு கலந்த நீர் அப்பாலாக மாறுவது போன்று பேரின்பப் பெருவாழ்வு எய்தினார் மாணிக்கர். இவ்வதியுயர்ந்த பாமாலையாம் திருவாசகத்தை யாணர்த்தேனென்று பாடியுள்ளார் கடவுள் மாமுனிவர்.

## யாணர்த்தேன்

யாணர் + தேன் = யாணர்த்தேன். யாணர் நிலைமொழி. தேன் வருமொழி.

ய,ர,ழ முன் க,ச,த,பவரின் மிகுந்து வருமென்ற புணர்ச்சி விதிக்கமைய "க்" மிகுந்தது. நன்னூற் சூத்திரம். 224. யாணர் என்றாற் புதிய என்று பொருள். தேன் - இங்கே திருவாசகத்தைக் குறிக்கின்றது. திருவாசகம் புத்தம்புதிய தேன் என்றும் விரிவுரை செய்யலாம். திருவாசகத்தைப் படிப்பதன் முன்னர், கடவுள் மாமுனிவர் யாத்த திருவாதவூரடிகள் புராணத்தை ஒருமுறை படித்துப் பார்ப்பது உகந்தது. புராணங்களிற் சிறியது இப்புராணம். திருவாசகம் திருவாசகரான மணிவாசகர் உட்பொருளான ஆடல்வேந்தன், திருவாசகமொழி, திருவாசகம் உருவான செய்தி இன்னும் பல கருதுகோள் பற்றிய முன்னறிவையும் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்தான் திருவாசகத்தின் ஊடகம். வாதவூர்ப் பெருந்தகையின் ஆக்கங்கள் இரண்டு. ஒன்று திருக்கோவையார். மற்றது திருவாசகம். முன்னையது அகத்துறை இலக்கணம். பின்னையது பக்திப்பண்ணை. இவற்றிற் தமிழ் என்ற இருப்பு இரு இடங்களில் அமைந்துள்ளது.

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் (திருவாசகம் 8.10)
ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ? (திருக்கோவையார்)

பூணரவன் திருநாமம்
புகழு மருந் தவர்சொல்ல
யாணர்இதன் பொருட்டேனை
இன்றுணர்வோ மென்றெண்ணி
மானுடை மன்று அகன்றேகி
மறைவல்லார் போதி நீழல்
வீணருடன் பெருவாது
வென்றவர்முன் சென்றார்கள் - 537


இவ்வூனுடல் தாங்கிய மனிதர்கள், நிலையாமையைச் சிந்தித்து, விடுதலைக்கு எம்மை உய்க்கும் திருவாசகத்தைப் பாராயணம் செய்து உய்தியடையுங்களென பாடற் பயனும் (உடன்) கூறியுள்ளார் முனிவர்.

ஈனமிருந் துனதோலு மென்புநரம் புஞ்சீயும்
ஆன உடல் சிவரூபமாம் இதனைத் தெளியாமல்
ஊனுடலுக்கு இரைதேடி உழன்றுலகிற் றடுமாறி
மாநரகிற் புகுதுமதோ மாயைவலைப் படுவார்கள் - 541

புத்தம் புதிய அனுபவங்களை நித்தம் நித்தம் தரும் திருவாசகமே மாமருந்து. ஆம் பிறவிப்பிணிப்பட்டு மடங்கினார்க்கே.

# அழைப்பிற்கு முன்னர் நாம் செய்ய வேண்டிய உழைப்பு

-வை.சிவனருட்செல்வர்



ஞானி ஒருவர் ஒரு மாலைப்பொழுதில் தமது சீடர்களுடன் காலாற உலாச் சென்று கொண்டிருந்தார். அப்போது அவருடைய சீடர்கள் தாகம் தீர்க்கச் சிறிது தூரத்தில் இருந்த ஆற்றில் தண்ணீர் அருந்தச் சென்றிருந்தனர். சீடர்கள் திரும்பி வரும்வரை பகவான் ஆற்றங்கரையின் அருகே மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிறார்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். சிறார்கள் மணல்வீடு கட்டுவதையும், கட்டும் மணல்வீடுகளை மற்றைய சிறுவர்கள் காலால் உதைப்பதையும் கண்டார். அதனால் மணல்வீடு கட்டும் சிறார்களின் முகத்தில் கோபம் துளிர் விடுவதையும் பகவான் அவதானித்தபடி இருந்தார். தாகம் தீர்த்துத் திரும்பிய சீடர்களும் சிறார்களின் இவ்விளையாட்டை இரசித்துக் கொண்டிருந்தனர்.



பொழுதும் சாயத் தொடங்கியது. சூரியனும் தன் மறைவிடம் நோக்கி மறையத் தொடங்கினான். அயலில் இருந்த வீடுகளில் உள்ள சிறுவர்களின் தாய்மார்களும் விளையாடிக்கொண்டிருந்த சிறார்களை அழைத்துச் செல்ல வந்து விட்டனர். பிள்ளைகளும் தாங்கள் கட்டிய மணல் வீடுகளைத் தாங்களே காலால் உதைத்து உடைத்து விட்டுத் தங்கள் தாய்மார்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீடு செல்லத் தொடங்கினர். அவர்களின் முகத்தில் எந்தவித கோபமோ, கவலையோ, சலனமோ காணப்படவில்லை. இவைகளையெல்லாம் பகவான் புத்தர் கவனித்தவராய் இருந்தார்.

இந்த விடயம் கூறும் செய்தி என்ன? இதே விடயங்களை மனிதன் எவ்வாறு கையாளுகின்றான்?

எமது வாழ்க்கையும் அப்படித்தான். நாமும் சூரியன்போல அஸ்தமிக்க வேண்டி வரும். ஒரு நாளோ அல்லது இன்னொரு நாளோ நாங்களும் மறைய வேண்டியவர்களே. சிறார்கள் கட்டிய மணல் வீடுகளை அவர்களே உடைத்து அழித்தார்கள். ஆனால் நாங்கள் சேர்த்து வைத்தவைகளை எங்களால் அழிக்கமுடியுமா? முடியாது. ஏனென்றால் எமது பற்றுதல்கள் அவ்வாறு செய்ய விடுவதில்லை. இறப்பு எவ்வாறு, எந்நேரம், எவ்வகையில், எவ்வுருவில் வரும் என்பதும் எமக்குத் தெரியாது. ஆகவே, இந்தப் பற்றுதல் என்ற அதி முக்கிய காரணத்தால் நாங்கள் மீண்டும் மீண்டும் பிறந்து இந்த உலகில் உழல்கின்றோம். அந்த அழைப்பு எவரையும் விட்டு வைக்காது என்பது தெரிந்திருந்தும், தெரியாதவர்கள் போல் நாங்கள் இருக்கின்றோம்.



எங்கள் எல்லோருக்கும் மகாபாரதக் கதைகள் தெரியும். அதில் ஒன்றைப் பார்ப்போம். பாண்டவர்கள் ஐவரும் கானகத்தில் நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். பல காததூரம் நடந்து களைத்து ஓரிடத்தில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். தாகம் அவர்களை வாட்டத் தொடங்கியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை நீர் நிலைகள் தென்படவில்லை. ஐவருள் இளையவனான சகாதேவனை நீர் நிலை தேடி வருமாறு அனுப்புகிறார்கள் மற்ற நால்வரும். சகாதேவனும் சில காத தூரத்தில் ஒரு குளத்தைக் கண்டு அதன் அருகே செல்கிறான். அக்குளத்தருகே நின்ற ஒரு நாரை அவனை நோக்கிச் சொல்கிறது " நீ என்னுடைய ஒரு கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும். பதில் சொல்லாமல் சென்றால் நீ நீரைக் குடித்தவுடன் இறந்து விடுவாய்" என்று கூறியது. சகாதேவனோ தாகத்தின் வெம்மை தாங்காமல், நாரையின் சொல்லையும் சட்டை செய்யாமல் தண்ணீரைத் தொட்டவுடனேயே குளத்தருகே வீழ்ந்து இறந்து விடுகிறான். சகாதேவனைக் காணாமல் தேடி அவனது அடுத்த சகோதரனான நகுலனும் அக்குளத்தருகே வர, அதே நாரை அதே கேள்வியைக் கேட்க, நகுலனும் பதில சொல்லாமல் தண்ணீரைக் குடித்தவுடன் கீழே விழுந்து இறந்து விடுகின்றான். தொடர்ந்து தம்பிமாரைக் காணாமல் பீமனும் அருச்சுனனும் ஒவ்வொருவராக அக்குளத்தருகே வந்து நாரையின் கேள்விக்கு மறுமொழி சொல்லாமலேயே தண்ணீரைக் குடித்து இறந்து விடுகிறார்கள். பின்பு இவர்கள் நால்வரையும் தேடி மூத்தவனான தருமன் அக்குளத்தருகே வருகிறான். தனது தம்பிமாராகிய பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் அக்குளத்தருகே இறந்து கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறான். அவர்கள் இறந்து கிடந்த இடத்திலிருந்து சொற்ப தூரத்தில் அந்த நாரை நின்று கொண்டிருந்தது.

அந்த நாரை கடைசியாக வந்த தருமனுக்கு நடந்த விடயங்களைக் கூறி அவர்கள்

இறந்ததற்கான காரணங்களைக் கூறியது. மேலும் அது கூறியது "நீ என்னுடைய கேள்விகளுக்கு மறுமொழி பகர்ந்தால் உன்னுடைய சகோதரர்கள் நான்கு பேரும் உயிர்த்தெழுவார்கள். இன்றேல் உனக்கும் அதே கதிதான் ஏற்படும்" என்றது. தருமரும் அந்த நாரையை நோக்கி "நாரையே, உன்னுடைய கேள்விகளுக்கு நான் பதில் கூறுகிறேன்" என்று கூறி ஒப்புக்கொண்டார். நாரை தனது முதலாவது கேள்வியைக் கேட்டது. "உலகத்தில் அதிசயங்களுக்குள் அதிசயம் எது"? தருமபுத்திரன் சொல்கிறார், "தினமும் ஆயிரக் கணக்கான மனிதர்கள் இறந்து கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் தாங்களும் ஒரு நாள் இறக்க வேண்டியவர்களே என எண்ணுவதில்லை. இதுதான் அதிசயங்களில் அதிசயம்" என்றார். இவ்வாறே நாரை கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் தருமர் சளைக்காமல் பதில் சொல்வதைக் கேட்ட நாரை, அவரது பதிலால் மகிழ்ந்தது; முடிவில் தருமரின் இறந்த சகோதரர்கள் நால்வரும் உயிர்த்தெழுந்தனர். அனைவரும் தாகம் தீர்த்து தங்களது நடையைத் தொடங்கினர்.

இது என்ன கூறுகிறது? மனிதன் தான் போக வேண்டிய நேரம் காலம் வந்ததும், அதை உணர்ந்து அந்த அழைப்பை அவன் மகிழ்வுடன் ஏற்கத் தயாராக வேண்டுமென்பதே! அந்தப் பிள்ளைகள் எப்படி அந்தத் தாய்மார்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு மகிழ்வுடன் போகிறார்களோ அதே நிலை தான் இங்கும் இருக்க வேண்டும். அங்கே தாய். இங்கே கடவுள். நமது உயிர் கடவுளால் படைக்கப்படாவிட்டாலும், நமது உடல், உலகம், உணர்வுகள், அறிவு என்பன இயற்கையின் கருவிகள். கடவுளினால் இயக்கப்படும் கருவிகள் என்றும் சொல் கின்றோம். .அந்த அழைப்பு வரும்போது மகிழ்வுடன் அந்த அழைப்பை ஏற்க வேண்டு மல்லவா!அதை எவ்வாறு ஏற்பது? மிக மிகக் கடினமான கேள்வி? நடைமுறைப்படுத்துதலும் கடினம்தான்.

நீ உழைத்துச் சேர்த்த பொருள் ஒன்றும் உன்னுடன் வரப்போவது இல்லை. அது உனக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் உன்னுடைய பேராசை உன்னை விட்டு அகலமாட்டேனென்று உன்னை, "இன்னும் சேர்த்து வை, நீ சேர்த்தவை போதாது" என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறது. நீயும் அதற்கு உடன்பட்டுப் பொருள் தேடுகிறாய். அந்தப் பொருளைப் பாதுகாக்க நீ எடுக்கும் முயற்சிகள், அந்த மாயையிலிருந்து உன்னை வெளிக்கொணர உதவுவனவாக இல்லை.. ஆனால் ஒன்று மட்டும் உண்மை; நீ சேர்த்த பொருள் உன்னுடன் வராது.

*"என் பொருள் என் பொருள் என்று*
*சீவன் விடும் மனமே ஒன்(று)*
*இயம்பக் கேளாய்*
*உன் பொருளானால்அதன்மேல்*
*உன்நாமம் வரைந்துளதோ*
*உன்ற னோடும்*
*முன்பிறந்து வளர்ந்ததுகொல்!*
*இனிஉனைவிட்(டு) அகலாதோ?*
*முதிர்ந்து நீதான்*
*பின்(பு) இறக்கும் போ(து) அதுதான்*
*கூடஇறந் திடும்கொல்லோ?*
*பேசுவாயே.*

(விவேக சிந்தாமணி)

நீ சேர்த்த பொருளானால் இயற்கையிலே அந்தப்பொருள் மீது உன் பெயர் பதிக்கப்பட்டிருக்கிறதா? முற்காலத்தில் நீ சேர்த்தது என்று கூற உன்னிடம் என்ன ஆதாரம் இருக்கிறது? ஆகவே நீ சேர்த்த பொருள் ஒன்றும் நீ இவ்வுலகை விட்டு விலகும்போதும் உன்னுடன் வரமாட்டாது.

*"செல்வத்தைப் பெற்றார் சினம்கடிந்து செவ்வியராய்ப்*
*பல்கிளையும் வாடாமல் பாத்(து) உண்டு – நல்லன*
*தானம் மறவாது தன்மையரேல் அ∴தென்பர்*
*வானகத்து வைப்ப(து) ஓர் வைப்பு"*

(விவேக சிந்தாமணி)

செல்வத்தை நிறையப் பெற்றவர்கள் சினத்தைத் தணித்து வாழவேண்டும். உறவினர்கள் துன்புறும்போது அவர்கள் கஷ்டத்தைப் பகிர்ந்து தம் பொருளைக் கொடுத்துத் தாமும் உத்தமராய் நல்ல காரியங்களைச் செய்து, அறங்கள் செய்து வாழ்ந்து வந்தால், அச் செல்வந்தர்கள் இவ்வுலகம் நீங்கும் தறுவாயில் அவர்கள் சேர்த்து வைத்த அறமாகிய சேமிப்பு அவர்களை இறைபதம் அடையச்செய்யும் என உயர்ந்தோர் சொல்வர்.

அறப்பண்புகள் என்று கூறப்படும் எண்ணத்தூய்மை, அறிவிலும் புத்தியிலும் விடாமுயற்சி,ஈகை, தன்னடக்கம், தவம், நேர்மை, சத்தியம், கோபமின்மை, பற்றற்ற தன்மை, சாந்தம், அவதூறு பேசுவதை வெறுத்தல், உயிர்களிடத்து அன்பு பூண்டு ஒழுகுதல், பெருந்தன்மை, பொறுமை, வீண் பெருமையின்மை, கபடமின்மை உள்ளவர்களாக நாம் இருக்கின்றோமா? இவை அத்தனை பண்புகளையும் உள்ளவர்களாக நாம் ஞானிகளையும் யோகிகளையும் காண்கிறோம். இவர்களெல்லாம் மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் தங்களுடையவையாக ஏற்று, அழைப்பு வரும்போது எவ்வித பயமோ, தயக்கமோ, வேதனையுமோ, சஞ்சலமோ இல்லாமல் அதை ஏற்றுக்கொண்டவர்கள்.

இந்த உலகில், நல்வினை, தீவினைகளுடன் பிறந்த நாங்கள் மேற்கூறிய அறப்பண்புகளுடன் வாழ முயன்றால், வாழ்க்கை கசக்காது, இனிக்கும்.

---

# திருவாசகம்

எனக்கு எல்லாம் நீயே ஆனாய்

*பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்து*
*பரந்ததோர் படரொளிப் பரப்பே*
*நீருறு தீயே நினைவதேல் அரிய*
*நின்மலா நின்னருள் வெள்ளைச்*
*சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே*
*திருப்பெருந்துறை உறை சிவனே*
*யாருற வெனக்கிங் காரயலுள்ளார்*
*ஆனந்தம் ஆக்குமென் சோதி!*

நிலவுலகம், சொர்க்கலோகம் என்று எல்லா உலகங்களுக்கும் எல்லாமாய்த் தோன்றிப் பரவிப் பரந்துள்ள ஒளிப்பரப்பே! நீரில் நிலவுகின்ற நெருப்பே! தீயே! உள்ளத்தில் நினைப்பதற்கியலாத குற்றமற்றவனே! உன்னுடைய அருள் வெள்ளத்தில் அமையப்பெற்ற சிறப்புமிக்க நெஞ்சத்தில் எழுந்ததோர் தேனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! பேரின்பத்தை அளிக்கும் பெருஞ்சுடரே! இந்த உலகில் யார்தான் எனக்கு உறவினர்? யார்தான் அயலவராக இருக்கின்றனர். எனக்கு எல்லாம் நீயே ஆனாய்!

## பயணக்கட்டுரை

# மாணிக்கவாசகர் - ஆவுடையார் கோயில்

-சாவகச்சேரியூர் டாக்டர் ம.கதிர்காமநாதன்-



மாணிக்கவாசகர் கடவுள்தான். போற்றத்தக்க உயர்ந்த தலை அமைச்சர் பதவி, செல்வம், செல்வாக்கு, சுகம் யாவற்றையும் துறந்து ஆண்டியானார். இதனால் இவரும் பட்டினத்து அடிகளுக்கு நிகரானவர். இதனாற்போலும் மாணிக்கவாசகரைத் தேரில் அமர்த்தி இழுத்து கடவுளாகக் கோயில் வீதி வலம் வருகின்றனர்.

மாணிக்கம் ஆகிய திருவாசகத்தை எமக்கு அருளியதால் மாணிக்கம்+ வாசகம் = மாணிக்கவாசகம் என இறைவனால் இவருக்கு பெயர் சூட்டப்பட்டது எனக்கூறுவர். அருள்வாசகர், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு. இயற்பெயர் வாதவூரர் ஆகும். மதுரையில் இருந்து ஏழு மைல்களுக்கப்பால் உள்ள வைகை நதிக்கரையிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். அந்தணர் ஆகிய இவரின் அறிவாற்றலால் மதுரையை அரசாண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னனின் மதிப்பைப் பெற்று முதலமைச்சரானார்.



"திருவாசகம் எனும் தேன்"


தேன் எத்தனை ஆண்டுகளானாலும் கெட்டுப்போகாது.. தன்னுள் விழுந்த பொருளையும் கெட விடாது. திருச்சிற்றம்பலத்தில் இருந்த தேவாரங்கள், நூல்கள் செல்லரித்து அழிந்துவிட்டன. ஆனால் திருவாசகத்தில் ஒரு வரி, ஒரு சொல்லும் அழியவில்லை. -கிருபானந்தவாரியார்.

மாணிக்கவாசகர், தானே சிவபெருமானுக்குக் கட்டிய கோயில்தான் ஆவுடையார் கோயில் எனப்படும் திருப்பெருந்துறைத் திருக்கோயில் ஆகும். நாங்கள் மாணிக்கவாசகரின் திருப்பெருந்துறைக்கு செல்ல வேண்டுமென்ற ஆவல் 07-12-2013 அன்றுதான் பூர்த்தியாகியது.

**திருப்பெருந்துறை**: உயிர்கள் முத்தி பெறுவதற்கு பிறவிக்கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாய் – பெருந்துறையாக விளங்கும் தலம் ஆதலால் பெருந்துறை எனப் பெயர் பெற்று திருப்பெருந்துறை ஆகியது. அதிசயம் என்னவென்றால் எங்கே திருப்பெருந்துறை கோயில் என வினவ ஒருவருக்கும் தெரியவில்லை. இறுதியில் ஒரு முதியவர் கூறினார். இது ஆவுடையார் கோயில் எனத் தற்போது பெயர் பெற்றுள்ளது என்று!

ஆவுடையார் கோயிலே ஊரின் பெயராகிவிட்டது. சிவபெருமான் அருவமாக சித்தத்தைச் சிவமாக்கும் சித்தியைச் செய்தருளுகிறார். சுவாமி ஆத்மலிங்க வடிவம். -அருவநியைில் ஆவுடையார்–நம்மை ஆளுடையார். சதுர பீடத்தில் ஒரு மேடை மேல் உருவமில்லாதிருப்பதால் ஆவுடையார் கோயில். இக் கோயிலுக்கு அனாதி மூர்த்தித்தலம், ஆதிகயிலாயம், உபதேசத்தலம், குருந்த வனம், சதுர்வேதபுரம், சதுர்வேதமங்கலம், ஞானபுரம், சிவபுரம், திருமூர்த்திபுரம், தட்சணகயிலாயம், யோகவனம் எனப் பெயர்கள் உண்டு.

ஏழு நிலைகளைக் கொண்ட இராசகோபுரம். தெற்குவாசல். வாசலை அடைந்தவுடன் ஒரு சிவாசாரியார் முன்வந்து தன்னை அறிமுகப்படுத்தினார். பின்னர் கோவிலைச் சுற்றிக்காட்டுவேன் எனக்கூறும்போது எமது வயதையொத்த ஒரு தம்பதிகளும் சேர்ந்தனர். அவர்களோடு சென்றோம்.



முப்பத்திரண்டு சிறப்புகளைக் கொண்டது இக்கோவிலாகும். எமை முதலில் ஓரிடத்திற்கு அழைத்துச்சென்று ஓரே பார்வையில் கோபுரத்தையும், கருவறையையும் காணும்படி காட்டினார். மேலே பார்க்கும்படி கூறினார். அங்கு ஒரு

குரங்கு (கீழ் நோக்கியவாறு), ஒரு உடும்பு (மேல் நோக்கியவாறு)ம் செதுக்கப்பட்டிருந்ததை கண்டோம். இதை அவர் அலைபாயும் குரங்கு மனதை அடக்கி, ஆத்மநாதரின் திருவடியில் உடும்புப்பிடிபோல் நிறுத்தி சிக்கெனப் பிடித்து உய்வு பெற வேண்டும் என்ற தத்துவம் எனக் கூறினார்.

இறைவன் - ஆத்மநாதர், குருசுவாமி, பரமசுவாமி

இறைவி - யோகாம்பாள்

தலமரம் - குருந்தமரம்

தீர்த்தம் - அக்னித்தீர்த்தம் .

ஒரு கோயிலுக்குச் சென்றால் முதலில் தரிசிக்கத் தீர்த்தக்கரை செல்லல் வேண்டுமெனக் கூறி கேணியைக் காட்டினார். அங்கு நீரை எடுத்து எமது தலையில் தெளித்தோம். அப்போது நேரம் 5.30 மணி. கோவில் மணி கேட்டது. பூசை ஆரம்பம் எனக்கூறிக் கோயிலுக்குப் பின்னால் உள்ள குருந்த மரத்தடிக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நாம் சென்ற நேரம்தான் பூசையும் ஆரம்பித்தது.

கல்லினால் செய்த குருந்த மரம். இறைவன் மரத்தின் கீழே குரு வடிவில் அமர்ந்திருக்க மாணிக்கவாசகர் உபதேசம் செய்யும் காட்சி. பூசை செய்யும் நம்பியார் (இங்கு பூசகரை நம்பியார் என அழைப்பர்) மரத்திற்கு நீராட்டி, பொட்டு வைத்து மந்திரங்களைக் கூறி ஆராதனை செய்தார். குதிரைகள் வாங்க பணத்துடன் சென்ற மாணிக்கவாசகர் சிவபெருமானை குருவடிவாக இவ்விடத்தில் கண்டு ஈர்க்கப்பட்டு “ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமான்” என அவரடியில் வீழ்ந்தார். மாணிக்கவாசகரின் தலையில் திருவடி சூட்டி, அருட்கண்ணாலே நோக்கி உபதேசித்தார். இறையருள் பெற்ற மாணிக்கவாசகர், கொண்டு சென்ற பணத்தால் இறைவனுக்கு கோயில் கட்டினார். இக்கோயில் தற்போதும் கருவறையோடு மாத்திரம் இருக்கிறது. மிகுதிக் கட்டிடங்கள் பின்னரே கட்டப்பட்டன. இப்புனித இடத்தில் நாமும் நிற்கிறோமே என எண்ணிய போது மனம் நெகிழ்ந்தது, புல்லரித்தது!

பின்னர் மூலவருக்குப் பூசை. ஒரு மேடையைத்தான் அங்கு கண்டோம். மேடையை “ஆவுடை” எனக்கூறுவர். அதுதான் ஆவுடையார் கோயிலாகியது. தங்கக் குவளையொன்று ஆவுடையாருக்கு மேலே இருக்கிறது. பின் புறத்தே 27 நட்சத்திரங்களைக் கொண்ட திருவாசி உள்ளது. இதற்கு மேலே மூன்று விளக்குகளைக் கண்டோம். சிகப்பு விளக்கு அக்கினியையும், வெண்மை சூரியனையும், பச்சை விளக்கு சந்திரனையும் குறிக்கும் என சிவாசாரியார் கூறினார். கருவறைக்கு முன்னே சிவன் கோயிலிலே காணக்கூடிய நந்தி, கொடிமரம், பலிபீடம் இல்லை. தெற்கே இருக்கும் தட்சணாமூர்த்தியும் கிடையாது!.

அடுத்ததாக அம்பாளுக்குப் பூசை. யோகாம்பாளுக்கும் உருவம் இல்லை. தெற்கு நோக்கிய அம்பாள், 100 இதழ்கள் கொண்ட பத்மபீடத்தில் (தாமரை இதழ்கள்) இருந்து கொண்டு அருள்பாலிக்கின்றாள். நாங்கள் கல் யன்னல் வழியாக, சிறு சதுரங்கள் ஊடாக தீபம் காட்டும்போது பார்த்தோம். அதேசமயம் கிழக்கு நோக்கி அம்மனுக்கு எதிராக இருந்த மாணிக்கவாசகருக்கும் தீபம் காட்டினார்! என்னே புதுமை! ஒரே நேரத்தில் இரு தீப தரிசனங்கள்!

மாணிக்கவாசகருக்கு அம்பாளைப்போன்று தனிக்கோயில் உண்டு. நின்ற கோலத்தில் குரு அம்சமாக இருக்கிறார். உருத்திராட்சமாலை அணிந்து செபமாலையுடன் சின்முத்திரை காட்டி காட்சியளிக்கிறார். ஒவ்வொரு தமிழ் மாதமும், மக நட்சத்திரத்தில் சிறப்பு பூசை நடக்கிறது. மாணிக்கவாசகரைத் தரிசித்த பின்னர்தான் மூலவரை வணங்கச் செல்ல வேண்டும் என்பது இக்கோயில் மரபு.

‘அண்டரண்டபட்சி’, அன்றில் பறவை ஓவியம். இப்பறவை இரண்டு யானைகளைத் தாக்குமளவிற்கு சக்தியுடையது. இத்தோற்றத்தைக் கண்டோம்.

இதன் பின்னர் தூண்களில் பல குதிரைகளையும் அவைகளுக்கேற்ற சாரதிகளையும்

கண்டோம். அவை, மராட்டியம், கிரேக்கம், எகிப்து, கேரளாவைச் சேர்ந்தவையாகும். சகல இலட்சணங்களை உடையனவாகவும், கடிவாளங்கள் வித்தியாசனமானவையாகவும், சாரதிகளின் தலையணி,முகம், மீசை யாவும் தேகத்திற்கேற்ப வேறுபட்டும் காணப்பட்டன.

ஆயிரங்கால் மண்டபத் தூண்களை ஒரேதூணில் வடித்திருந்தனர். நடன மாது, யோகாசனத்தில் வரும் விதவிதமான தோற்றங்கள் என யாவையும் அப்படியே கல்லில் வடித்திருந்தனர். குறவன், குறத்தி இதில் இவர்களின் கைரேகை கூடத் துல்லியமாகத் தெரிகிறது. முத்துவினாயகர் மண்டப வீதியில் தொங்கும் கற்சங்கிலிகள் உண்மையான சங்கிலிபோல் தோற்றமளித்தன. ஒரே கல்லில் இப்படி வடித்தது அதிசயத்திலும் அதிசயம். இன்னும் பலவிதமாக இக்கோயிலின் சிறப்புகள் காட்டி, விபரித்து ஆசிரியர் போன்று கூறி இறுதியில் சப்தஸ்வரக் கற்கள் கொண்ட தூண்களைக் காட்டி, விதவிதமான ஓசைகளைத் வரவழைத்தார்.



“யாவருக்கும் திருப்தி தானே”? எனக் கேட்டு, இச் சிவாசாரியார் எம் - நால்வரையும் கோயிலின் பின் பக்கம் அழைத்து இருக்கும்படி கூறினர். கேள்வி நேரம் வந்தது. தகுந்த பதில் கூறினார். ஈற்றில் எம்மைத் தன்னைத் தொடர்ந்து பாடும்படி கேட்டு ‘நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க’ என்று பாடினார். நாமும் பாடினோம். மாணிக்கவாசகர் உபதேசித்தது போன்று எமக்கு இச்சிவாசாரியார், சிவனாய், அரனாகி உபசரித்து உதவினார்.

ஆவுடையார் கோயில். வனம், தலம், புரம், தீர்த்தம், மூர்த்தி, தொண்டர் எனும் ஆறு சிறப்புகளையுடையது. 1) வனம் - குருந்தவனம் 2) தலம் - தீர்த்த தலம் 3) புரம் - சிவபுரம் 4) தீர்த்தம் - பொய்கை 5) மூர்த்தி - ஆத்மநாதர் 6) தொண்டர் – மாணிக்கவாசகர். புழுங்கல் அரிசி நிவேதனம். ஆறு கால பூஜை கொண்ட இக்கோயில் புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கி என்னும் இடத்திற்கு பக்கத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து புறக்கோட்டை – அறந்தாங்கி வழியாகவும், தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை - அறந்தாங்கி வழியாகவும் அடையலாம். நாங்கள் தஞ்சாவூரிலிருந்து சென்றோம்.

கலசம் இதழ் எதை எடுத்தாலும் மாணிக்கவாசகரைப் பற்றியோ அல்லது அவரது நூல்களைப் பற்றியோ ஒரு கட்டுரை இருக்கும். இதேபோன்றுதான் ஏனைய ஆன்மீக பத்திரிகைகளும், சஞ்சிகைகளும். ஆனால் மாணிக்கவாசகர் கட்டிய இக்கோவிலைத் தரிசித்தவர்களை விரல்விட்டு எண்ணலாம். சென்று பார்த்துத் தரிசித்தால் இக்கோயிலின் சிறப்புகளை நன்கு அறியலாம்.

**17-12-2013**:- செவ்வாய்க்கிழமை, திருவாதிரை, ஆருத்ராதரிசனம் நாள். மூலவர் நடராஜர் ஆயிரங்கால் மண்டபத்தில் விற்றிருந்தார். மாணிக்கவாசகரின் உருவம் காவிக்கொண்டு வரப்பட்டு அவரின் முன்னால் நிற்பாட்டப்பட்டது. நாங்கள் மண்டபத்திற்கு வெளியேதான் நிற்க முடிந்தது. பக்திப் பரவசமாகத் திருவெம்பாவை பாடப்பட்டது. நிறைவில் முடிந்ததும் மாணிக்கவாசகருக்குக் கற்பூரத்தீபம் காட்டப்பட்டது. இது அவர் இருப்பிடத்திற்குத் திரும்பும் நேரமாகும். அப்போது மழை தூவியது. நாமும் உணர்ந்தோம். வியந்தோம். இறைவன் இருக்கிறார் என்பதைக் கண்டோம். காதலினால் அழுது அழுது அரனை அடைந்தவர் அல்லவா?.


# தமிழில் பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு

ஆக்கம் - சைவப்புலவர் க.சிவானந்தன்.

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாகவே இடையறாத தொடர்ச்சியுடன் நீண்டு செல்கின்ற தமிழிலக்கிய வரலாற்றிலே பக்தியிலக்கியம் தோன்றிய வரலாற்றை இக்கட்டுரையில் மிகச்சுருக்கமாக எடுத்துரைக்க முனைகின்றேன்.

**சங்ககாலம் கி.மு 500 - கி.பி 100**


இன்று நாம் சங்ககாலம் என்ற பெயரினால் கி.மு.500 தொடங்கி கி.பி.100வரையுள்ள காலப்பகுதியையே பெருமளவுக்குக் குறிப்பிடுகின்றோம். இக்காலப்பகுதியில் சமயங்கள் தமிழ் மக்கள் வாழ்விலே பெருமளவு செல்வாக்குச் செலுத்தவில்லை என்றே நாம் கருத வேண்டியுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் திணைத்தெய்வங்களைத்தவிர,நடுகல் வணக்கம் பரவலாகக் கைக்கொள்ளப்பட்டுள்ளது. சேர சோழ பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் தமிழ் மண்டலம் முழுவதையுமே ஆண்டார்கள். புலவர்களோடும் மக்களோடும் தமிழ் மன்னர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை பாடல்களிலே தெளிவாகப் புலனாகிறது. வடமொழியின் தாக்கம் மிகச்சிறிய அளவிலேயே ஏற்பட்டிருக்கிறது.



சங்க இலக்கியங்கள் பல எழுந்தன என நூல்கள் வாயிலாக அறியக் கிடந்தபோதிலும் காலவெள்ளத்தினால் அள்ளுண்டு போனவை தவிர இன்று எமக்கு கிடைப்பவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் எனவும் பெயர்பெறுகின்ற பதினெண்மேற்கணக்கு நூல்கள் மட்டிலுமேயாம். இந்நூல்களில் சில சங்க காலத்திற்குப் பிந்தைய காலத்தவை எனக் கருதுவோருமுளர். இந்நூல்கள் அனைத்துமே அகம், புறம், எனும் இரண்டு பிரிவுகளுக்குள் அடங்கியிருக்கக் காண்கிறோம். காதலும் வீரமும் கொடையுமே பிரதானமான பண்புகளாகப் போற்றப்பட்டுள்ளன. இந்நூல்கள் அகவல், கலிப்பா, பரிபாடல் எனும் செய்யுள் வகைகளில் இயற்றப்பட்ட இலக்கியங்களாகும். இயற்கை பற்றி வர்ணனைகள் கொண்ட அழகான பாடல்கள் காணப்பட்ட போதிலும் தனித்து இயற்கையை மட்டிலுமே பாடும் நோக்கில் பாடல்கள் எவையும் எழவில்லை. மதுவும் இறைச்சியும் உண்டுகளித்து உலகியல் இன்பங்களையே பிரதானமாகக் கொண்டு தமிழர் வாழ்வியல் இயங்கியது எனும் கருத்தை மறுப்பதற்கும் சங்க இலக்கியங்களில் வலுவான ஆதாரங்கள் எதுவுமில்லை. ஆனால் மக்கள் வாழ்வு உயர்ந்த பண்புகளையுடையதாக விளங்கியுள்ளது என்பதனைப் பலமான சான்றாதாரங்களால் நன்கறியக் கூடியதாயுள்ளது.

சங்க இலக்கியங்களிலே பத்துப் பாட்டில் முதலாவதாக வைத்தெண்ணப்படுவது நக்கீரர் என்னும் பெரும் புலவர் இயற்றிய திருமுருகாற்றுப்படை எனப்படும் புறத்திணைப் பாடலாகும். 317அடிகளைக் கொண்ட இப்பாடல் நூல் மட்டிலுமே சங்க காலத்தெழுந்த முழுமையான பக்திநூல் எனும் பெருமைக்குரித்தாகின்றது. (இந்நூல் சங்க மருவிய காலத்தைச் சேர்ந்தது எனக்கருதும் ஆராய்ச்சியாளர்களும் உள்ளனர்.) எட்டுத்தொகையில் அடங்கும் பரிபாடல் எனும் புறத்திணை நூலிலே திருமாலையும் முருகனையும் பாடும் பாடல்கள் உள்ளன. 70பாடல்களைக் கொண்ட இந்நூலில் 22பாடல்கள் மட்டிலுமே இப்போது கிடைக்கப் பெற்றுள்ளன.

**சங்கமருவியகாலம் கி.பி 100 – கி.பி 500**



கி.பி150ம் ஆண்டு தொடக்கம் தமிழ் அரசுகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழ் மன்னர்கள் கையை விட்டுக் களப்பிரர் எனும் வெளிநாட்டாரிடம் பறிபோன பரிதாபம் நேரத்தொடங்கியது. நாட்டு மக்களுடைய இயல்பான இன்பியல் வாழ்வு நெறிகளுக்கும் குந்தகம் வந்து சேர்ந்தது. மக்களை வழி நடத்தும் பொறுப்பினை ஏற்றிருந்த புலவர்கள் சமுதாயத்தில் வாழவேண்டிய நெறிகளையும் போற்ற

வேண்டிய நீதிகளையும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டி பல்வேறு நீதிநூல்களை இயற்றினார்கள். இக்காலத்தெழுந்த பதினெட்டு நூல்களின் தொகுதி பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றது. இவற்றில் பெருபான்மையானவை நீதிநூல்களாகையால் இக்காலப்பகுதி நீதிநூல் காலம் எனவும் அழைக்கப்படும்.

தமிழ் மக்களின் சமய வாழ்விலும் நம்பிக்கைகளிலும் பாரியமாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இவ்வுலக இன்பங்களையும் இல்வாழ்வையும் கடிந்து கூறும் சமயங்களாகிய சமண, புத்த, சமயங்கள் மன்னர்களுடைய அபிமானத்தையும் மக்களுடைய ஆதரவையும் பெற்று வேகமாக வளரத்தொடங்கின. வைதீக சமயங்களுக்கும் அவைதீக சமயங்களுக்கும் இடையிலே ஏற்பட்ட போட்டியிலே முதல் மூன்று நூற்றாண்டுகளிலே சமண சமயமே பெருவெற்றியீட்டி பெரும்பாலானோரால் ஏற்கப்பட்ட சமயமாக நிலைகொண்டது. சாதாரண மக்களுடைய வாழ்வியலிலே மறுபிறப்பையும் ஊழ்வினையையும் குறித்து ஆழமான நம்பிக்கை வளர்வதற்கு மூலகாரணமானவை இவ்விரு அவைதீக சமயங்களே எனக்கொள்வதற்கு இக்காலத்தெழுந்த சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நீதிநூல்களே போதுமான சான்றுகளாகும்.

இந்நூல்களைத் தவிரவும் சங்கம்மருவிய இக்காலத்தில் இரட்டைக்காப்பியம் என அழைக்கப்படும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இயற்றப்பெற்றுத் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தன. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரமன்னர் குலத்திலே பிறந்து இகவாழ்வு துறந்து தவவாழ்வு ஏற்ற சமணமுனிவராவார். ஆயினும் மற்றச் சமயங்களிலே எதுவிதமான காழ்ப்புணர்வுமில்லாது அச்சமயங்கள் பற்றி வர்ணிக்கும் பரந்த மனப்பான்மையுடையவராக விளங்கினார். பின்னாளில் தென்னாடுடைய சிவன் என்று போற்றி வணங்கப்படப் போகின்ற சிவபெருமான் இக்கால நூல்களிலே நீலமணிமிடற்றனெனவும், ஆலமர் கடவுள் எனவும் குறிக்கப் பெறுகின்றார். சிலப்பதிகாரக் காலத்திலேயும் கூடச் சிவன் என்ற சொல்லும் சைவம் என்ற சொல்லும் தமிழ் மொழியிலே வழங்கப் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி 500-600ல் தமிழகத்தின் சமய அரசியல் நிலைகள் மீட்டும் மாற்றம் பெறுகின்றன. வரப்போகின்ற வைதீக சமயத்தின் எழுச்சியின் உதயதாரகையாக வைணவத்திற்கு முதலாழ்வார்கள் மூவரும் சைவத்திற்குக் காரைக்காலம்மையாரும் தோன்றுகிறார்கள். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அடுத்த நான்கு நூற்றாண்டுகளுக்குக் கரைபுரண்டு பெருக்கெடுக்கவிருக்கும் சைவப் பக்தியிலக்கியப் பெருவெள்ளப் பிரவாகத்தின் ஊற்றுக்கண்கள் காரைக்காலம்மையாரின் அற்புதப் படைப்புகளே. எண்ணிக்கையில் அதிகமில்லாவிடினும் சொல் நயத்திலும் உணர்வு வெளிப்பாட்டிலும் தமக்கெனத் தனியிடம் பெற்றுள்ள பாடல்களை அம்மையார் வெண்பாயாப்பில் மட்டுமின்றிக் கட்டளைக் கலித்துறையிலும், விருத்தப்பாவிலும், வடித்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய மரபையே தோற்றுவிக்கின்றார். வைணவத்தமிழில் முதல் பாடல்கள் பரிபாடலில் காணப்படுகின்றன. எனினும் முழுமையான பக்திப்பாசுரங்களால் மக்கள் மனத்தையீர்த்து பின்வரும் ஆழ்வார்களுக்கு வழிகாட்டிய முன்னோடிகள் முதலாழ்வார்கள் மூவருமே ஆவர். இவர்கள் பாடல்களனைத்தும் வெண்பா யாப்பில் சித்தரிக்கப்பட்டுள்ளன. திருமாலின் அழகிலும் குணங்களிலும் ஈாப்புண்டு ஆழங்கால்பட்டுத் தமது அனுபவத்தையெல்லாம் இன்பத்தமிழில் வாரிவழங்கும் இப்பெரியார்கள் வைணவத்திற்கு மட்டுமின்றித் தமிழ் இலக்கியத்திற்கும் இணையில்லாப் பெருஞ் சேவையாற்றியவர்களாவர். சங்கம்மருவிய காலப்பகுதியிலேயே வித்தகச்சித்தர் என்னும் பெருமைக்குரியவரான திருமூலதேவநாயனார் அருளிய பெரும் பொக்கிசமான திருமந்திரம் எழுந்ததாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 800-900ஆண்டுகளின் பின்னால் தோன்றப் போகின்ற தமிழின் தலைசிறந்த தத்துவமாகி சைவசித்தாந்தத்தின் கருத்துக்கள் பலவற்றையும் தன்னுள் அடக்கிய இந்நூல் ஓர் சித்தாந்தக் கருவூலமாகும். புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்டதாயும் எளிமையான தமிழ் நடையில் யோக நெறிகளை விபரித்துச் செல்வதாயும் உள்ள இந்த நூல் தமிழுக்குக் கிடைத்த ஒப்பற்ற ஓர் ஞானவிளக்கு. இக்காலம் வடமொழியின் தாக்கம் மிகப்பாரியளவில் ஏற்பட்ட காலம். மொழியின் இறுக்கமான நடை தளர்ந்து நெகிழ்வான போக்கு முகிழ்க்கத் தொடங்கிய காலம். வெண்பா யாப்பின் செழுமை முழுமையாக விளங்கித் தழைக்கத் தொடங்கிய காலம். பல்லவர்களும் பாண்டியர்களும் அன்னியர்களை விரட்டி ஆட்சியைக் கைப்பற்றிக் கலைகளை வளர்க்கத் தொடங்கிய நிகழ்வுகள் ஆரம்பித்த காலம். பல்வேறு இலக்கிய மரபுகளை வரப்போகின்ற பக்தியிலக்கிய காலத்திற்களித்து புராதன மரபுகளோடு தன்னையும் ஓர் முடிவிற்குக் கொணர்ந்த சங்க மருவிய காலத்திற்கு விடைகொடுத்து பக்தியிலக்கிய காலமாம் பல்லவர் காலத்திற்குள் நுழைவோம்.

## பக்தி இலக்கியம் கி.பி 600 – 900

தெய்வீக மொழியாம் தமிழ்மொழியிலே சங்க காலம், நீதி நூல்காலம், பக்திநெறிக்காலம், காப்பிய காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், நவீன காலம் என்று பகுக்கப்படுகின்ற வரலாற்றுக் காலங்களிலே பக்தி இலக்கிய காலம் மிக முக்கியமானதொன்றாகும். காதலும் வீரமும் கொடைப்பண்பும் போற்றப்பட்டு வந்த சமுதாயத்திலே நீதிநூல் காலத்தில் அறம் முக்கியமான இடத்தைப் பெறத்தொடங்கியது இதைத்தொடர்ந்து வந்த பக்தி நெறிக்காலத்திலே பக்தி கரைபுரண்டோடத் தொடங்கியது இயற்கை அழகினையும் பருவகால மாற்றங்களையும் காதல் உணர்வுகளையும் வீரயுகத்தின் வன்முறைச் சாகசங்களையும் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்ற தமிழ் மொழிக்குப் பக்தி எனும் புதிய ரசத்தினை கையாளும் ஆற்றல் எவ்வாறு பிறந்து வளர்ந்தது என்பது ஆராய்ச்சிக்குரிய ஓர் விடயமாகும்.

எளிமையான தமிழிலே எல்லோர்க்கும் விளங்கும் படியான அழகு ஒழுகும் கவிதை வடிவங்களிலே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தந்த பதிகங்களும் பாசுரங்களும் தமிழ் மொழிக்கு அதுவரையில் இல்லாத மென்மையையும் இனிமையையும் தந்தன. புதிய வடிவங்களைப் பக்தி இலக்கியங்கள் வழங்கவில்லை எனினும் புதிய நோக்குகளை தமிழ் கவிதை இலக்கியம் பெறத்தொடங்கிற்று எனலாம். சமுதாயத்திலும் இக்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களும் குறிப்பிடத்தக்கவை. அரசன் பெற்ற இடத்தை ஆண்டவனும் அரண்மனைகள் பெற்ற இடத்தை ஆலயங்களும் பெறத்தொடங்கின. தனியாணை செலுத்திய அரசர்கள் தமதாணை தாழ்ந்தகலவும் இறையாணை ஏற்றமுறவும் கண்டார்கள். நால்வகைச் சேனைகளையுமுடைய நிலமாளும் வேந்தனை நோக்கி இடையிலே முண்டுத் துணியணிந்த நிற்க நிலமில்லாத ஒரு அடியார் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று பறையறைந்த வரலாறு தொடக்கம் பெறுகிறது. கங்கை முதல் குமரிவரை வாழ்ந்த வேறு வேறு மொழியினரையும் இனத்தினரையும் ஒன்றிணைக்கும் ஓர் கலாச்சார இழை தமிழகத்திலே ஆழமாக வேரூன்றி வளரத்தொடங்கிற்று. தமிழகம் எங்கும் பிரமாண்டமான கற்கோவில்கள் தோற்றம் பெறத்தொடங்கின. அவற்றோடு இசைக்கலைகள் சிற்பசித்திரக் கலைகள், ஓவியக்கலைகள், நாட்டியக்கலைகள், நாடகக்கலைகள் என்பனவும் பெரு வேகத்தோடு வளரலாயின.



கல்லிலே கலைவண்ணம் கண்ட பல்லவர்களே இதற்கு வித்திட்டார்கள் என்பதற்கு ஓர் ஐயமும் இல்லை. வடமொழியின் தாக்கமும் விரிவடைந்து தமிழ்மொழி புதியதோர் போக்கிலே வளரத் தொடங்கியது. சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தமது பரிவாரங்களுடன் கோயில் கோயிலாகச்சென்று தேவாரங்கள் பாடினர். பக்திவெள்ளம் கரைபுரண்டு பிரவாகித்தது. இருநாயன்மார்களும் தந்த ஏழாயிரத்திற்கும் அதிகமான தேவார்ங்கள் இன்றளவும் இசையோடு பாடப்பட்டு வருகின்றன. சம்பந்தர் இயற்கையழகில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர் என்பதை அவரது தேவாரங்களே புலப்படுத்தும். குறிப்பாக திருவையாறு எனும் தலைப்பில் பாடிய பாடல் சம்பந்தர் பெருமானின் கவித்திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். தொடர்ந்து வந்த நூற்றாண்டிலே சுந்தரமூர்த்திநாயனாரும் இதே போலவே கவிச்சுவைததும்பும் ஆயிரம் தேவாரப்பாடல்களைத் தந்துள்ளார்.

நாயன்மார்கள் மூவரும் பெரும்பாலும் கையாண்ட பாவகை விருத்தப்பா ஆகும். அழகிய தமிழ்நடையில் இசையோடு பாடக்கூடிய பாடல்களாகையால் இன்றளவும் மக்கள் இவற்றை அன்போடு பேணி பயின்று பராமரித்து வருகின்றார்கள். இதற்கு அடுத்த நூற்றாண்டிலே மாணிக்கவாசகர் தோன்றி திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பாடியருளினார். திருக்கோவையார் சங்க இலக்கிய மரபையொட்டிய காதல் துறைகள் அமைந்த நானூறு பாடல்களைக்கொண்டது. இளம்பெண்கள் பாடியாடும் போது அவர்களது விளையாட்டடில் உபயோகிக்கின்ற பாடல்வடிவங்கள் பலவற்றையும் பாவைப்பாட்டையும் மணிவாசகர் உபயோகித்து நெஞ்சையள்ளும் பக்திப்பாடல்களைத் தமிழிலே வடித்திருக்கின்றார். தமிழிலக்கியம் இந்நான்கு நாயன்மார்களாலே இணையற்ற ஒன்பதினாயிரம் இசைப்பாடல்களைப் பெற்றது.

சைவசமயத்திற்கு சம்பந்தரும் அப்பரும் ஆற்றிய பணியை வைணவத்திற்கு முதலாழ்வார்கள் ஆற்றினர். தொடர்ந்து சைவத்திற்கு மணிவாசகர் ஆற்றிய பணியை வைணவத்துக்கு ஆண்டாள்

ஆற்றினாள். ஆண்டாள் கண்ணனை நினைந்து ஏங்கி காதலால் கசிந்துருகிப் பாடிய பாடல்கள் தமிழ் பக்தியிலக்கியத்திலே தனியிடம் பெறுகின்றன. பெண்மையின் நுண்ணுர்வுகளை யெல்லாம் எழிலுறப் புலப்படுத்தி ஆண்டாள் வடித்த சொற்சித்திரங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் படிப்போரைப் பிரமிப்பில் ஆழ்த்தும் வல்லமையைக் கொண்டுள்ளன. ஆழ்வார்கள் அனைவரும் பாடிய பாடல்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனும் நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

பல்லவர் காலம் என்று அழைக்கப்படும் இக்காலம் பக்திநெறிக்கு மட்டுமல்லாது தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழிலக்கியத்தின் நீட்சிக்கும் ஆற்றிய பங்கு மகத்தானது. பக்திகொண்ட நெஞ்சங்களைப் பரவசப்படுத்தும் இப்பாடல்கள் இலக்கியப் பிரியர்களுக்கும் இன்சுவை விருந்தாக திகழ்கின்றன. இப்பெரும் பக்தியிலக்கியச் செல்வம் போல் வேறு எந்தவொரு மொழியிலும் இத்துணையழகும் நுட்பமும் நயமும் பொருந்திய பக்தியிலக்கியச் செல்வத்தைக் காணமுடியாதென்றே கூறலாம்.

---

# விவேகானந்தரின் சிந்தனையிலிருந்து....

ஆன்மிக குரு



ஒவ்வொரு ஆன்மாவும் பூரணத்துவத்தை எய்த வேண்டும் என்பதே நியதி. ஒவ்வோர் உயிரும் கடைசியில் அந்த நிலையை அடைந்தே தீரும். நாம் இப்பொழுது உள்ள நிலை நாம் முன்னர் இருந்த அல்லது நினைத்த எண்ணங்களின் விளைவேயாகும். எதிர்காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்பது, இபபோது நாம் செய்யும் காரியங்களையும் எண்ணும் எண்ணங்களையும் பொறுத்தது. ஆனால் இது நாம் வெளியில் இருந்து உதவி பெறுவதைத் தடுக்கவில்லை.

ஆன்மாவின் வளர்ச்சி எப்பொழுதும் புற உதவியினால் துரிதமடைகிறது. ஆகவே இவ்வுலகில் பெரும்பாலானோர் விடயங்களில் புற உதவி இன்றியமையாததாய் இருக்கிறது. துரிதப்படுத்தும் தூண்டுதல்கள் வெளியிலிருந்து வருகின்றன. அவை நம்மிடமுள்ள திறமைகளைத் தூண்டிவிட நம்மிடம் வளர்ச்சி தொடங்குகிறது. ஆன்மிக வாழ்வு பிறக்கிறது. கடைசியில் மனிதன் புனிதமடைகிறான். பூரணத்துவம் எய்துகிறான்.

வெளியிலிருந்து வரும் இந்த துரிதப்படுத்தும் தூண்டுதல் நூல்களில் இருந்து கிடைக்காது. மற்றொரு ஆன்மாவிலிருந்துதான் ஓர் ஆன்மாவிற்கு தூண்டுதல் கிடைக்கும். மற்ற எதிலிருந்தும் அல்ல. வாழ்க்கை முழுவதும் நாம் நல்ல நூல்களைப் படிக்கலாம். நாம் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவர்களாகத் திகழலாம். ஆனால் கடைசியில் ஆன்மிகத்தில் எவ்வித வளர்ச்சியும் அடையவில்லை என்பதைக் காண்போம். மதிநுட்ப வளர்ச்சி இருந்தால், ஒருவனுக்க ஆன்மிக வளர்ச்சியும் இருக்கும் என்று ஒருபோதும் சொல்லிவிட முடியாது. அதற்கு மாறாக, மதிநுட்பம் அடைந்ததன் காரணமாக ஆன்மாவின் வளர்ச்சி தடைப்பட்டு விட்டதைத் தினந்தோறும் பார்க்கிறோம்.

# இறப்பும் பிறப்பும்

-வழக்கறிஞர் திரு. செ. சிறீக்கந்தராசா-

இறப்பு என்றும் பிறப்பு என்றும் வேறு பிரித்துப் பார்க்கின்றோம். ஒன்று மற்றதன் தொடர்ச்சி என்று எண்ணிப் பார்ப்பதில்லை. இரவு என்றும் பகல் என்றும் பகுத்துப் பார்க்கும் பழக்கம் சூரியனுக்கு இல்லை. பூமி என்ற மாயைக்குள் இருக்கும் நாங்கள்தாம், பகல் என்றும் இரவு என்றும் பிரித்துப் பாக்கின்றோம். அப்படித்தான், உயிருக்கும் பிறப்பு என்ற பேதமோ இறப்பு என்ற பேதமோ கிடையாது. உடம்பு என்ற மறைப்புக்குள் இருக்கின்ற மனம்தான் அப்படி, இறப்பு என்றும் பிறப்பு என்றும் பிழையாக நினைக்கிறது. இப்படி நினைக்கின்ற நினைப்புப் பிழை என்பதை நினைவூட்டுவதற் காகவே வள்ளுவன் ஒரு குறளை எழுதினான்.

*"உறங்குவதுபோலும் சாக்காடு*
*உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு"*



என்று அவன் ஓதினான். விழிப்பு எப்படி உறக்கத்தைத் தொடர்கிறதோ, அவ்வாறே உறக்கமும் விழிப்பைத் தொடர்ந்து வருகின்றது. சாக்காடு என்பது உறக்கம் போன்ற ஒன்றுதான். பிறப்பு என்பதும் விழிப்புப் போன்ற ஒன்றுதான்; ஒன்று மற்றதன் தொடர்ச்சியேயொழிய, அங்கே இடையீடு எதுவும் கிடையாது என்றான். அதாவது சூரியன் எப்படி உதிப்பதும் இல்லைப் படுவதும் இல்லையோ, அப்படியே உயிரும் இறப்பதும் இல்லை, பிறப்பதும் இல்லை, அது நித்தியமாகவே என்றும் அழியாமல் இருக்கிறது என்றான் வள்ளுவன்.

உயிரின் இயல்பை உணராமல் இருக்கின்ற நமக்கு வழிகாட்டும் வண்ணம், இன்னொரு குறளையும் வள்ளுவன் எழுதிக்காட்டினான். இந்த உடம்புக்கும் உயிருக்கும் இடையிலே இருக்கின்ற உறவு எப்படிப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா என்று வள்ளுவன் நம் முன்னோரைக் கேட்டான். அவர்கள் மறுமொழி சொல்ல முடியாமல் மயங்கினார்கள். அவர்களின் மயக்கம் தெளியுமாறு அவன் ஒரு குறட்பாட்டில் மறுமொழி சொன்னான். தன்னுடைய பரிணாமவளர்ச்சியின் ஒரு படியைத் தாண்டுவதற்காகப் பறவையின் உயிர், முட்டை என்ற உடலுக்குள் சிலகாலம் வந்து கிடந்தது. அந்தக் கட்டத்தை வெற்றிகரமாகவோ வெற்றியில்லாமலோ கடந்தவுடனும், பறவைக்குஞ்சு கூட்டைவிட்டுப் பறந்துபோவது போன்றதுதான் உடலுக்கும் உயிருக்கும் இடையிலான உறவு என்றான். அதாவது **"குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"** என்று அவன் விளக்கினான். அதாவது, பிறப்பின் மூலம் நாம் எடுக்கின்ற உடம்பு, ஒரு தரிப்பிடமேயொழிய, வசிப்பிடம் அன்று என்று அவன் விளக்கினான்.

**"வினைதான் ஒழிந்தால் தினையளவும் நில்லாது உயிர்"** என்றார்கள் பெரியவர்கள். என்றோ ஒருநாள் சாகப்போகின்ற நாங்கள், செத்துப்போனார் என்று நாங்கள் பிழையாக நம்புகின்ற ஒருவருக்கு நடத்துகின்ற வழியனுப்பு நிகழ்ச்சிக்கு மரணச்சடங்கு என்று பெயர். அதாவது அனாதியிலிருந்தே புண்ணியம் என்ற மூடையையும் பாவம் என்ற மூடையையும் சேர்த்து வைத்திருக்கின்ற உயிர், அந்த மூடைகளை இல்லாமற் பண்ணுவதற்குத் தேவைப்படுகின்ற பெரும் பயணத்தின்போது, மூடைகளின் ஒரு பகுதியைத் தொலைப்பதற்காக இறைவனால் வழங்கப்படுகின்ற தரிப்பிடத்திற்கு உடல் என்று பெயர். இந்த உடலை, உயிரானது ஏற்கின்ற நிகழ்ச்சிக்குப் பிறப்பு என்று பெயர். இந்த உயிர் சம்பாதித்து வைத்திருக்கின்ற மூடைகளின் குவியலுக்குச் **சஞ்சிதம்** என்று பெயர். இந்தச் **சஞ்சிதம்** என்ற பாவபுண்ணிய மூடைகளை ஒரே பிறவியில் இல்லாமற் செய்துவிட முடியாது; விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், விதிவிலக்கான உயிர்கள், சஞ்சித மூடைகள் அனைத்தையும் இல்லாமற் செய்துவிடமுடியும் என்று மாணிக்கவாசகர் சொல்கிறார்.

*"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்*
*சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"*

அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே? என்று மாணிக்கவாசகரே வியந்து

நிற்கிறார். பழவினைகள் பாறுகின்ற வண்ணம், சித்தமலத்தை அறிவித்துச் சிவத்தன்மை அளிக்கின்ற சிவபாக்கியம் எல்லோருக்கும் கிடையாது. கோடியில் ஒருவர்க்கு மட்டும் கிடைக்கலாம். அந்தக் கோடியில் ஒருவர் மாணிக்கவாசகர். ஏனைய எம்போன்றோரைப் பொறுத்தவரையில், இன்பதுன்பங்களை, (நல்வினை,தீவினைகளை) அனுபவித்துத்தான் தீரவேண்டும். "அழுதழுதும்பிள்ளை அவளே பெற வேணடும்" என்றாற்போல, நல்லதையும் கெட்டதையும் நாம் அனுபவித்துத்தான் இல்லாமற் செய்யவேண்டும். பழவினைகளை மற்றவர்கள் பாற்றமுடியாது என்பது சைவசித்தாந்தம்.

உயிருக்கு ஓர் உடலைக் கொடுத்து. பிறப்பு என்ற தரிப்பிடத்தை வழங்குகின்ற இறைவன், அந்த உயிர் சேர்த்து வைத்திருக்கின்ற **சஞ்சிதம்** என்றநல்வினை தீவினை என்ற மூடைகளில் இருந்து சில சில பகுதிகளை (**பிராரப்தம்**) உயிரிடம் கொடுத்து, இந்தத் தரிப்பிடமாகிய உடலில் நீ இவ்வளவு காலம் இருக்கலாம்; அவ்வாறு தரித்திருக்கின்ற காலத்தில், உன்னிடம் ஒப்படைத்திருக்கின்ற பாவபுண்ணியங்களை நீ அனுபவிக்க வேண்டும், அனுபவித்துத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவே உனக்கு ஓர் உடலையும், இந்த உலகத்தையும் அவற்றில் காணும் போகங்களையும் உண்டாக்கியிருக்கிறேன். உனக்குத் தந்திருக்கின்ற குறிப்பிட்ட அளவு பாவபுண்ணியப் பகுதிக்கு **பிராரப்தம்** என்பது பெயர். **பிராரப்தம்** என்ற பாவப் பொதியையும் புண்ணியப் பொதியையும் அனுபவித் தொழிப்பதற்கென்று இறைவனால் வழங்கப்பட்ட பிறப்பின்போது, உயிர், தான் பிறந்த நோக்கத்தை மறந்து,**பிராரப்தத்தை** அனுபவித்துக்கொண்டிருக்கும்போது தனுகரணபுவனபோகங்களில் அழுந்தி, மேலும் மேலும் பாவ புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்கிறது. இவ்வாறு புதிதாகச் சேர்த்துக் கொள்ளுகின்ற பாவபுண்ணியங்களுக்கு **ஆகாமியம்** என்பது பெயர்.

பெரும்பாலான உயிர்கள் தனுகரணபுவன போகங்களிற் சிக்குவதால், பற்றற்றுச் செயற்படுவதில்லை. புதிய பாவபுண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றன. இவ்வாறு சேகரிக்கின்ற பாவ பண்ணியங்களுக்கு **ஆகாமியம்** என்று பெயர் என்று முன்னர் குறிப்பிட்டோம். தரிப்பிடத்தை விட்டு வெளியேற வேண்டிய காலம் வந்தவுடனும் இந்த உயிர் வேறொரு பயணத்தைத் தொடங்குகின்றது. இந்தப் பயணத்திற்கு **இறப்பு** என்பது நாம் கொடுத்திருக்கின்ற பெயர்.

இறைவனால் கொடுக்கப்பட்ட பிறப்பின்போது, சம்பந்தப்பட்ட உயிரானது பருவரல், இன்பம் என்ற இரண்டையும் ஒக்க நோக்குகின்ற வண்ணம் நடந்து கொண்டால், புதிய பாவகன்மமோ, புண்ணிய கன்மமோ ஏற்படாது. **பிராரப்தம்** முடிவுற்றதும். அந்த உயிர், தான் கொண்டிருந்த உடலைவிட்டு நீங்கும். அப்படியே உடலை விட்டுப் பிரிந்த உயிருக்கு இறைவன் இன்னோர் உடலைக் கொடுத்து (பிறவியைக் கொடுத்து) அந்த உயிரின் வைப்பில் இருக்கின்ற **சஞ்சிதத்**தின் ஒரு பகுதியைப் பிரித்தெடுத்துப் புதிய பிறப்புக்கான **பிராரப்தமாக** அந்த உயிருக்குக் கொடுப்பான். அந்த உயிர் தொடர்ந்து வருகின்ற பிறவிகளிலும் பருவரல், இன்பம் என்ற இரண்டையும் ஒக்க நோக்கி நடந்து கொண்டால், ஆகாமிய கன்மத்தை அது ஈட்டாது.

ஆகாமியத்தை ஈட்டாத உயிரானது, பருவரல், இன்பம் என்ற இரண்டையும் ஒத்த நோக்குதலாகிய இருவினையொப்பு நிலையை அடைந்து, அடுத்து அடுத்து வருகின்ற பிறவிகளில், ஏற்கெனவே மூடையாகச் சேர்த்து வைத்த சஞ்சித வினைகளைக் கழித்துவிட்டால் **மலபரிபாகம்** என்ற நிலையை அடைந்து,**சத்திநிபாத** நிலையைப் பெற்று இறைவனோடு கூடுதலாகிய **தாடலை** என்ற முக்திநிலையை அடையும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இந்த நிலையைத்தான் சைவசித்தாந்தத்தில் அத்துவிதம் என்பார்கள். சங்கர வேதாந்த அத்துவிதம் வேறு; இது வேறு. இறைவனின் தாளில் உயிரானது தனது தலையை வைத்து (தாள்+தலை) அமைதியாக, மகிழ்வாக இருக்கின்ற அத்துவித நிலைக்குத் **தாடலை** என்று பெயர். இந்தத் **தாடலை**யில் இருக்கின்ற உயிருக்குத்தான் **பிதிர்** என்பது மறுபெயர். பேயின் பிடியிலிருக்கின்றவனுக்குப் பேயின் குணங்கள் சிலவேனும் இருப்பது போலவும், காந்தத்தோடு சேர்ந்திருக்கின்ற இரும்பிற்குக் காந்தப் பண்பு ஏறுவது போலவும், இறைவனோடு **தாடலை** நிலையில் இருக்கின்ற உயிராகிய **பிதிரு**க்கும் இறைவனின் பண்புகளில் சில வந்துவிடும். மனிதனும் தெய்வமாகலாம் என்று சொல்வது இதைத்தான் போலும்! பருவரல், இன்பம் என்ற இரண்டையும் ஒக்கநோக்குகின்ற நிலையை (இருவினையொப்பு நிலையை) அடையாத உயிர், அதன் பிறவிக்கெனக் கொடுக்கப்பட்ட

பாவபுண்ணியங்களான **பிராரப்தத்**தை அனுபவித்து முடிந்ததும், (வினைதான் ஒழிந்தால், தினையளவும் நில்லாதுயிர் என்பதற்கேற்ப) எடுத்த உடலை உதறி எறிந்துவிட்டுப் புதிதாகச் சேர்த்துக் கொண்ட பாவபுண்ணியங்களான **ஆகாமிய**த்தோடு புறப்படும். புதிதாகச் சேர்த்த **ஆகாமியம்** அந்த உயிருக்குரியதாக ஏற்கெனவே இருக்கும் சஞ்சித மூடைக்குள் சேர்க்கப்படும். பல்கிப் பெருகிய இந்தச் சஞ்சித கன்மத்தைத் தொலைப்பதற்கென்று, இறைவன் அந்த உயிருக்கு ஓர் உடலையும் கொடுத்து **பிராரப்தம்** என்ற ஒரு பாவபுண்ணிய வினைப்பெட்டியையும் கொடுத்தனுப்புவான். இதுதான் சைவசித்தாந்தத் கோட்பாடு என்று மேலோட்டமாகச் சொல்லலாம்.

பாவபுண்ணிய மூடை முழுவதும் அனுபவித்து கரைக்கப்படும்வரை, உயிர்கள் பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. கருணையே வடிவான சிவன் என்ற கடவுள் "**தீர்ப்பு நாள**"(Judgement day)என்ற ஒன்றை நிர்ணயித்து உயிர்களைத் தண்டித்து அவர்களைச் சுவர்க்கத்துக்கு அல்லது நரகத்திற்கு அனுப்புவதில்லை. **தீர்ப்பு நாள்** என்று சைவசித்தாந்தத்தில் கிடையாது.புண்ணியமே மயமான உயிர்களைச் சுவர்க்கத்திற்கு அனுப்புவதுமில்லை; பாவமே மயமான உயிர்களை நரகத்திற்கு அனுப்புவதுமில்லை. சைவசித்தாந்தத்தில் சுவர்க்கம், நரகம் என்பவற்றிற்கு இடமில்லை. புராணக்கதைகள் சைவசித்தாந்தத்துக்குப் பொருந்தா.

பிறப்பைக் கொடுத்துப் பிராரபதத்தை அனுபவிக்கச்செய்து ஆகாமியத்தை உழைக்காமல் வாழ்ந்து காட்டுதல் என்ற தேர்வை எழுதுமாறு அனுப்பப்பட்ட உயிர், அந்தப் பரீட்சையில் தேறத் தவறினால், அந்தப் பரீட்சையை மீண்டும் ஒருமுறை எழுதிப்பார் என்று இறைவனால் அனுப்பப்படுகிறது. அந்த அனுப்பலே **மறுபிறப்பு** என்பது.

பொதியாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்ற பாவ புண்ணியங்களை (ஆகாமியத்தைப் புதிதாக உற்பத்தி செய்யாமல்) அனுபவித்துத் தீர்க்கின்ற வரைக்கும் உயிர்களுக்குத் திரும்பத்திரும்ப பிறப்பு வழங்குகின்றான் இறைவன் என்பதே சைவசித்தாந்தக் கொள்கை.

அப்படியானால் உயிர்கள் எப்படி அவற்றின் பாவபுண்ணியங்ளைப் போக்கிப் பிறப்பை அறுத்துக் கொள்ளலாம் என்ற கேள்வி எழலாம்.
அனாதியிலிருந்தே புண்ணிய பாவ மூடைகள் என்ற கன்மச் சுமையோடு உயிர் இருக்கின்றது என்று முன்னர் பார்த்தோம். இந்தச் சுமைக்குக் கன்மச்சுமை என்று பெயர். உயிர் கட்டுப்பட்டிருப்பது இந்தக் கன்மச்சுமையால் மட்டுமன்று. ஆணவம் என்ற ஓர் அழுக்கும் உயிரோடு அனாதியிலிருந்தே இருந்து வருகின்றது. பதி எப்படி அனாதியோ, உயிர் எப்படி அனாதியோ அப்படித்தான் ஆணவமும். பதிக்கும் அழிவில்லை. உயிருக்கும் அழிவில்லை; ஆணவத்திற்கு அழிவில்லை. ஆணவம் அடங்குமே ஒழிய, அழியாது.

உயிரானது உண்மைப் பொருளான இறைவனைக் காணமுடியாதவாறு உயிரைத் தடைசெய்கின்ற அழுக்குத்தான், ஆணவம் என்பது. இந்த ஆணவம் அடங்குகின்றவரை இறைவனை உயிர் அடைதல் இயலாது என்கிறது சைவசித்தாந்தம்.

உயிரினை அணுவாக்கி, அதன் ஆற்றலைக் கெடுக்கின்ற சக்திதான் ஆணவம் என்பது. உயிரின் அறியும் ஆற்றலைக் கெடுப்பதே ஆணவத்தின் செயல். ஆணவத்தின் செயற்பாட்டால் ஆற்றலிழக்கின்ற உயிருக்குத் தென்பூட்டி வலுவழங்குகின்ற பணியைச் செய்கின்ற பொருளுக்கு **மாயை** என்று பெயர்.

இந்த உலகமே மாயையினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒன்றுதான்;ஞானேந்திரியங்கள், அந்தக்கரணங்கள், தத்துவங்கள் என்பனவும் மாயையிலிருந்தே பிறப்பவைதாம். இந்த உலகம் மாறிக்கொண்டேயிருக்கும்: அதாவது ஒருகால் பெருகும்; மற்றொருகால் சிறுகும். சைவசித்தாந்தத்தின் இந்தப் பெருக்கத்தை **மலர்தல்** என்பார்கள். சிறுகலைக் **கூம்பல்** என்பார்கள். **"உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு"** என்பான் வள்ளுவன். நமது உடலும், உள்ளமும், நமது சக்தியும் மாயையின் பரிணாமங்களே; ஆகவே அவை எல்லாம் ஒன்றோடொன்று தொடர்பு உடையவையே.

மாயையின் உற்பத்திப் பொருள்களிலிருந்து உயிருக்குக் கிடைக்கின்ற அறிதிறனும் மட்டுபாடு கொண்ட ஒன்றாக இருப்பதால், அந்த மட்டுப்படுத்தப்பட்ட அறிவு, உயிரைப் பிழையான பாதையில் செலுத்துகின்றது; சில சமயங்களில் உயிரைக் குழப்பியும் வருகின்றது. அதாவது

பாம்பைக் கயிறென்றும், கயிற்றைப் பாம்பென்றும் சந்தேகிக்க வைக்கின்றது. அதாவது அற்ப அறிவானது, ஒன்றின் உண்மை நிலையை உணரமுடியாதவாறு உயிரைக் குழப்பி விடுகின்றது.

மாயையின் உற்பத்திப் பொருளான எல்லைப்பட்ட அறிவு, அவ்வாறு எல்லைப்பட்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் ஆணவம்தான். தன்னையும் காட்டாமல், மற்றப் பொருளையும் காட்டாமல் இருக்கின்ற பண்பு ஆணவத்திற்குரியது. எனவே உயிரானது சரியாகப் பார்க்கும் ஆற்றலைப் பெறவேண்டுமென்றால், உண்மையை உணர வேண்டுமென்றால், மறைக்கின்ற ஆணவத்தின் வலி குன்றல் வேண்டும்.

ஆணவம் வலி குன்றாமல் இருக்கின்றபோது, உயிரானது தனது உண்மை நிலையை உணராமல் இருக்கின்றது. இதனால் தன்னைப்பற்றிப் பெருமைப்படுகின்றது; இறுமாப்படைகின்றது. அதாவது **நான்** என்றும்,**எனது** என்றும் இறுமாப்பும், மமதையும் அடைகின்றது. இதைத்தான் ஆங்கிலத்தில் Ego என்கிறார்கள். **நாம், நமக்கு** என்று நினைக்காமல், நான், எனக்கு என்று நினைக்கின்ற நிலையைத்தான் **மமதை** என்கிறோம்.

இவ்வாறு **எனக்கு,எனக்கு** என்று நினைக்கின்ற உயிர், பட்டறிவின் பயனாக, மற்றவரின் நலன்தான், என்னுடைய நலன், மற்றவர்கள் நலமாக வாழ்ந்தால்தான் நானும் நலமாக வாழமுடியும் என்று நம்பத் தொடங்கும்போது ஆணவத்தின் பிடி சற்றுத் தளரத் தொடங்கும். எனக்கு நான் உதவ வேண்டும், என்னவர்க்கு நான் உதவ வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த உயிர், மற்றவர்க்கும் உதவ வேண்டும் என்று நினைக்கத் தொடங்கும்போது. உயிரிடமிருந்து வந்த அன்பென்ற பண்பு அருளென்ற பண்பாக மாறுகிறது. அன்பிலிருந்துதான் அருளென்ற குழவி உருவாகின்றது. அதனால்தான் **"அருளென்னும் அன்பின்குழவி"**என்று வள்ளுவன் சொன்னான்.

நான் எனது என்ற செருக்குச் செதுக்கி எறியப்பட்டதும், உயிரானது மெய்யறிவைப் பெறத்தொடங்கும். இந்த மெய்யறிவு நிலையின் இறுதிக் கட்டத்தைத்தான் வள்ளுவன் **"வானோர்க்குயர்ந்த வையம்"**என்று கூறினான். "யான், எனது என்னும் செருக்கறுப்பான் **"வானோர்க்குயர்ந்த வையம் பெறும்"** என்றான் வள்ளுவன். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்நான்கும் இழுக்காதியன்றது அறம்" என்று வள்ளுவன் சொன்ன அறம், உயிரிற்குக் கைகூடுவதே வானோர்க்கு உயர்ந்த வையத்தைப் பெறுகின்ற நிலை. இந்த நிலையை அடைய உயிர் முயலாவிட்டால் இறப்பும் பிறப்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதாவது அழுக்காறு. அவா, வெகுளி என்பன போகாத வரைக்கும் திருவருளின் பயன் உயிரக்கக் கிட்டாது. அதாவது இருவினைஒப்பு என்ற நிலையை உயிரானது தன் முயற்சியால் அடைகின்ற வரைக்கும் இறைவனின் அருள் சித்திக்காது. அவன் பார்வை திரும்பாத வரைக்கும் இறப்பும் பிறப்பும் சுழல்சக்கரமாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கும். சைவசித்தாந்தம் காட்டும் இறப்பும் பிறப்பும் இதுதான்.

---

## பக்தியின் முக்கோணம்

பக்தியை ஒரு முக்கோணத்துடன் ஒப்பிடலாம். அந்த முக்கோணத்தின் ஒவ்வொரு கோணமும் பக்தியின் பிரிக்கமுடியாத ஒவ்வொரு குணத்தை எடுத்துக் காட்டுகிறது.

மூன்று கோணங்களும் சேர்ந்ததுதான் முக்கோணம். கோணங்கள் இல்லையேல் முக்கோணம் எங்கிருந்து வரும்? அது போன்றே, பக்தியின் மூன்று குணங்களும் இல்லையேல் பராபக்தி தோன்ற முடியாது. பக்தி எனப்படும் முக்கோணத்தின் முதல் கோணமாக இருப்பது, அன்பை விலைபேசி வாணிபமாக்காமல் இருத்தல் என்ற பண்பாகும். பிரதிபலனை, மறு உதவியை எதிர்பார்க்குமிடத்தில் உண்மையான அன்பைக் காணமுடியாது. அது வாணிபமாக மாறுகிறது. இறைவனிடம் நாம் செலுத்தும் அன்பிற்கும் போற்றலுக்கும் கைமாறாக கடவுளிடமிருந்து ஏதேனும் பயனை எதிர்பார்க்கும் வரை நம் உள்ளத்தில் உண்மையான இறைபக்தி வளர முடியாது. இறைவனை, ஒரு பயனை எதிர்பார்த்து வழிபடுகிறவர்கள் தாம் விரும்பிய பயன் கிடைக்காதபோது தொழுவதும் நின்றுவிடுகின்றது.

இறைவன் நமது அன்பிற்குரியவன் என்ற காரணத்தினால் பக்தன் இறைவனை விரும்புகிறான். இதைத் தவிர வேறு எந்த நோக்கமும் அவனிடம் இல்லை.

# வாழ்க்கை முறையும் சமய வழிபாடும்

-திருமதி குலசேகரம்-

நாம் எம்மைப் பார்ப்போமானால் எமது உடல், மனம் என இரு பகுதிகளைக் கொண்டுள்ளோம். அற்புதமான முறையில் எமது உடல் படைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பங்கள் பல கொண்டு ஆக்கப்பட்ட ஒரு பெரிய தொழிற்சாலை போன்றது. பல தொகுதிகள் ஒன்று சேர்ந்து இயங்கி வருகின்றது. பல நுணுக்கமான செயற்பாடுகளினால் ஒவ்வொரு தொகுதியும் இயங்கி வருகின்றது. தொகுதிகள் ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்புபட்டும் உள்ளது. நாம் உண்ணுகின்ற உணவு அரைக்கப்பட்டு பல நொதியங்கள் சேர்க்கப்பட்டு இரசாய மாற்றங்கள் நடந்து குருதிச் சுற்றோட்டத்துடன் கலக்கப்பட்டு உடலெங்குமுள்ள கலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. சுவாசத் தொகுதிமூலம் ஒட்சிசன் குருதியோடு சேர்க்கப்பட்டு கலங்களுக்கு அனுப்பப்படுகின்றது. கலங்களில் சக்தி உண்டாக்கப்பட்டு உடல் இயங்குகின்றது. வேறு தொகுதிகள் மூலம் கழிவுகள் அகற்றப்படுகின்றன. சுற்றுச்சூழலை அறிவதற்கு ஐம்புலன்கள் தரப்பட்டுள்ளது. எல்லாத் தொழில்களும் சரிவர நடக்கச் செய்ய ஓமோன்கள் உள்ளன. எல்லாச் செயற்பாட்டையும் இயக்கிக் கொள்டிருக்கின்றது தலைமைச் செயலகமான மூளையும் நரம்புகளும்.

இவ்வாறான இந்த யாக்கையை ஆண்டவன்தானே படைத்துள்ளான். மனிதனுக்கு மனம் என்பதும் உணர்வுகள் என்பனவும் தரப்பட்டுள்ளன. இன்பம், துன்பம், கோபம், பொறாமை, குற்ற உணர்வு, கர்வம், மற்றவரை ஆளத்துடிக்கும் ஆணவம், பரிவு, பாசம். மன உளைச்சல் என்ற உணர்வுகள் எல்லாம் நம்மை உலைக்கிறது.

இந்த உடலைப் பாதுகாத்து, மனதை ஒருநிலைப்படுத்தி அல்லல்பட வைக்கும் உணர்ச்சிகளை அடிமைப்படுத்தி இறைவனை நாம் அடையவேண்டும்.

வேத ஆகமங்கள், திருமந்திரம், புராணங்கள், திருவருட்பயன், பகவத்கீதை போன்ற பெருநூல்கள்; சுவாமி விவேகானந்தர், யோகர் சுவாமிகள், நாவலர் போன்ற பெரியோர்கள் எவ்வாறு நாம் இறைவனை அடையலாம் என்றும், பிறவிகள் எடுத்து அழுந்தாமல் முக்தி பெறும் வழிகளையும் அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வுலக வாழ்க்கையில் நாம் அமைதியாக ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் சில நடைமுறைகளைக் கையாளவேண்டும்:

1. புலனடக்கம் - மனம் போனபோக்கில் போகாது எம்மைக் கட்டுப்படுத்தப்பழகுதல்
2. சகிப்புத்தன்மை - எமது மனதைப் பாதிக்கும்படி மற்றவர் நடந்து கொண்டாலும் அவற்றால் பாதிப்படையாதிருத்தல்
3. ஏற்றுக்கொள்ளும் பக்குவம் - கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் தன்மை.
4. பகுத்தறியும் சக்தி - நான் செய்வது சரியா, பிழையா என தீர்மானிக்கம் சக்தி
5. ஒத்துழைப்பு
6. தெய்வீக குணங்களாகிய முகமலர்ச்சி, பணிவு, பொறுமை, இனிமை வேண்டும்

இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயன்பெற கடவுள் வணக்கம் அவசியம். சமயப்பற்று மூலமே கடவுளை துதி செய்ய முடியும். இளம் சிறார்களிடையே சமய அறிவு குறைந்து கொண்டு வரும் இக்காலத்திலே இவர்கள் சைவ சமயத்தில் நாட்டம் கொள்வதற்கு பின்வரும் அணுகு முறைகளைக் கையாள வேண்டும்:-

1. சைவம் பற்றி நூல்கள் எளிய நடையில் எழுதப்பட வேண்டும்.
2. இளம் தலைமுறைகள் எவற்றையும் விஞ்ஞான நோக்கில் பார்க்க விரும்புவர். எனவே விடயங்கள் விஞ்ஞானத்தை அண்டியிருந்தால் நல்லது.
3. கோயில் அமைப்பு, கோயில் வழிபாடு, விக்கிரகங்கள் முதலியவைப் பற்றி எளிமையான நடையில் நூல்கள் எழுதப்படவேண்டும்.
4. புராணக்கதைகள் அறிவியல் சார்ந்தவையாகவும் நம்பத்தகுந்தவை யாகவும் இருப்பதையே மாணவர்கள் ஏற்றுக்கொள்வர்.
5. கருத்தரங்குகள், போட்டிகள் நடாத்துதல்.

6. நல்லொழுக்கம், பண்பாடுபற்றி போதித்தல்

சிவனை வழிபடுதல் அவசியம். வழிபாட்டில் அகவழிபாடும் புறவழிபாடும் உண்டு. புறவழிபாடுகள் மனிதனால் உண்டாக்கப்பட்டவை. தற்போது இதுவே பெரிதும் நடைமுறையில் உள்ளது. சைவசித்தாந்தத்தை வகுத்த திருமந்திரமோ, திருக்குறளோ, திருவருட்பயனோ, பகவத்கீதையோ புறவழிபாட்டிற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. விபுலானந்த அடிகள் இதைப்பற்றி பாடியது:

*"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியினைக்கு வாய்த்த மலரெதுவோ*
*வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"*

இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி இறைவனை மனதால் வணங்குதல் அகவணக்கம். இறைவனின் நாமத்தை இடைவிடாது உச்சரித்துக்கொண்டு ஏனையவர்க்கு உதவியும் செய்து கொண்டு நற்காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருத்தலே சிறந்த இறைவணக்கம் என்கிறார் யோகர் சுவாமிகள். இவர் கூறிய சில வரிகள் -

*தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தால் இறைவனைக் காண்பீரோ*
*மூலையில் ஏறி மௌனம் செய்தால் சகாதேவனைக் காண்பீரோ*
*கலைகள் யாவும் கற்றுவிட்டால் கங்காதரனைக் காண்பீரோ*
*விலைக்குக் புத்தகம் வாங்கிப் படித்தால் விமலனைக் காண்பீரோ*
*பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ*
*மூலையில் இருந்து முணுமுணுத்தால் முதல்வனைக் காண்பீரோ*
*செத்தாரைப்போலத் திரிந்திடடா – தம்பி சீவன் சிவனென அறிந்திடடா!*

காளமேகப்புலவர் அழகான சிலேடைப்பாட்டு மூலம் சீரான மனதை முருகனிடம் வேண்டியுள்ளார்.



*வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால்யாது பயன்?*
*இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை*
*மங்காத சீரகத்தை தந்தீரேல் தேடேன்*
*பெருங்காயம் ஏரகத்துச் செட்டியாரே*

இச் செய்யுளைப் பார்க்கும்போது தாளிதம் செய்யும்போது வெங்காயம் சுக்காகிப் போகுமுன் சீரகத்தைத் தரும்படி கேட்பதுபோல் அமைந்துள்ளது. உண்மைக்கருத்து – மன மாசு நீங்குவதற்கு வழியைக் காட்டும்படி ஒரு பக்தன் இறைவனிடம் கேட்பதாகும்.

இளம் சூடான இந்த உடல்(வெங்காயம்) சுக்குநூறாய்ப்போனால் அதன் விளைவாக வெந்தயம் (அயம்-இருதயம்) என்ற இதயத்தால் யாருக்கு என்ன பயன்? ஒருபோதும் ஒளியிழக்காத நல்ல மனத்தை(சீரகம் - சீரான அகம்) ஏரகத்தில் செட்டிபோல் வாழ்கின்ற முருகனே நீ எனக்குத் தந்தால் இந்தப் பெருங்காயத்தை (பெரிய உடல் போற்றிக் காப்பதில் பொழுதைப் போக்கமாட்டேன்.

கலசம் 75ஆவது சிறப்பிதழிற்காக நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் 10-15 வயதிற்கு உட்பட்டோர் பிரிவில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

ஓம் விக்கினேஸ்வரன் துணை

# எனது வீட்டில் சமயவாழ்க்கை

- வாஷினி ஜெயக்குமார்-

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவசமயம் எனப்படுகின்றது. இதனை அதிகமான தமிழ்மக்கள் பின்பற்றுகின்றார்கள். சமயம் ஒரு மனிதனுடைய பிறவிப்பயனை உணர்த்தி இறைவனைக்காணும் சக்தியை அளிக்கின்ற வழிகாட்டியாகும்.

நான் ஐரோப்பிய நாட்டிலே வாழ்கின்றேன். இங்கே பல மொழிகள் சமயங்கள் கலாச்சாரங்கள் வாழ்க்கைமுறைகளை ஆங்கிலப்பாடசாலையிலே கற்றுவருகின்றேன். அவற்றுக்கும் எனது சமயத்திற்கும் நிறைய வித்தியாசங்களுண்டு. எனது நண்பர்கள் என்னைப்பார்த்துச் சிரிப்பார்கள். கோயில் திருவிழாக்காலங்கள் விரதநாட்கள் செவ்வாய்,வெள்ளி போன்ற நாட்களிலே நான் ஏன் அசைவ உணவுகளைச் சாப்பிடுவதில்லை என்று எனது நண்பர்களுக்கும் விளங்கப்படுத்தியுள்ளேன்.

சைவசமயம் ஓர் வாழ்க்கை நெறியாக விளங்கும் சமயமாகும். இந்த வாழ்க்கை வீட்டிலிருந்தே ஆரம்பிக்கின்றது. காலையில் நீராடி விபூதியணிந்து கடவுளை வணங்கி காலையுணவை உண்டு பாடசாலைக்குச் சென்று திரும்பியதும் அதனை ஒழுக்கமும் வழக்கமுமாகச் செய்யவேண்டும் என்பது பெற்றோர்களின் பணிப்பாகும்.

புதுவருடப்பிறப்புகள் வருகின்றபோது மருத்துநீராடுவதும் மாதா பிதா பெரியவர்களை வணங்கி ஆசிகளையும் கைவிசேடங்களைப் பெறுவதும் வீட்டிலே சமைக்கப்படுகின்ற உணவுகள் மிகவும் சுவையாக இருப்பதையும் என்னால் மறந்து விடமுடியாது. புதுமனைப்புகுவிழா பூப்புனித நீராட்டுவிழா குழந்தைகளின் கொண்டாட்டங்களுக்கும் வேதியர்களால் தோசநிவாரணம் செய்வ தும் தூய்மையையளிக்கின்றது. இவை எல்லோர் வாழ்விற்கும் இறைநம்பிக்கையைத் தருகின்றன.

ஆலயங்களுக்குச் சென்று முதலிலே நாம் யாரைஎவ்வாறு வணங்கவேண்டும் இறுதியிலே யாரை வணங்கவேண்டும் திருவிழாக்காலங்களிலும் எவ்வாறு செல்லவேண்டும் உண்ணவேண்டியவை, தவிர்க்கவேண்டியவை திருத்தொண்டு என்ற பண்பாட்டுவாழ்க்கை எனக்கு நன்றாகப் பிடித்திருக்கின்றது.

ஆலயங்களிலே நடைபெறும் கும்பாபிசேகம், கொடியேற்றம் அலங்காரத்திருவிழா காலங்களில் அடியவர்கள் நேர்த்திகள் செய்வதும் (பாற்செம்பு, கற்பூரச்சட்டி, காவடி, கரகம், பிரதிஸ்டை) அன்னதானமுண்டு திருவருள் பெறுவதையும் காண்கிறேன். பெரியோர்கள் சொற்பொழிவாற்றுவதை என்னால் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆடியமாவாசை, பூரணைவிரதம் இறந்தவர்களின் ஆண்டுத்திவசம் என்பன பெரியவர்களால் செய்யப்படுகிறது. அன்றைய உணவுகளிலே உருண்டைகளாக்கி பறவைகளுக்கும் பசுக்களுக்கும் ஆற்றுநீரிலும் போடுவார்கள். இவை ஏன் செய்யப்படுகின்றன என்பதையும் தாத்தா பாட்டி உறவினர்களிடமிருந்துதான் தெரிந்துகொள்கின்றேன்.

எல்லாவிரதங்களையும் எவ்வாறு அனுட்டிக்கவேண்டும் என்பதையும் உறவினர்களோடு விருந்தோம்புவதையும் காண்கிறேன். எனவே ஒவ்வொரு தூய்மையான விடயங்களையும் வாழ்க்கை முறைகளையும் ஆரம்பத்திலிருந்தே எனது வீட்டின் சமயவாழ்கை உணர்த்திவருகின்றது. பெண்பிள்ளைகளாகிய நாங்கள் சைவசமயத்தின் பெருமையை பாதுகாப்பதோடு எதிர்காலத்திலே பண்பாடு, பழக்கவழக்கம், ஒழுக்கம் என்பவற்றை உலகம் முழுவதும் பரப்பி வாழ்வோமாக.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

# மனித நேயம்

-தவம்

இன்றைய காலகட்டத்தில் மனிதநேயம் பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் செயல்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவு. எமது சமய, இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது காலத்திற்குக்காலம் எத்தனையோ மகான்கள் தோன்றி மக்களின் நலனுக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்துச் சென்றுள்ளார்கள். சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவையார் முதற்கொண்டு நாயன்மார்கள், ஆழ்வார்கள், கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த மகாத்மாகாந்தி, தனிநாயகம் அடிகள், காஞ்சிப் பெரியவர்வரை மக்களுக்காக வாழ்ந்த மகான்கள் எண்ணற்றவர்கள். இவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதன் மூலம் நாங்கள் மனிதநேயம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

உதாரணமாக மனிதநேயத்தின் மாமகுடம் எனப்போற்றப்பட்ட இராமானுஜர் மக்களுக்காக என்ன செய்தார் என்பதைப் பார்க்கலாம். கடவுளுக்குச் சாதி, மத பேதமில்லை. பரமனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்தால் அதுவே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்ற கொள்கையைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தார்.

திருவரங்கத்தில் தாழ்ந்த சாதியினரை கோயிலுக்குள் அனுமதிப்பதில்லை. இவர் அங்கு பீடாதிபதியாக இருந்தபோது அவர்கள் எல்லோரையும் கோயிலுக்குள் செல்ல வழிவகுத்தார். இதனை ஏற்க விரும்பாத அர்ச்சகர்கள் இவரை ஒழித்துக் கட்டவும் முயன்றனர். இதையடுத்து இராமனுஜர் திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்று அஷ்டாச்சர மந்திரத்தைக் கற்பிக்கும்படி வேண்டுகிறார். அந்த மந்திரத்தை இவர் எவருக்கும் கற்பிக்கக்கூடாது. அப்படிக் கற்பித்தால் இராமனுஜர் நரகத்திற்குப் போகவேண்டிவரும் என்ற நிபந்தனையுடன் திருக்கோட்டியூர்நம்பி அஷ்டாச்சர மந்திரத்தை இராமனுஜருக்குக் கற்பிக்கிறார். இந்த அஷ்டாச்சர மந்திரத்தை ஓதுவதால் நற்கதியடைய முடியும் என்பதை உணர்ந்த இராமனுஜர், தான் நரகத்திற்குப் போனாலும் பரவாயில்லை, அந்த ஊர் மக்கள் நற்கதியடைய வேண்டும் என்று விரும்பினார்.

அதனால் அந்த ஊர் மக்கள் அனைவரையும் கூட்டிவந்து, தான் ஓர் மதில்மேல் ஏறி நின்று அந்த மந்திரத்தை எல்லோருக்கும் கற்பித்தார். இதனைக் கேள்வியுற்ற திருக்கோட்டியூர்நம்பி மிகக் கோபாவேசமாக இவரிடம் வந்து "ஏன் எனது சொல்லை மீறினாய்" என்று விளக்கம் கேட்டார். அதற்கு இராமானுஜர் "இந்த அஷ்டாச்சர மந்திரத்தைச் சொல்பவர்கள் நற்கதியடைவர் என்று நீங்கள் சொன்னீர்கள். இதனை மற்றவர்களுக்குக் கற்பித்தால் நான் நரகம் அடைவேன் என்றும் சொன்னீர்கள். இவ்வளவுபேரும் நற்கதியடைய நான் மட்டும் நரகம் போவது பரவாயில்லை என்று எண்ணியே அப்படிச் செய்தேன்" என்று அமைதியாகப் பதிலளித்தார். இதனைக் கேட்ட திருக்கோட்டியூர்நம்பி மனம் நெகிழ்ந்து "இராமானுஜரே நீர்தான் மனிதநேயமிக்க மாமனிதர்" என்று பாராட்டினார்.

ஒருமுறை இராமானுஜர் தன் குருவாகிய திருக்கோட்டியூர்நம்பியை வீட்டிற்கு விருந்துண்ண வரும்படி அழைத்தார். அவரது அழைப்பையேற்று வீட்டிற்கு வந்த குருவை அவரது மனைவி தஞ்சம்மாள் வீட்டிற்குள் அழைத்துவந்து உபசரிக்காது, அவர் தாழ்ந்த சாதியினர் என்பதால் திண்ணையில் அமரவைத்து உணவளித்தார். இதனை அறிந்த இராமனுஜர் மிகவும் வேதனைப்பட்டார். உடனே தனது மனைவியை அவளின் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் துறவு பூண்டார்.

இவ்வாறு மனிதநேயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் இராமானுஜர். இதனால்தான் இவர் மனித நேயமிக்க மாமனிதர் என்று போற்றப்பட்டார். மனித நேயத்திற்கு உதாரணமாக வழிகாட்டியவராக வாழ்ந்து காட்டியவர் மாந்தருள் ஒரு தெய்வமாக விளங்கிய மகாத்மா காந்தி. மனிதநேயமே உலகில் சமாதானத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தி மக்களை உயர்த்தவல்லது.



# Sakthi - the all pervasive Kinetic Energy of Lord Siva

**Siva Gnana Selvy, Samooka Seelar**
Mrs.Indra. S . Siva-Yoham
F.R.C.S.(Eng) F.R.C.Oph
(Retd) CONSULTANT OPHTHALMIC SURGEON
Patron Saivamunetta Sangam London

God's presence is everywhere,in everything,through everything, for Siva is the creator of all things, the manifestation of time, form and the space between forms. An integral part of Siva is Sakthi - manifesting as the Divine Mother filled with kindness and compassion,yet powerful to regulate allhappenings in the universe.

The spiritually potent masterpiece, which dates from centuries before Christ,The Thiru Manthiram in which Thiru Moolar dedicates 260 verses to the attributes of SAKTHI - SUPREME ENERGY is very revealing.Thiru Moolar, being in the prestigious inner realms of Yogis from Mt Kailas bore the nameSundera Nathar, and was a contemporary of Sage Agasthiyar, who had belonged to the same circle of illuminated souls.Lord Siva having initiated a desire in Sundara Nathar to travel down South, with intentions of meeting Sage Agasthiyar, caused a diversion.This diversion resulting in entrapment of Sage Sundara Nathar's soul in the lifeless physique of cowherd Moolan, as an act of compassionto the bereaving cows, was perhaps designed by the Good Lord, to ensure the flow of erudite messages of Saiva Philosophy, to enrich the minds of millions of ill informed Saivites who populated the southern terrains of the Indian subcontinent.

In verse 1098 of Thiru Manthiram in Thantra 4, captioned SAKTHI IS SUPREME ENERGY, he states

சாற்றிய சேவதஞ் சராசரம் ஐம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி
தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபைர
ஆற்றெலா டாய்நிற்கும் ஆதி முதல்வியே

"The Vedas,
the creation diverse, movable and immovable,
the elements five,
the quarters four of Globe,
the spreading darkness,
the space vast,
the life species several,
the light that is Parapari,
all these are but the Primal Sakthi.
as One Energy she pervades all." - English translation of verse1098

Which succinctly states the vast ambit of power and responsibility that Sakthi,who is personified Supreme Energy of Lord Siva, possesses.
Verse 1103 Adore Her and Be Liberated.

தையல்லநல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணியின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே

"She , the Good Mother
The Supreme Mistress of thapas all,
She the Manonmani,
Who by her glance of grace
Dispels Mayaic darkness,
Gently stand and adore Her;
Having adored Her
Births no more shall yours be. "English translation of verse 1103.

Describing the recipients of Sakthi's grace in verse 1200
of Thirumanthiram, Sage Thiru Moolar says

ஆரே திருவின் திருவடி காண்பார்கள்
நேரநின் றோதி நினையவும்வல் லார்க்குக்
காரோர் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவத் தாளே

" Who shall behold the Feet of that Holy One?

To them who seek Her presence
And constantly meditate
The Mother of cloud-dark tresses
Revealed her holy feet, Lotus -like,
And placing them in their thoughts,
Blessed them with Her grace." - English translation.

The importance of reciting the PANCHA DASAKSHARI Mantra Ka Aa E La Hrm:
Ha Sa Ka Ha La Hrm: Sa Ka La Hrm in meditating on The Holy Mother, as the vibrations created by the syllables are astonishing and enhance greatly, receiving HER Grace.
Pronunciation is also of great importance.

Hrim Sakthi , chant Her name in Silence with Flowers.
in verse1333 Sage Thiru moolar says

சேவடி சேரச் செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றோத்துவர்
பூவடி யிட்டுப் பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறிவாரே

They flourish at Her Holy Feet
Who chant Her name in silence;
Who adorn Her Feet with flowers
They know the way to reach Her Feet.- English translation .

Having acquired some degree of induction to the worship of Sakthi, it is important to ensure that the moral calibre of the recipient is flawless. In order to implement the practice,anger, lust,jealousy, avarice,falsehood,lack of empathy to the needy, all of which together,referred as Adharma, should be eliminated in the seeker, enabling the Grace of the Goddess to percolate into. Once these virtues are established, constant recognition of the presence of the Goddess in every part of one's ambience and in all activity, is all that is called for, to reap

the benefit of this life on earth.
The power of the Great Goddess is located at the base of the Spinal Cord of human beings as Kundalini [representing the elementearth]and when the seeker is immersed in contemplation on HER, the power ascends via the other five Chakras,namely Svaadishthaanam [representing the element-fire] the Manipurakam [representing the element -water], Anaahata [representing theelement Air] Visudhi [representing the element Space] and Aagna [representing Intellect] and ultimately reaches the Sahasrara Chakra on the Summit of the Skull, resulting in release of Sweet Ambrosia, thus blessing the individual, with a feeling of fulfilment.

Physiological Functions of the Chakras

It is worthy of note that so many millenniums ago, Hindu Sages conceived, from divine inspiration the exact function of each Chakra, as being responsible for the neurological control of different organ systems within the body. Muladhara Chakra is considered as the repository or store house of the Kinetic Energy which is Kundalini, Svaadishthaana Chakra is relevant to nerve plexuses that control the organs of procreation, Manipura Chakra relevant to neurological control of Renal and Gastro Intestinal systems, Anahata Chakra being relevant to the Neurological Control of Heart and Vascular Systems Visudhi Chakra being responsible for the Respiratory System and phonation - production of voice, Aagna Chakra which is located in the space between the two eyebrows is concerned with intellect.The ultimate destination of the rising Kundalini is the Sahasrara Summit of the skull wherein union of Lord Siva and Parasakthi are establishedChakra located at the culminating in that invigoration of the Soul, experienced by the individual as feeling of total Bliss. All the aforesaid is the clarification of the principles of YOGA , the practice of invigoration of the physique and the Atman - Soul.

Modern concepts of Physiology are no different from the basis of that promulgated by the preceptor Sri Hayagriva to Sage Agastya on the magnificence of Sri Lalithambika as Kinetic Energy encountered in the Universe and within each life form. The celestial beings seeking refuge and protection by the Goddess, to extricate them from the evil acts of the Asuras [demons] led by BandaaSuran, are rewarded by the evergracious Goddess who takes the form of LALITHAAMBIKA, resplendent like the rising SUN, and armed with the divine bow of sugarcane, and five arrows representing the five elements of Nature,sets out to eliminate the Asura- BandaaSura. The entire sequence of events, and their connotations, are explicitly set out in the slokas of the vibrant Lalitha SahasraNaamam.

It is revealed in Sloka 543 - Om punya -labhyaayai namah."salutations to HER who is attained only through Her Grace, resulting from the merit earned by austerities and holywisdom."It is claimed that abstinence from engaging in activities connected with the five senses,opens the path to spiritual bliss.

Lalitha Sahasranamam in its 880th Sloka states:
"Om samsaara -panka- nirmagna- samuddharana-panditaayai namah"
Which translates as "salutations to Her who is proficient in pulling out those who are lost in the morass of worldly life,and crying out from the depths of their hearts_"Oh Mother,Thee alone art my refuge"
Recitation of the Lalitha Sahasranamam in its entirety with accurate pronunciation and absolute concentration, reaps great merit and protection, particularly so, when it is done with

the decorum envisaged and on a daily basis, offering Flowers and KumKum, to Lalithambika.

Absolute proof of the validity of this and preceding statements is substantiated by the writer's personal experiences, and should not be construed as seeking publicity. The intention ofdocumenting this, is to strengthen Spiritual Conviction of aspirants.Dietary abstinence from animal flesh is of utmost importance, conditioning the mind with compassion.Virtuous lifestyle acquired from quality upbringing by parents, and support from spiritually motivated partner in life have also played a substantial role.

In the year 1988, participating with total fervour in a Thiru Villaku Poojah,in London, with many other devotees with lamps lit with ghee,and offering flowers and KumKum to the Holy Feet of the Goddess visualised and presiding on the decorated platform ahead, Sri Lalitha Sahasranamam being recited with such dedication was an experience never to be forgotten. My husband and I were even more inspired, when at the conclusion of the Poojah the statue of the Goddess was presented to us, to enshrine in our Poojah room at home. This form of the Lalithambika,In the seated posture with the left leg bent across and the foot resting on the Right knee, we learnt subsequently as:

Sri Raja Rajeswary. From then on an intense desire to learn The Lalitha Sahasra Namam was deeply established in my mind.However being an Ophthalmic Surgeon fully immersed in theprovision of unadulterated services to the visually handicapped, opportunities to make dedicated efforts were few. However the Gracious Sri Raja Rajeswari, desired further progress, and decided to cause slight blurring of central vision of my left eye.

It did not in anyway disturb the microsurgical procedures that I engaged in.Suspecting the well intended action of the Holy Mother, and knowing that nothing can be done treatment wise to reverse it, when the pathology is located in the centre of the Retina, and having discussed with the Professor of Ophthalmology in Manchester we came to the same conclusion that it could resolve totally,or partially with time. From then on making, valiant efforts, at memorising the Sahasranamam, achieved total fulfilment, coinciding with the resolution of the vision to normality. At the time my husband and I were Consultants in Public Health, and Ophthalmic Surgery in adjoining districts, Chorley and Blackburn respectively, and I commenced making annual trips to Colombo Sri Lanka during the Navarathri Festival in late September to worship at the Holy Feet of Sri Vadivambika at Sri Munneswaram Temple and realised that the Goddess had enabled me to recite the Lalitha Sahasranamam from memory, whereas many of the younger priests resorted to reading.

Even more significant is that Sri Raja Rajeswary Amman in the United Kingdom, has enabled us, humble devotees, to reside in HER Sacred Precincts, facilitating daily worship at home and in Her Temple. Many have been the experiences that the Goddess has initiated, and to stress the importance of pursuing honesty as a principle, I wish to recall one.While yet functioning as Consultant Ophthalmic Surgeon at The Eye Hospital Colombo, and offering my service to the needy, entirely with dedication, it was usual for consultants to be available for service to the public who wished to consult them in a private capacity during the lunch break,in their personal consulting rooms. This facilitated,opportunities for many,who may have travelled long distances to avail of guidance re their Ophthalmic ailments and treatment..

Whilst maintaining my spiritual Commitments prior to setting off to work in the mornings, it was my practice to perform Abishekam in the prayer room at home on Thursdays to Icons of the Hindu Pantheon. To facilitate this my dear Husband would purchase the items I need during his lunchbreak on Wednesday- they being Milk,Honey,Banana,Woodapple,Mango.It so happened that my husband had gone abroad to attend a conference in the U.S, and on this occasion,I was to do the needful.To my utter disappointment my visit to the grocery store that hitherto always had these items, revealed that it did not have any of the items.With a heavy heart,I had to proceed to my Consulting rooms,as there would be many that would have come from all parts of the country to seek my advice.As I alighted at my Rooms, I noted a man whom I had treated on the National health for some serious ocular injury very successfully, seated in, among thepatients in the waiting room.

As I had ,strictly avoided seeing patients I had treated on the National Health, subsequently as private patients, I indicated to my secretary not to give an appointment to the said individual, which was duly carried out.However during my session, this individual walked in accompaniedby another man, and I was told that, he was not the patient, but the companion,was, and they had come from Puttalam, a town located about 100 miles away, as he was eager to be seen by me.I proceeded to examine him,discussed his condition and prescribed the necessary medication.

As they did not make any effort to leave, I indicated I had several others to be seen. The man I had treated on the NHS hesitated, and reluctantly revealed that he had brought me a gift. I became rather annoyed,and indicated to him, that I do not accept gifts.The man persisted, however saying " these items are all from my own garden "and opened a cardboard box containing bananas, woodapple, mango, milk and honey- the very items I had required to fulfil my Spiritual needs, which I reluctantly accepted, as he was not bribing me as a patient, but was revealing to me, the magnanimity of Lord Siva and His all Pervasive Parasakthi who had sensed the depth of my devotion, and at the same time, my commitment to duty, and moral principles.

This commitment to duty and honesty, in spite of the prevalent atmosphere of corruption and bribery evident in the professional scenearound me,I felt, was what I had acquired from my father,the late Judge of the Supreme Court of Sri Lanka, Saiva Sigamany Justice. Pon. Sri Skanda Rajah, who, to this day, is remembered and renowned for his honesty and fearlessness in delivering Justice. I wish to re iterate that I cited this incident, to reaffirm certain moral values, which are significant in carrying out one's duty, and being eligible for God's Grace. Being spiritually well informed alone, and not fortified with moral principles, would not qualify one to receive God's Grace. I conclude with reverence to the spiritual Armour of the Sacred!

! Panchaksharam - - - Aum Namasivaya and devotion to
ParaSakthi that has enabled these principles of devotion to
Duty expecting no materialistic returns, to have gravitated
to the next generation of our Family.

# உபநிடதமும் சைவ சித்தாந்தமும்

-சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள் B.A.(Hons.)

**சிவன்** சம்பந்தமான பல செய்திகள் வடமொழி, தென்மொழி சைவ நூல் இலக்கியங்களில் உள்ளன. உபநிடதங்களும், திருமுறைகளும் தொடர்ந்து வந்த சைவ சித்தாந்தமும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை மாத்திரமின்றி வடமொழி, தென்மொழி நூல்களின் சாரமாகவும் விளங்கக்கூடிய நூல்களாகவும் உள்ளன.

சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள், நால்வகை புருடாத்தங்கள், ஐந்தொழில், மறுபிறவி, முத்தி போன்ற செய்திகள் வேதாந்தமாகியஉபநிடதங்களில் முளைவிட்டன. பல்வேறு தெய்வ வழிபாடுகள் சரியை, கிரியை முதலியனவும் உபநிடதங்களில் உண்டு.

மாண்டுக்கிய உபநிடதம் சிவம், சாந்தம் போன்ற சொற்றொடரால் சிவம் என்பது மகிழ்ச்சியையும், சாந்தம் என்பது அமைதியையும் குறிப்பிடுகிறது. அமைதி இருந்தால் மகிழ்ச்சி உண்டாகும் அல்லது மகிழ்ச்சி இருந்தால் அமைதி உண்டாகும். இங்கு எமக்குள்ள பிரச்சனை மகிழ்ச்சியும் இல்லை, அமைதியும் இல்லை. இவற்றைக் காண அமைதியாக இருந்து சிவனை நினைக்க வேண்டும்.

சைவ சித்தாந்தம் சரியை, கிரியை மூலம் அமைதியை ஆத்மாவிற்கு ஏற்படுத்தி யோகநிலைக்கு கொண்டுபோகவே முயற்சிக்கிறது. உபநிடதம் என்றால் இறைநிலைக்கு அண்மையில் இருந்தல் இதனையே உபநிடதம் ஞானநிலைக்கு வருதல் என்ற கருத்துடன் விபரிக்கிறது. ஞானம் இல்லாமல் முத்தி கிடையாது. பக்தியில்லாமல் ஞானம் வராது. இக்கருத்தை உபநிடதங்களும் சைவ சித்தாந்தமும்கூறுகின்றன.



கேன உபநிடதம் இப்பிறவியிலேயே கடவுளை அறிந்துகொள் என்கிறது. பக்தி கொடுத்து ஞானம் பெற்று பிறவி நோய்க்கு மருந்து பெற்றுக்கொள். இதனையே திருவருட்பயனும் "உன்னுமுளது ஐயமிலது உணர்வாய் ஓவாது மன்னுபவம் தீர்க்கும் மருந்து" என்கிறது.

ஆன்மாக்களுக்கு முத்தி கொடுக்கவே இறைவன் திருவருட்சக்தியுடன்இருக்கிறான். "தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர் நிகூடாம்" என்று சுவேதாச்வர உபநிடதம் கூறுகிறது. "தன்னிலைமை மன்னுயிர்கள் சார தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறது திருவருட்பயன்.

"ஏகோ ஹி ருத்திர ததேவ சக்தி". சிவனும் சக்தியும் ஒன்றுதான் அனைத்தையும் உள்ளடக்கி உள்ளது. "யாதொரு தெய்வம் கொண்டீர்அத்தெய்வமாகி மாதொரு பாகனார்தான் வருவார்" என்ற சிவஞானசித்தியார் பாடலுடன் ஒப்பிடலாம்.

பல்வேறு உருவ வழிபாடுகள் பற்றி உபநிடதங்களில் உண்டு. இறைவனின் ஆயுதங்கள், கைகள் போன்று உருவகங்கள் பற்றியும் உண்டு.இந்திரம், மித்திரம், வருணம், அக்னி என்ற வேதக்கருத்தை "ஸ பிருமமா ஸ சிவ ஸேந்திர ஸ ஏவ விஷ்ணு" என கைவல்ய உபநிடதம் கூறுகிறது. வெவ்வேறு பெயர்களில், உருவங்களில் தெய்வவழிபாடு செய்யும் மரபு இன்றும் உண்டு. இதனைச் சைவ சித்தாந்தம் யோகவடிவம், போகவடிவம், வேகவடிவம் என்று குறிப்பிடுகிறது.தட்சணாமூர்த்தி யோகவடிவம், அர்த்தநாரீஸ்வரர் போகவடிவம், வீரபத்திரர் வேகவடிவம் இவ்வாறு நாம் பல தெய்வநிலைகளில் வழிபாடு செய்கிறோம்.

சகுண, நிர்குண வடிவங்கள் பற்றி உபநிடதம் பேசும். அதாவது இறைவன் குணம், குறிகளோடு நிற்றல், அதுவன்றி அருவமாக இருத்தல்."சர்வ பூதாதி வாச சாஷி சேதா கேவலோ நிர்குணஸ்ச" எல்லா வடிவத்திலும், வடிவம் இல்லாமல் தனித்தும் இருப்பான் என சுவேதாச்வர உபநிடதம் கூறும். இதனைச் சொருபநிலை. தடத்தநிலை என சித்தாந்தம் கூறும்.


இறப்பிற்குப்பின் வாழ்வு பற்றி கூட உபநிடதம் கூறுகிறது. நசிகேதன் என்பவன் யமனிடம் இறந்தபின் ஆன்மாவின் நிலை என்ன என்று கேட்கும் வாக்கியங்கள் உண்டு. இதனை எமது கன்மவினையாக சித்தாந்தம் காட்டுகிறது. சஞ்சித, ஆகாமிய, பிராரப்தவினை என குறிக்கலாம். எமது வினைகளுக்கு ஏற்ப நல்வினை, தீவினை போன்றவை எமது பிறவியை அல்லது

முத்திநிலையை தரும்.

மற்றும் கணபதி வழிபாடு, சிவ வழிபாடு, முருக வழிபாடு, சக்தி வழிபாடு, விஷ்ணு வழிபாடு போன்ற பல் தெய்வ வழிபாடுகளை உபநிடதங்கள் கூறுகின்றன. உதாரணமாக கணபதி உபநிஷத் உண்டு. தேவி உபநிஷத், வாசுதேவ உபநிஷத், தட்சணாமூர்த்தி உபநிஷத் போன்ற தெய்வ மூர்திகளின் பெருமை பேசப்படுகிறது.

எம்மைச் சிவமாக பாவித்தல் அதாவது அதுவே நீ ஆகிறாய், தத்துவமசி என்ற சொல் உபநிடதங்களில் அதிகம் உண்டு. சிவஞானபோதம் என்று சித்தாந்த நூலும் அவனே தானேயாகி ஏகனாகி இறைபணி நிற்க எனக்கூறுகிறது.

ஆகவே இறைவழிபாடு அவசியம். அதற்கு ஓர் இடம், அங்கு ஆற்றப்படும் வழிமுறை என்பன சாதாரணமான ஆத்மாக்களுக்கு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி மிகப் பழமையான உபநிடதங்களும், பிந்திய சைவ சித்தாந்தமும் ஏறத்தாழ ஓரே கருத்துக்களை கொண்டுள்ளன. சிவஞானபோதம் "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே" என்று வலியுறுத்துகிறது.



பந்தம் எனப்படும் கட்டுக்குள் இருந்து படிப்படியாக விடுபடுவது மோட்சம். அவ்வாறான நிலைக்கு நல்ல குருவை நாடுதல், ஆத்ம சாதனைகள் செய்தல் பற்றி உபநிடதங்கள் விபரிக்கின்றன. "தேஹோ தேவாலயம்" என உபநிடதம் உடம்பும் ஓர் ஆலயம் எனக்குறிப்பிடுகிறது. உடம்பை தூய்மைப்படுத்தி, உள்ளத்தில் தியானம், ஜபம் செய்து ஆத்மா நல்ல நிலையை அடையமுடியும்.

---

## நாம் கடவுளிடம் எதைக் கேட்கவேண்டும்



நாம் பகவானிடம் செல்வம், ஆரோக்கியம், புகழ் இப்படி எதையெல்லாமோ கேட்கிறோம். உண்மையில் மனமானது கண்டபடி அலையாமல் அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் நாம் கடவுளின் அருளைக் கேட்கவேண்டும். மனம் அவசியமற்றவைகளை எல்லாம் செய்யத்தூண்டும். கண்ணால் காணக்கூடாத வற்றையெல்லாம் கண் பார்க்கின்றது. காதால் கேட்கக்கூடாதவற்றையெல்லாம் காது கேட்கின்றது.. நாவினால் எதை ருசிக்கக்கூடாதோ அவற்றையெல்லாம் நா ருசிக்கத் துடிக்கின்றது. இவைகளுக்கெல்லாம் காரணம் மனம் பல பொருட்களைக் கண்டு மயங்குவதுதான். இவற்றை விட்டுவிட்டு அழகான பொருட்களைக் கண்டுவிட்டால் மனம் அதைப் பற்றிவிடுகின்றது. ஒரு குழந்தைக்கு பொரி உருண்டையின் மேல் பற்று அதிகம். ஆனால் வேறு ஒரு பொருள் உண்ணக் கிடைத்தால் குழந்தை அதைப் பற்றிக் கொண்டுவிடும்.

பகவானிடம் புதிதாக நாம் ஒன்றையும் கேட்டுப் பெற வேண்டியதில்லை. நம்மிடையே இருக்கும்படியான நம் உண்மைச் சொருபத்தை நாம் அறிவதில்லை. நம்முடைய உண்மைச் சொரூபம் ஆனந்தமயமானது. பகவானே அது. பரமாத்மாவே அது. அத்தகைய உண்மைச் சொருபத்தை மறைத்துக் கொண்டு நாம் ஓயாமல் துக்கப்படுகின்றோம். "என் உண்மை நிலையை உணர அருள்வாயாக. என்னை நான் அறியமுடியாதபடி இந்த மனது ஆட்டிப்படைக்கின்றது. இதை அன்பினாலே கட்டி, கட்டுப்படுத்தி என்னிடம் கொடுத்தாலே போதும். என் சுயருபத்தையே நான் காணமுடியாமல் கெடுக்கும் இந்த கெட்ட மனப்போக்கை, நீ எடுத்துவிடு. எனது ஸ்வரூபத்தையே எனக்களித்து அதைக் காக்க வேண்டிய காவலன் நீ" எனப் பிரார்த்திப்போமாக.

(ஜகத்குரு காஞ்சி காமகோடி சந்திசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்)

கலசம் 75ஆவது சிறப்பிதழிற்காக நடத்தபட்ட கட்டுரைப்போட்டியில் 15 – 21 வயதிற்கு உட்பட்டோர் பிரிவில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

# சமய வாழ்க்கையும் எனது எதிர்காலமும்

-காயத்திரி-

உலகிலே தோன்றிய சமயங்களிலே மிகப்பழமையானதும் புதுமையானதும் சைவசமயம் ஒன்றேயாகும். இது தமிழர்களின் முழுமுதல் கடவுளாக விளங்கும் சிவபெருமானை முதலாகக் கொண்டிருக்கிறது. நான் சைவ சமயத்தைச் சார்ந்திருக்கின்றேன் எனது சமய வாழ்க்கை எதிர்காலத்திலே சமயத்தின் வழியிலேயே நகர்ந்து கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன் நான் புலம் பெயர்ந்த நாட்டிலே பிறந்தாலும் என்னுடைய வாழ்விற்கு வெளிநாட்டிலும் ஓர் அடையாளம் இருக்கின்றது என்று நினைக்கின்றபோது மகிழ்ச்சியாக இருக்கின்றது. தமிழருடைய சமுதாயக் கொள்கைகள் பெருமைக் குரியவை. இந்த நாட்டிலே பிறந்தவர்களுக்கு சைவ சமயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால் இங்கே பிறந்த நாங்கள் எவ்வாறு எமது மொழி, சமயம், பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றை கற்றுக்கொண்டோம் என்பதும் ஆச்சரியத்திற்குரியதே. தமிழ்ப்பள்ளிகள் ,ஆலயவிழாக்கள், பெற்றோர்களின் வழிகாட்டல்கள் எமது கல்வியறிவும் சிந்தனையும் சமுதாயப்பணியும் எம்மை அடையாளப்படுத்துகின்றன.

சைவ சமயத்தவர்கள் தீட்சை பெறும்போதுதான் அங்கீகாரமுடையவராகின்றாகள். விபூதி அணிதல், உருத்திராக்கம் தரித்தல், உண்மை, ஒழுக்கம் சமயம் காட்டும் பாதையிலே வளர்க்கப்படுகின்றார்கள். இந்த நாடுகளிலே ஆலயங்கள் வருடத்தின் நடுப்பகுதியிலே திருவிழாக்கள் தொடங்குகின்றன. பாடசாலையின் விடுமுறை நாட்களிலே சிவராத்திரி, சரஸ்வதிபூசை, வாழை வெட்டுத்திருவிழா, கந்தர்சஷ்டி சூரன்போர்திருவிழா, கும்பாபிஷேகம், குடமுழுக்கு, சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பவற்றை என்னால் தரிசிக்க முடிகின்றது. மாணவர்களாகிய நாம் ஆலயங்களிலே பொதுத் தொண்டுகளிலே ஈடுபடமுடிகிறது. எனது வாழ்க்கையும் நம்பிக்கையும் பெற்றோர்களின் வழிகாட்டலால் வளர்க்கப்படுகிறது. உண்மைகளையும் ஒழுக்கத்தையும் பின்பற்றுவதால் நான் எதிர்காலத்தை உணர்கின்றேன். ஒழுங்கு தவறாத சமயம் காட்டும் பாதைகளினால் நான் வாழ முடியம் என்பதை உணர்கின்றேன் என்னைப்போல இளைஞர்கள் இருபாலரும் ஆலயங்களுக்குப் பணி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் சமயம் காட்டும் பாதையும் எமது வாழ்க்கைப் பாதையாகிறது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உண்மை புரிகிறது. இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும், அனாதைகளுக்கும் தர்மம் செய்வது அவசியமானது என்பதால் அடுத்த தலை முறையையும் நெறிப்படுத்த முடிகிறது. நமது மண்ணிலும் இல்லாதவர்களுக்கு நாம் உதவும் சிறுதுளி பெருவெள்ளமாகச் சேருகிறது என்ற உண்மையையும் இங்கேதான் உணர்கின்றேன்.

கஞ்சித்தொட்டி வைத்து ஆறுமுநாவலர் சமயம் வளர்த்தார். சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சைவத்தையும் தமிழையும் வளர்த்துள்ளார். சுந்தரமூர்த்திநாயனார் **நீளநினைந்தடியேன் உம்மை நித்தமும் கைதொழுவேன்** என்ற பாடலைப்பாடி இறைவனிடம் நெற்குவியலைப் பெற்று மக்களைக் காப்பாற்றினார் என்பதையெல்லாம் படிக்கும்போது மனம் ஆழமடைகின்றது. அறத்தையும் தருமத்தையும் பாதுகாத்து மக்களோடு சேர்ந்து வாழும் பண்பாடு வளர்க்கப்படுகின்றது.

அன்பு, மனிதநேயம், பண்பாடு ஒவ்வொரு மனங்களையும் புனிதப்படுத்துவதால் எனது சமயம் இந்த மண்ணிலே என்னைப்போல பலநூறு மாணவர்களை உருவாக்குகிறது என்பதே உண்மையாகும். அவனன்றி அணுவும் அசையாது என்பதும் உண்மையாக்கப்படுகிறது.

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் என்ற வரிகளைப் பார்க்கின்றபோது விநாயகரைப் பணிந்து நடாத்தும் காரியங்கள் வெற்றிகளையே தரும். சமயசாத்திர முறைகள் ஒழுக்கத்தையும் பக்தியையும் உருவாக்கி மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றன. பெரியோர்கள் வாழ்ந்து காட்டிய பாதைகளால் புதிய தலைமுறைகளை உருவாக்குகின்றன. அரிது அரிது மானிடராதல் அரிது என்கிறார் ஔவைப்பிராட்டி. அரிய பிறப்பான மனிதப்பிறவியைப் பெற்ற நாம் படைத்தவனின் திருவருளின்றி வாழ்ந்திட முடியாது என்பதையம், ஆகம அறிவியல் நூல்களும் சுட்டிக்காட்டுகின்றன.


சமய வாழ்வு உண்மையை உணர்த்துகிறது. உள்ளம் பொய்க்காத வாழ்வையும் தெய்வ நம்பிக்கையையும் தருகிறது. ஆனால் புலம்பெயர் வாழ்க்கை மிகவும் ஆடம்பரமானது. விஞ்ஞான வளர்ச்சியும் தொழில்நுட்பமும் தெய்வ நம்பிக்கையை குறைத்துவிடுகின்றது. அரை நொடிப்பொழுதுகூட படைத்தவனை வணங்குவதற்கு நேரமில்லை என்பவர்களைத்தான் பார்க்கமுடிகிறது.

ஆனால் உலகத்திலே பேசப்படுகின்ற மொழிகளுக்கெல்லாம் அகரம் முதலாக இருப்பதைப்போல இந்த உலகிற்கெல்லாம் மூலமாக இருப்பவன் இறைவன் என்பதை திருவள்ளுவர் கடவுள் வாழ்த்திலே தெளிவுபடுத்துகின்றார். சமயம் காட்டும் வாழ்வு புனிதமானது. நால்வர் காட்டிய பாதைகளும் சமயவாழ்வும் எமது எதிர்காலத்திற்கும் வழிகாட்டும் சுடர்களாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது என்பதால் புலம்பெயர் நாடுகளிலே ஆலயங்களும் திருவிழாக்களும் சமயப்பெரியோர்களின் சொற்பொழிவுகளும் வழிகாட்டல்களும் நம்பிக்கைகளும் புதிய தலைமுறையை உருவாக்குகின்றன. சமயவாழ்க்கை ஒவ்வொருவருடைய எதிர்காலத்தையும் நம்பிக்கையுடைய நல்வழிகளையும் காட்டும் என்பதே உண்மையாகின்றது.


---

## விநாயகர் கதை எழுதிய கதை

வியாச மகரிஷி என்ற மாமுனிவர் மகாபாரதக் காவியத்தைப் பாடத் தொடங்குமுன் விநாயகரை வழிபட்டு,"பிள்ளையாரே, நான் பாரத காவியத்தைப் பாடப்பாட அதை ஒருவர் எழுத்தாணி கொண்டு ஏட்டிலே வேகமாக எழுதி வரவேண்டும். அதற்கு உம்மைத்தவிர வேறு எவராலும் அதைச் செய்யமுடியாது." என்று வேண்டுகோள் விடுத்தார்.



பிள்ளையாரும். "சரி, நான் எழுதுகின்றேன். ஆனால் ஏட்டில் வைத்த என் எழுதுகோல் ஒரு கணமும் நிற்காமல் நான் எழுதிக்கொண்டே போகும்படி நீர் அதிவேகமாகப் பாடிக்கொண்டே வரவேண்டும்" என்றார் பிள்ளையார். "சம்மதம்! ஆனால் எழுதும் அர்த்தம் தெரிந்துதான் நீர் எழுத வேண்டும்" என்று வியாசர் வேண்டிக்கொண்டார். அதற்கும் விநாயகர் இணங்கவே வியாச முனிவர் மகாபாரதத்தைப் பாடத் தொடங்கினார். விநாயகர் எழுதும் வேகத்திற்கு இணையாகப் பாடமுடியாமல் வியாசர் தான் தத்தளிக்கும் போதெல்லாம், இரு அர்த்தம் தொனிக்கும்படி, சுலோகங்களைப் பாடுவார். விநாயகரும் புன்சிரிப்போடு அச்சுலோகங்களின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காக சற்று யோசிப்பவர் போல் தாம் எழுதும் வேகத்தை அவ்வப்பொழுது குறைத்துக் கொள்வார். இவ்வாறு வியாசர் சொல்லச் சொல்ல மகாபாரதத்தை விநாயகர் எழுதி வரும்போது அவரது எழுதுகோல் ஒருமுறை உடைந்துவிட்டது. உடனே பிள்ளையார் தனது இரு கொம்புகளிலே ஒன்றை ஒடித்து அதன் முனையாலேயே மகாபாரதத்தை எழுதி முடித்தார்.



# திருமுறைப் பெருமை

செல்வர் தி. விசுவலிங்கம் தலைவர், கனடா சைவ சித்தாந்த மன்றம்

திருமுறைகள், வாழ்வினைச் செம்மைப்படுத்தி, மக்களைத் தெய்வத் திருநெறிக்கண்கொண்டு சென்று சேர்ப்பன உள்ளன்போடு ஓதுவார்க்குப் பிறவித் தளையைக் கெடுத்துத் துன்பம் அகற்றி எல்லையில்லா ஆனந்தம் ஈவன. திருமுறைகள் இசை மயமாய் அமைந்த இன்பத் தமிழ்ப் பாடல்கள். சிவபரம்பொருளின் திருப்புகழைக் கூறும் அருட்பாக்கள். ஆளுடைய பிள்ளையார் முதல் அருள்மொழித்தேவர் ஈறாக உள்ள உண்மை நாயன்மார்களால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதப்பெற்ற பக்திப் பாடல்கள். இசை பயில்வோர் யாவரும் போற்றிப் புகழ வேண்டிய திருப்பாடல்களாகும். மறுமைக்கு வழிகாட்டுவதோடு இம்மைக்கு வேண்டும் சோறும் கூறையும் தந்து நல்வாழ்வு வாழச் செய்ய வல்லவையுந் திருமுறைகளே. இவை சிவபெருமான் திருவருளால் அருளப்பெற்ற செல்வம். சைவசமயத்தின் உயிர்நிலை.

**திருமுறை என்ற பெயர்**

திருமுறை என்ற தொடரில்,“திரு” என்பது அழகு, தெய்வீகம், மேன்மை, மங்கலம், செல்வம் என்னும் கருத்துக்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்பத் தரும் பதமாகும். “முறை” என்பது நூல், ஒழுங்கு, கிரமம், வரிசை, உறவு, ஒழுக்கம், போன்ற கருத்துக்களைத் தரும் பதமாகும். எனவே திருமுறைகள் என்றால் தெய்வத்தன்மை உடைய நூல்கள் எனவும், அருளாளர்களால் ஒழுங்குற வகுக்கப்பெற்ற அருள்நூல்கள் எனவும், பக்தி சிரத்தையுடன் ஓதுகின்றவர்களுக்குக் குறித்த பலனைத் தந்து விளங்கும் திருநூல்கள் எனவும், பரம்பொருளான சிவபெருமான் திருவருளை நிரம்பக் கைவரப் பெற்ற அருளாளர் பெருமக்களால் பாடப் பெற்ற பெருநூல்கள் எனவும், உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல்கள் எனவும், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள உறவை விளக்கும் நூல்கள் எனவும், மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்துகொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல்கள் எனவும், மக்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்யும் பெருநூல்கள் எனவும் வழங்கப்பெறும்.

**திருமுறைகள் தமிழ் மந்திரங்கள் - வேதசாரம்**

சிவபெருமான் சதாசிவ மூர்த்தியாக நின்று இருக்கு முதலிய நான்கு வேதங்களையும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் தோற்றுவித்தார். அதுபோல சிவபெருமானே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதல் சேக்கிழார்வரை அதிட்டித்து நின்று, அத்திருமுறைகளைத் தோற்றுவித்தலான், அவை சிவபெருமானால் இயற்றி அருளப்பட்டனேவே என்று கொள்ள வேண்டும். அ∴து பேயினாற் பீடிக்கப்பட்டவனது வாய்ச் சொற்களெல்லாம் பேயின் சொற்களேயன்றி பேய்பிடிக்கப்பட்டவன் சொற்களாகா. அதுபோன்று சிவபோதமிழந்து சிவமான தன்மை எய்திய அருள் ஞானச் செல்வர்களாகிய நாயன்மார்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகள் அனைத்தும் சிவபெருமான் அருள்வாக்குகளேயன்றி இவர்களின் வாக்குகள் அல்ல என்பது இனிது புலப்படும். இக்கருத்தை *“எனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந்தேறிய நிமலன்”* எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கண்டு கொள்ளலாம்.

சிவபெருமானுக்குத் தூலசரீரம் மந்திரம், சூக்கும சரீரம் ஆன்மா, அதிசூக்கும சரீரம் சிவசக்தி என்று சிவாகமங்கள் கூறும். சிவபெருமானுக்குரிய மூன்று சரீரங்களுள் தூலசரீரமாகத் திகழ்வது திருமுறைகள் எனலாம். நம்பியாண்டார்நம்பி தேவாரம் முதலியவற்றை,மந்திரங்கள் பதினொரு பகுதியனவாதல் பற்றி பதினொரு திருமுறைகளாகவும், அவற்றுள் தேவாரங்களைச் சப்தகோடி மகாமந்திரப்பகுப்புப் பற்றி ஏழுதிருமுறைகளாகவும் வகுத்ததும், இத்திருமுறைகள் அச்சிவபெருமானுக்குத் தூலசரீரமாகிய மந்திரமாதல் ஒற்றுமை நோக்கியே என்க.

மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினோடு முறைபதினொன் றாக்கினார்

என்னுந் திருமுறைகண்ட புராணத்தானுந் தெளியப்படும்.

மேலும் "மந்திரம்" என்பதற்கு இலக்கணம் கண்ட தொல்காப்பியனார்,"நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழி தானே மந்திரமென்ப" என்று கூறியருளினார். இதனை திருவள்ளுவரும்

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" குறள்-28

என்று கூறியருளினார். "நிறைமொழி" என்பது அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி எனப் பரிமேலழகர் வரையறுத்துள்ளார். திருமுறைகளும் இவர்கள் கண்ட இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்வதைக் காணலாம்.

திருமுறைகள், முதலினும் முடிவினும் ஓங்காரத்தையுடைய ஆரியவேதம் போல, ஓங்காரமூர்த்தியாகிய சிவபெருமானே பரம்பொருள் என்பதனை உணர்த்தும். அவை, ஓம் என்னும் பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓங்காரத்தைக் காயத்திரி மந்திரங்களின் முதற் கணிக்குஞ் சிறப்புடைய தகரமெய்யோடு(தோ= த் + ஓ) சேர்த்துத்,"தோடுடைய செவியன்" என முதல் திருமுறையின் முதலிலும்,ஈற் றெழுத்தாகிய மகரத்தை "நின்றதெங்கு நிலவியுலகெலாம்" என்று பன்னிரண்டாந் திருமுறையின் ஈற்றிலும் (ம்) நிறைவுறும் சைவத் திருமுறையானது ஓம் எனும் பிரணவ விரிவாய் அமைந்திருப்பதற்குத் தக்க சான்றேயாகும். மேலும்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர். என்னும் ஔவையார் திருவாக்காலும்,

வேதமுந் திருமுறைகளும் ஒரு பொருளையே நுதலியனவென்பது தெற்றென விளங்கும்.

**திருமுறைகளின் பெருமை:**

வேதசாரமே தேவார திருவாசகங்கள் என்பதைச் சைவப்பேரறிஞர் பலரும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். காசிவாசி செந்திநாதையர் இதை நன்கு ஒப்பிட்டுக் காட்டி விளக்கியுள்ளார். இத் தமிழ் வேதமாகிய திருமுறைப் பாடல்கள் பக்தி உணர்ச்சி மேலிட்டுப் பாடியவை. இவற்றைப் பாராயணஞ் செய்பவர்களுக்கு அப்பண்பை உண்டாக்குவன. நாயன்மார்கள் இப்பாடல்களை இறைவன் திருவருள் துணை தூண்டவே பாடினர். இப்பாடல்கள் பல அற்புதங்களை நிகழச் செய்தமை நாயன்மார் வரலாறுகளால் அறியலாம். சுருங்கச் சொன்னால், வேதமந்திரங்களைக் கொண்டு பல சாதனைகளை மாந்திரிகர்கள் செய்வது போல, இத் தமிழ்வேதப் பாடல்களைப் பாராயணஞ் செய்து பல சாதனைகள் புரிகிறார்கள். திருமுறைப் பாடல்கள் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லன. தெய்வீக சக்தியுடையன. அவற்றை உள்ளமுருகி மெய்யன்போடு பொருளுணர்ந்து பண்ணமைய வழுவின்றி ஓதவேண்டும். அங்ஙனமின்றி ஓதுவோர் பூரணமான பயனை அடையார்.

திருமுறைப் பாடல்கள் இறைவனுடைய பெருமைகளைப் பேசும், போற்றும், வாழ்த்தும் ஆன்மாவாகிய நம் குறை தீர்க்கும்படி வேண்டும். நமக்கு இன்னஇன்ன நற்பேறுகளைத் தருக எனப் பிரார்த்திக்கும், நம்மிடமுள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கும். இப்படிப் பல விதத்தில் இவை அமைந்திருக்கின்றன. திருமுறைப் பாடல்களில் நமக்கு உகந்தவற்றை நாம் தெரிந்து, அவற்றைப் பாராயணம் செய்து வருவது நமக்கு இம்மை, மறுமை, அம்மையாகிய பேறுகளில் ஒன்றும் குறைவின்றி நன்மையாய் அமைவதற்கு வழியாகுமென்று ஆன்றோர் கூறுவர். இவற்றைப் பாராயணஞ் செய்து பயன் அடைந்தோரும் எண்ணிலர் ஆவர்.

**திருமுறைகள் கூறும் பொருள்:**

பதி, பசு, பாசங்களின் இயல்பும், தொடர்பும், பிறப்பறுக்கும் உபாயமும் (சரியை, கிரியை, யோகம், ஞான வழிகள்) பேரின்ப நிலையமாகச் சைவசித்தாந்தம் கூறும் விடயங்களேயாம். இவ்விலக்கியங்களில் கண்ட கருத்தையே சைவ சித்தாந்தம் நெறிப்படுத்தி இலக்கணமாகக் கூறியது. பன்னிரு திருமுறை வகுப்பிற்கும், சிவஞானபோதத்துப் பன்னிரு சூத்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென ஆன்றோர் ஒப்பிட்டுக் காட்டுவர். சாத்திரங்களைப் படித்து

மெய்யுணர்வு பெறுவதிலும் பார்க்க, திருமுறைப் பக்திப்பாடல்களை ஓதி இறைவனருளைப் பெறுவது எளிது என்பர்.

சைவ நூல்கள் வேத ஆகம புராணங்கள் என்றமைவது போலவே முதலிலுள்ள ஒன்பது திருமுறைகளும், வேத மந்திரங்களும், தோத்திரங்களுமாய அமைய, பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் தோத்திர சாத்திர கருத்துக்கள் கொண்ட சிறந்த நூலாகும். சிவாகமக் கருத்துக்களும் நிறைந்து காணப்பெறுகின்றன. பன்னிரண்டாந் திருமுறை புராணமாக அமைந்து நிற்கிறது. இது நம் சைவசமய வரலாற்று மூலப் பேரிலக்கியமாகும். பதினொராந் திருமுறையில் தோத்திர வகையோடு. பிரபந்த வகைகளும் இடம் பெற்றுள்ளன.

இறைவனது குறிகளும், அடையாளங்களும், அவனுறையும் கோயிலும், அவனை அறியும் நெறிகளும், அறிந்தோர் காட்சியுள் திருந்த நின்ற அவன் நேர்மையும் ஆகிய எல்லாவற்றையும் நால்வேத அளவாக அன்றி ஆயிரமாயிரம் ஆரண அளவாய் பறையறிந்து தெரிவிக்கின்றது

**குறிகளும் அடையாளமும் கோயிலும்**
**நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்**
**பொறியிலீர மனம் என்கொல் புகாததே (5-90-6)** எனும்

அப்பரடிகளது திருக்குந்தொகையால் அறிந்து கொள்ளலாம். திருமுறைகள பல்லோரும் அறியும்வண்ணமான பயிலுந்தமிழில் அமைந்த எளிமையையும் போற்றலாம். அவை பண் சுமந்த பாடல்களாய் பாமரருக்கும் பழக்கமான பாவடிவங்களில் இயன்றதாய் அமைந்து இருக்கின்றன. மொழிக்கு மொழிதித்திக்கும் இன்சொற்களால் கல்லா மனத்துக் கடையரையும் கருணை வெள்ளத்து அழுத்தி வினைகடிய வல்லன. இத்தகைய அருமையில் எளிய அழகை நோக்க வேதாகமங்களிலும் வேதசாரமான சைவத் திருமுறை விழுமியதெனும் துணிபு தோன்றுதல் இயல்பே. இதனாலேயே முன்னோர் வேதம் பசுவெனவும், ஆகமம் அப்பசுவின் பாலெனவும், சைவத்திருமுறை நெய்யெனவும் ஒப்புவமை கூறினர்.

**வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ**
**ரோதுந்தமிழதனின் ளுறுநெய் - போதமிகு**
**நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்**
**செய்த தமிழ் நூலின் திறம்.** என்பது குருஞானசம்பந்த

தேசிகரின் வாக்காகும்.திருஞானசம்பந்தப் பிள்ளையார் இவ்வருட் பாடல்களை, திருநெறிய தமிழ் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரு என்பது சைவத்திரு. சைவத் திருவாவது பேரின்ப முத்தி. அதைப் பெற ஏற்ற வழியே திருநெறியாம். அத்திருநெறியில் நம்மை இட்டுச் செல்ல வல்லதே திருநெறிய தமிழ். எனவே திருநெறிய தமிழ் எனப்படும் இத்திருமுறைகள் பாராயணஞ் செய்பவர்க்கு முடிந்த பேறான மோட்ச ஆனந்தத்தைப் பெற வழி செய்வனவாகும். அன்றியும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருக்கடைக்காப்புப் பாடல்களில், ஓதுவாரைத் தீவினை சாரா் நோய், வறுமை வாரா் அல்லலுறா நல்வினை பெருகும் செல்வமும், அரசும், வாழ்வும் சிறக்கும் நரக துன்பமடையார் விண்ணவரும் மண்ணவரும் ஏத்த வாழ்வர் என்று கூறியவாறு, இம்மை மறுமை இன்பங்களையும் குறைவின்றிப் பெற்று இனிது வாழ உதவுவனவாகும்.

திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், நமச்சிவாயப் பதிகம் முதலியவற்றைப் பாராயணஞ் செய்து நோய்தீர்த்தல், கிரகதோஷங்களினின்றும் நீங்குதல் முதலிய பயன்களை இன்றும் பெறுவோர் பலர் உளர். பயனடைய வேண்டுவோர் அன்பும் ஆசாரமும் நியமமும் உடையவராய், திருமுறைப் புத்தகத்தைப் பூசை செய்து பத்தி சிரத்தையோடு திருமுறை ஓதும் முறைகளைக் கடைப்பிடித்து ஓதற்பாலர்.


வேதாகமங்களின் வழி நின்று சைவ நெறியினை உலகம் உய்ய இசைத் தமிழாலும், இயற்றமிழாலும் எடுத்தோதுவன இத்திருமுறைகள். பன்னிரு திருமுறைகளும் உள்ளங் கசிந்துருகி ஓதுதற்குரியன. திருமந்திரம் சாத்திர நூலாகவும், திருத்தொண்டர் புராணம் காப்பிய நூலாகவும் அமைந்திருந்தாலும் அவற்றுள்ளும் தோத்திரப் பாடல்கள் உள்ளன. ஓதுவார் உள்ளத்தையும், கேட்பார் உள்ளத்தையும் உயர்த்தி பக்தி உணர்வு பெருகச்செய்யும் பான்மை பன்னிரு திருமுறைகளுக்கு உண்டு.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

என்று சைவத் திருமுறைகளை ஓதவேண்டிய அவசியத்தை தருமையாதீனக் குருமுதல்வர் குருஞானசம்பந்ததேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வற்புறுத்துகின்றார். திருமுறைகளின் பெருமையை உணரந்து ஓதிப் பயன் பெறுவோமாக

## அறிமுகப்படுத்துகிறோம்

சைவ முன்னேற்றச் சங்க சைவக் குருக்கள்
வைத்திலிங்கம் ஐயர் சிவராசா குருக்கள்



சைவ முன்னேற்றச் சங்கம் இந்நாட்டில் இறுதிக் கிரியைகளை சைவ முறைப்படிச் செய்ய பல ஆண்டுகளாக சைவக் குருக்களை நியமனம் செய்து வந்துள்ளது. அவ்வரிசையில் எங்களுடன் 28.04.2014 முதல் சிவஸ்ரீ சிவராசா குருக்கள் இலங்கையிலிருந்து வந்து இணைந்துள்ளார். அவரை சைவ மக்களுக்கு கலசம் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறோம். அவரை வாழ்த்துகிறோம்.

## கலசம்
## KALASAM

கலசம் உங்கள் வீடு தேடி வர வேண்டுமா? இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்

If you would like your KALASAM to be posted, please fill in the form below and send it to us with your payment – payable to SMS, UK. Postage and admin for two years:£10.00 (UK/Europe); /£20.00.(Rest of the world)

பெயர்:..........................................................................Donation£ முகவரி:....................................
......................Postage£ ..........................................................................................Tota.........................
..................................................................

**SMS Kalasam** 2, Salisbury Road, Manor Park,London E12 6AB.Kalasam@hotmail.com

கலசம் 75ஆவது சிறப்பிதழிற்காக நடத்தபட்ட கட்டுரைப் போட்டியில்
21 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

# என்னை ஏன் இறைவன் படைத்தான்

-யசோதா சசிதரன்-

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவன்
அன்னவர்க்கே சரண் நாங்களே"
என்று பாடுகிறார் கம்பன்

இறைவன் ஒருவனே. அவன் பரம்பொருள். ஆதியும் அந்தமும் இல்லாதவன் அவன். இந்த உலகத்தை தனது ஐந்தொழிலின் ஊடாக அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பவற்றால் எமக்கு தன்னையுணர்த்தி தனக்குவமை இல்லாதவனாக இருக்கிறான். எங்கும் நிறைந்தவன் அவன். அவனின்றில் அணுவும் இல்லை. இந்நிலையில் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களுக்கு "கடவுள் என்னை ஏன் படைத்தார்" என்ற கேள்வி தினமும் வந்து போகின்றது. அதற்குக் காரணம் எம்மில் உள்ள அறியாமையையும், கடவுள் என்ற சக்தி பற்றிய அறிவின்மையுமே ஆகும்.

எம்மைப் படைத்த இறைவனின் நோக்கம் என்ன? இப்புவனம், உயிர்கள், சடப்பொருள்கள் என்பன எல்லாவற்றிற்கும் அவனே காரணம். எதற்காக உயிர்களைப் படைத்தான்? ஆம் இறைவனாகிய மெய்ப்பொருளை உணர்த்தும் உயிர்கள் அனைத்தும் இறைவனடியில் வந்து சேர்வதற்காகவே எம்மைப் படைத்தார்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் படைக்கப்படும்போது அவை ஓரறிவு தொடங்கி ஆறறிவுவரை படைக்கப்படுகிறது. அதில் மனிதன் மட்டும் உயர்ந்த உயிரினமாக ஆறு அறிவுகளும் ஒன்றாக வேலை செய்யும் உயிரினமாகிறான். மனிதனுக்கு மட்டும்தான் ஆறாம் அறிவாகிய சூக்குமக்கருவி வேலை செய்கிறது. அதையே மனம் என்று அழைத்தார்கள். மனிதன் என்ற சொல்லிலிருந்து மனிதன் என்பது தோற்றமடைந்தது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் குழந்தையாக இருக்கும்போது அங்கு மனம் என்ற கருவி வேலை செய்யத் தொடங்குவதில்லை. அதனால்தான் குழந்தை அழுகின்றது என்று அ∴றிணைச் சொற்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. பின் குழந்தை வளர்ந்து மனம் வேலை செய்யத் தொடங்கும்போது அறிவு வளர்கிறது. அதன்பின்னர் தான் மனிதன் உயர்திணைச் சொற்கள் கொண்டு மரியாதைக்குரிய வார்த்தைகளால் அழைக்கப்படுகிறான்.

இறைவனால் உருவாக்கப்பட்ட உயிரினங்கள், சடப்பொருட்கள் என்பனவற்றிற்கு அதிர்வுகள் உள்ளன. அவை மனிதர்களில் அதிகப்படியாக வேலை செய்கிறது. அவை மனித எண்ணங்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. மனிதன் தன் தர்க்க அறிவின்மூலம் மொழியை உருவாக்கினான். அதன் மூலம் "என்னை ஏன் இறைவன் படைத்தான் என்பதை ஆராய முற்பட்டான். அப்படி ஆராய்ந்தவர்கள் உலகில் பலர் இருந்தாலும் சைவசமயத்தில் மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் போன்றோர் போற்றத் தக்கவர்கள். இவர்களின் பயனாக "சைவசித்தாந்தம்" இந்துக்களின் கோட்பாடாகியது. அது தர்க்கரீதியானது.

இந்துக்கள் இறைவன் ஒருவனே என்று நம்பிக்கையுள்ளவர்கள். இறைவனுக்கு "பசுபதி" என்ற பெயர் உண்டு. பசு என்றால் ஆன்மா. அதாவது உயிர்கள். "பதி" என்றால் தலைவன். எனவே உயிர்கள் எல்லாவற்றிற்கும் இறைவனே தலைவன். இந்துக்கள் அவனைச் சிவன் என்பார்கள்.. மற்றைய மதத்தவர்கள் "அல்லா", யேசு, புத்தர் என்று பலவாறாக அழைக்கிறர்கள். இறைவன் உயிர்கள் மீது கொண்ட நன்மை கருதி படைத்தலோடு விட்டு விடாமல் அவர்கள் மீது கொண்ட கருணையினால், உயிர்கள் முத்தி பெறும் பொருட்டு

ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான்.

உமாபதி சிவாசாரியார் தனது சைவசித்தாந்த கோட்பாட்டில் சொல்லுகிறபோது பதி, பசு, பாசம் என்பவற்றின் தொடர்புகளைக் கூறுகின்றார். இவை இறைவன், உயிர்கள், மலங்கள் ஆகும். இம் மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. மலங்கள் மூன்று வகைப்படும் அவை ஆணவம், கன்மம், மாயையாகும். ஒரு உயிர் இப்பூமியில் படைக்கப்படும் முன் அது மும்மலங்களினால் கட்டுண்டு மயக்கநிலையில் இருந்தது. அது ஆன்மாவை மாசுபடுத்துவதால் அவற்றிற்கு மலங்கள் எனப் பெயரிட்டார்கள். அவை உயிர்கள் இறைவனை அடையாதபடி, இறைநாட்டம் கொள்ளாதபடி தடுப்பதால் அவற்றைப் பாசங்கள் என வழங்கப்படுகிறது..

இம்மும்மலங்களில் ஆணவமே உயிரின் தொடக்கத்தில் இருந்து பற்றியிருப்பதால் அதை "சகமலம்", மூலமலம்" என அழைத்தனர். ஆணவம் உயிரை மயக்கி நல்ல சிந்தனைகளை மறக்கச்செய்து மெய்ப்பொருளாகிய கடவுளை உணராபடி உயிர்களிடத்தில் "நான்","எனது" என்ற அகந்தையை, மமதையை உருவாக்குகிறது. அகந்தை என்ற அகப்பற்றும், மமதை என்ற புறப்பற்றும் நிலையில்லாதவற்றையெல்லாம் நிலையானது என உயிர்களை நம்ப வைக்கும். ஆணவமானது உயிர்களிடத்தில் பொதுநலத்தை மறைத்து, தன்னலத்தை வளர்க்கும். தீய செயல், குறுகிய மனப்பான்மை போன்றவற்றை உருவாக்கும். இந்த ஆணவத்தை இறைவனால் மட்டும்தான் போக்கமுடியும்.

இந்த ஆணவத்தை உயிர்களிடத்தில் இருந்து போக்குவதற்கு மாயை என்ற மலம் உதவுகிறது. அதனால்தான் உமாபதி சிவாச்சாரியார் சொல்லுகிறார். "விடிவாம் அளவும் விளக்கனைய மாயை" என்றார். அதாவது உயிர்களுக்கு முத்தி கிடைக்கும்வரை அவை மூழ்கிக்கிடக்கும் இருளைப்போக்க மாயையாகிய விளக்கு உதவுகிறது. உயிர் உலக அனுபவங்களினூடாக பாவங்களிலிருந்து விடுபட்டு இறைநிலையை அடையவேண்டும் என்பதற்காக மாயையின் தோற்றங்களான தனு, கரண, புவன போகங்களின் துணையூடாக மனிதன் பூமியில் இறைவனால் படைக்கப்படுகிறான். உயிர்கள் மாயாமலத்தோடு சேர்ந்து பலபிறப்புக்களை எடுப்பதற்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள பிறப்பும், இறப்பும் தொடரோட்டமாக வரும்போது அவை கன்மங்களான நல்வினை, தீவினைகளைச் செய்ய நேரிடுகிறது. உயிர்கள் பிறப்பின்போது பல உடம்புகளை எடுக்க நேரிடுகிறது.

இதை மணிவாசகர் சிவபுராணத்தில் குறிப்பிடுகிறார்.

"புல்லாகிப், பூடாய்ப், புழுவாய், மரமாகிப், பல்விருகமாகிப், பறவையாய், பாம்பாகிக், கல்லாய், மனிதராய்க், பேயாய்க், கணங்களாகிப், வல்லசுரராகித், முனிவராய்த், தேவராய்" என எல்லாப்பிறப்பும் பிறந்து, மெலிந்து, இறுதியில் உன் திருவடிகள் கண்டு வீடு பெற்றேன. என்றார்.

உயிர்கள் பிறப்புகளின்போது பல்வகை உடம்புகளை எடுக்கின்றன. அதன்போது பல நல்வினை, தீவினைகளைச் செய்கின்றன. அவைகள் சேர்ந்து எமது பிறவிகளுக்கு பாவ, புண்ணியங்களாக மாறுகின்றன. நாம் மனிதனாகப் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும்போது செய்யும் வினைகள் "ஆகாமியம்" எனவும், மனிதர்களால் இப்பிறவியில் அனுபவிக்கப்படும் முன்வினை பிரார்த்தம்" எனவும், நாம் அனுபவித்ததுபோக எஞ்சியிருக்கும் வினை "சஞ்சிதம்" எனப்படும். இவ்வாறான நல்வினை,தீவினை இரண்டுமே பிறவிகளின் தொடருக்கு காரணமாகின்றன. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்." என்கிறார் வள்ளுவர். மனிதன் பல பிறவிகள் எடுக்கும்போது அங்கே பிறவித் துன்பத்துக்கான காரணத்தை அறிய முற்படுகிறான். துன்பத்தினை தாங்கமுடியாது அதைப்போக்க முற்படுகிறான். "மனிதன் ஏன் என்னைப் படைத்தான்" என்பதற்கான அறிவைத் தர்க்கரீதியாகப் பெற்றுக் கொள்கிறான். தனது தர்க்கரீதியான அறிவின்மூலம், தர்மத்தை அறிந்து அதனை வலியுறுத்தி வாழ முற்படுகின்றான்.

இங்குதான் எமக்கு இறைநூலான திருக்குறள் உதவுகிறது. பொதுமறையாகிய திருக்குறளின்படி தர்மவழியில் எப்படி நடப்பது என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார் வள்ளுவர். அதாவது "அ" என்ற ஒலி எல்லா மொழிகளுக்கும் முதலாவதாக இருப்பதுபோல் உயிர்கள் அனைத்திற்கும் அவனே

முதல்வன் என்று தொடங்குகிறார் வள்ளுவர்.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் நான்கு பருவங்களை அடைகிறான். அவை பிரமச்சாரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், துறவறமாகும். இப்பருவங்களில் செய்யும் வினைகளுடாக அவனது பாவபுண்ணியங்களும் வேறுபடுகின்றன. மனிதனாகப் பிறந்த நோக்கத்தை அறிந்துவிட்டோம் எனவே எப்படி பாவங்களைக் குறைத்து புண்ணியங்களைக் கூட்டலாம் என அறிவோம்

மனிதன் குழந்தையாகி, தர்க்க அறிவு வளர்ந்து மாணவப்பருவம் அடைகிறான். இங்கே அவனுக்கு கல்வி கிடைக்கிறது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி. திருவள்ளுவர் சொல்கிறார். "ஒருவர் ஒரு பிறப்பில் கற்கும் கல்வியானது அவனது ஏழு பிறப்பிற்கும் துணை புரியும்" என்றார். கற்றலினூடாக பாவ, புண்ணியங்களை, தர்மத்தை அறிய முற்படுகிறான்.

ஆகவே மாதா, பிதா, குரு, தெய்வம் பணிந்து அவர்கள் சொற்கேட்டு, கல்வி கற்பானாயின் மனித எதிர்காலமும், வாழ்வும் சிறந்து விளங்கும். குரு என்பவர் பாசத்தை நீக்குபவர். அஞ்ஞானத்தைப் போக்குபவர். பிறவிகள் ஒழிக்க உதவுபவர். நாம் வணங்கும் திருவருட்சக்தியே எம்மை நல்வழிப்படுத்துவதற்காக மானிடப் போர்வையில் குருவாக வருகிறார் என்பது ஐதீகம். எனவே குரு சொல் கேட்டு கற்கும் வயதில் கற்று நாம் செய்யும் தீவினைகளைக் குறைக்கவேண்டும்.

இறைவன் உயிரினங்களைகப் படைக்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒரு அரிய சக்தியைக் கொடுக்கிறான். அதையே ஔவையார் சொல்கிறார்.

"வான்குருவியின் கூடு வல்லரக்குத் தொய்கறையான்
தேன்சிப்பி யாவற்றிற்குஞ் செய்யரிதால் - யாம் பெரிதும்
வப்போமே என்று வலிமை சொல வேண்டாங்காள்
எப்போர்க்கும் ஒவ்வொன்று எளிது" என்கிறார்.

எனவே மனிதன் தனது திறமையில் நம்பிக்கை கொண்டு ஆளுமையை வளாத்துக்கொள்ள வேண்டும். மற்றவர் வளர்ச்சியில் பொறாமை கொள்ளாது தனது திறமை எதுவென அறிந்து அதனை வளர்த்து சமுதாயத்திற்கு உதவவேண்டும். செய்யுந்தொழிலே தெய்வமாகக் கருத வேண்டும். பிரமச்சரியத்தில் மனிதர்களுக்கு துணைதேடும் இயல்பை இறைவன் கொடுக்கிறான். அவன் தர்மவழியில் வருவானாயின் அவனுக்கு சிறந்த துணையை கடவுள் காட்டுகிறார்.. பிரம்மசரியம் என்பது இல்லறத்தின் ஆரம்பம். பிரம்மச்சரியத்தில் மனிதன் மற்றவர்களிடம் இருந்து அன்பைப் பெறுகிறான். தனக்குரிய துணையைக் கண்டுபிடித்த மனிதன் தன் துணையுடன் குமுகாயத்தில் ஏற்படும் நன்மை, தீமைகளில் பங்கு பெறுவேன் எனச்சொல்லி குமுகாயத்தில் தனது உற்றார், உறவினர்கள் முன் இறைவன் சாட்சியாக திருமண பந்தத்தில் புகுந்து இல்லறத்தைத் தொடங்குகிறான். "இல்லறம்அல்லது நல்லறம் அன்று" என்றார் ஔவையார். அதாவது கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வதைவிட நல்லறம் வேறில்லை என்கிறார்.

இல்லறத்தில் ஈடுபடுபவர்களுக்கு என்று சில கடமைகள் உள்ளது. அதைத்திருவள்ளுவர் இரு குறள்களில் சொல்லுகிறார்.

"துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" என்றார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை" என்கின்றார்.

அதாவது இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் வாழ்க்கையைத் துறந்த துறவிகளுக்கும், வறியோர்கள், அடைக்கலம் என்றுவந்த அனாதைககள், அனாதைகளால் கைவிடப்பட்ட பிணங்கள் எல்லாவற்றிற்கும் துணையாக இருக்கவேண்டும். அவர்களுக்கான கடமைகள், உதவிகள் செய்யவேண்டும் என்பதாகும்.அது மட்டுமல்லாமல் இறந்த தாய், தந்தையர்,

மூதாதையர், உறவுகளை நினைத்து பிதிர்க்கடன் செய்தல், குலதெய்வத்தை வழிபடுதல், திருப்பணிக்கு உதவுதல், வீட்டிற்கு வந்த விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று விருந்தளித்தல், துன்பத்தில் இருக்கும் உறவுகளுக்கு உதவி செய்தல் மட்டுமல்லாது தானும் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழுதல் என்பனவையாகும். எனவே இதற்கு தகுதியில்லாதவன் இல்லறத்தில் இணையக்கூடாது.

மேற்கூறிய கடமைகளினூடாக தனக்குரிய புண்ணியங்களை சேர்த்துக்கொள்ளலாம். எமது இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் சொல்லுகிறது. இராவணன் இறைவனிடம் சாகாவரம் பெற்ற ஒரு சிறந்த வீரனாக இருந்தபோதிலும் அவன் தனது வாழ்வின் அடிப்படைக்குரிய முக்கியமான அறநெறியை அறியாத அறியாமையினால் இராமனின் மனைவியில் ஆசை கொண்டு, கவர்ந்து சென்று தனது சிறப்பையும், மதிப்பையும் இழந்தான். அழிந்தான் என்கிறது. அதேபோல மனிதன் தனு, கரண, புவன, போகங்களினூடாக மாயையில் இருக்கும் மனிதன் "தர்மம் தலைகாக்கும்" என்பதை உணர்ந்து அறநெறியில் வாழ்வானாயின் இறைவன் கூட அவனிடம் பிச்சை மேட்பார் எனச் சொல்லும் கதை மகாபாரதம். அதாவது கர்ணன் என்பவன் அறநெறியில் வாழ்ந்த வள்ளல். அவன் சாகும் தறுவாயில் இருக்கும்போது அவனது உயிரை எடுக்க தர்மதேவதை பின்நிற்கிறாள். அவன் செய்த தர்மத்தை அவனிடமிருந்து எடுத்தால்தான் அவனது உயிர் போகும். அதன்மூலம் எதிரிகளைக் கொன்று தர்மம் நிலைநாட்ட முடியும் என்றறிந்த கடவுள் கிருஷ்ணர் அந்தணர் வேடம் கொண்டு சாகும் தறுவாயில் இருக்கும் அவனிடம் யாசிக்கிறார். அந்த நிலையிலும் கர்ணன் சொல்லுகிறான்: "இருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். இல்லை என்று என்னை சொல்ல வைக்காதே, நான் கொடுக்கக்கூடியதை மட்டும் கேள்" என்றான். " நீ இதுவரை வாழ்நாள் முழுவதும் செய்த தர்மத்தினால் வந்த புண்ணியத்தையும், இப்போது செய்கிற புண்ணியத்தையும் எனக்கு தானமாகக் கொடு" என்றார் கிருஷ்ணர். இங்கே மனிதனின் உயர்ந்த தர்மநிலை தெரிகிறது.

இல்லறத்தில் வாழும் மனிதன் மக்கட்பேறு பெற்ற மற்றவர்களிடம் அன்பு செலுத்தி, இனியவை பேசி, அறம் வளர்க்கத் தலைப்படுகிறான். இதன்போது நல்வினைகளான செய்நன்றி செய்தல், நடுவு நிலை நிற்றல், மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் தீய வழியில் செல்லாமல் அடக்குதல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், பொறுமை காத்தல் போன்ற நல்வினைகளைச் செய்ய வேண்டும். இதனால்தான் நற்பேறு அடைய முடியும். அதற்குமாறாக தான் பிறந்த நோக்கம் அறியாமல் அறியாமை சூழ்ந்து ஆணவத்தால் பொறாமை, கோபம், வெஃகாமை, பிறர் பொருளில் பற்று வைத்தல், தீய சொற்கள், தீய செயல்கள் என்பனவற்றை செய்வானாயின் தீவினைகள் மூலம் பாவங்களைச் சேர்த்துக்கொள்கிறான்.

ஆங்கிலப் பழமொழி ஒன்று சொல்கிறது –

If wealth is lost nothing is lost
If health is list something is lost
iIf charactor is lost everything lost"

என்பதாகும். அதாவது செல்வத்தை இழந்து விட்டாயா - எதையும் நீ இழக்கவில்லை.
ஆரோக்கியத்தை இழந்து விட்டாயா – ஆம் சிலதை இழந்து விட்டாய்
நல்ல குணங்களை இழந்து விட்டாயா – எல்லாவற்றையும் இழந்து விட்டாய்"

அதாவது நல்ல குணங்களை இழந்தவன் தீவினைகளால் பாவத்தை தேடிக்கொள்கிறான். அதனால் இந்தப் பிறப்பில் மட்டுமல்லாது பல பிறப்புகளிலும் துன்பத்தையே அனுபவிக்கப்போகிறான் என்பதே கருத்தாகும்.

அடுத்தது வானப்பிரஸ்தம். இது துறவறத்திற்கு ஆயத்த நிலை. அதாவது வேதாந்த மகரஷி சொல்லுகிறார். இளமை, இல்லறம் இரண்டையும் முறையாக ஆற்றியதால் பொருள், இன்பம் என்னும் இரண்டினதும் அறிவு கிடைக்கிறது. இதுவே வானப்பிரஸ்தம், அதாவது தன்னை உருவாக்கிய, வாழ வைத்த சமுதாயத்திற்கு உடல், அறிவு என்பனவற்றை அர்ப்பணித்து சமூகத்தொண்டு செய்தல் ஆகும். பழம் பழுத்தவுடன் விழுவதுபோல் குடும்பப்பற்று, பொருட்பற்று போன்ற சிற்றெல்லைகளைத்தாண்டி மனிதன் இயற்கை, உலகம் போன்ற விரிந்த மனதோடு உலக மக்கள் அனைவருக்கும் தான் பெற்ற அறிவையும், தன்னையும்

சமுதாயம் முழுவதும் நன்மை பெறும் வகையில் ஒரு சமூகத்தொண்டனாக மாற்றுவதாகும். இதன் வழி அவனுக்கு நல்வினை செய்தல், புண்ணியங்கள் பெறுதல் பல கிடைக்கின்றது. ஈகை செய்வதனால் புகழ், அருள் கிடைக்கின்றன.

அடுத்த கட்டம் துறவறம். மனிதனில் ஆணவம் செயலற்றுப்போகும் நிலை துறவறமாகும். இது இலகுவானது அல்ல. அதற்கு அஞ்சாமை அகல ணேடும். மாயை ஏற்படுத்தியுள்ள பொய்யறிவு நீங்கவேண்டும். பாசங்களான ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றின் பிணைப்புகள் விடுபடவேண்டும். உலகப்பற்றுப்போக வேண்டும். இறைவனைத்தவிர வேறு எதையும் கருத்திற் கொள்ளாத நிலை உருவாகவேண்டும் அத்தகை பரிபக்குவநிலை அடைந்தால்தான துறவறம் வெற்றியடையும். இறைவனோடு கலத்தலாகிய பேரானந்தநிலை ஏற்படுகிறது. துறவிகளுக்கு ஞானம் சைகூடுவதற்கு இறைவனின் துணைவேண்டும். ஞானநிலை வந்துவிட்டால் இறைவனே குருவாக வந்து எம்மை ஆட்கொள்ளுவார் என எமது சமயநூலகள் கூறுகின்றன.

ஔவையார் நல்வழியிற் சொன்னார்

“புண்ணியமாம் பாவம்போம் போனநாட்செய்தவவை
மண்ணிற்பிறந்தார்க்கு வைத்த பொருள் -எண்ணுங்கால்
ஈதொழி வேறில்லை யெச்சமயத்தோர் சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்”

அதாவது புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் ஒழியத்தக்கது. முற்பிறப்புப் பாவபுண்ணியங்களே பூமியில் பிறந்து அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்கு காரணம். ஆகவே பாவம் நீங்கிப் புண்ணியம் செய்தல் வேண்டும்.

எனவே மானிடப்பிறவி எடுத்த ஒருவன் தனது பகுத்தறிவு மூலம் நான் ஏன் மனிதனாகப் பிறந்தேன் என்பதற்கு விடை காணுகிறான். அதன் வழி அப்பிறவியில் அவன் பயன் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு பருவத்திலும் நல்வினைகளைச் செய்ய வேண்டும். தீய எண்ணங்களைப் போக்க வேண்டும். அதற்கு தினமும் இறைவழிபாடு, நல்ல நூல்களைக் கற்றல், தொண்டு செய்தல், குருவை வணங்குதல், நல்லோரிடம் பேசுதல் போன்றவற்றால் ஆணவத்தின் வலிமையைக் குறைத்துக் கொள்ளலாம், ஆணவம் வலிமை குறைந்த காலத்தில் செய்யும் வினை பற்றற்ற வினையாகும். அதாவது நான் செய்கிறேன் என்று நினைக்காமல் கடவுள் சித்தமாக எல்லாம் நடக்கிறது என்று பயன் கருதாது செய்வதாகும். அதுவே மோட்சத்திற்கு வழிவகுக்கும். மேலும் மதங்களின் நோக்கம் உயிர்கள் கடவுளை அடைதல் வேண்டும். அதற்கு நாம் கடவுள்மீது பக்தி செலுத்தி பூசித்தல் வேண்டும். கோயிலுக்குச் செல்லுதல், கடவுள் பாட்டுகள் பாடுதல் வேண்டும். கடவுள் எங்கும் உள்ளார் என்பதால் உயிர்களிடத்தில் அன்பாய் இருந்து நல்வினை செய்து புண்ணியங்கள் பல பெற்று ஆணவம் நீங்கி இறைவனை அடைதல் வேண்டும்.

## பக்தி என்பது ஈசனிடம் வைக்கும் அன்புதான்

அன்பிற்கு அது யார் யாரைக் குறித்து வைக்கப்படுகிறதோ என்பதைப் பொறுத்துத்தான் வேறு வேறு பெயர்கள் உண்டு. சம வயதுடையவர்கள் மேல் வைக்கும் அன்பு சினேகம், நட்பு எனப்படும். பெரியவர்களிடம் வைக்கும் அன்பை மரியாதை என்பர். குழந்தைகளிடம் வைக்கும் அன்பை வாத்ஸல்யம் என்பர். நாயகன் நாயகி அன்பை சிருங்காரம் என்பர். எம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் நம்மைவிடக் கஸ்டப்படுகிறவர்களிடம் வைக்கும் அன்பு பரிவு. நம்மை விட பெரியவர்கள் நம்மிடம் பிரியமாயிருக்கும்போது அது அருள், கிருபை எனப்படுகின்றது. வெறுமனே பரிவாக, ஆறுதல் தருவதாக மட்டுமின்றி. தன் நிலையை, கஸ்ட நிலையைப் போக்கடிக்கும் சக்தியே மகான்களின் அருளாக இருக்கிறது. அதன் உச்சிதான் ஈஸ்வரன் நம்மிடம் வைக்கும் பரிவான அன்பு, பரம கருணை, அனுக்கிரகம் என்று அதற்குப் பெயர். நாம் வைக்கும் உயரிய அன்புதான் பக்தியாகிறது.

(ஜகத்குரு காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்)

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

இப்போதெல்லாம் கண்ணனும் தாத்தாவும் மாலை வேளையில் தமிழ்த் தொலைக்காட்சியில் வரும் மகாபாரதம், மகான்களும் அதிசயங்களும் நிகழ்ச்சிகள் இரண்டையும் பார்க்கத் தவறுவதில்லை. ஜெயஜெய சங்கர என்ற பாடல் ஒலிக்கத்தொடங்க தாத்தா மனமுருகிக் கண்களை மூடி இருக்கும் நிலையைக் கண்ணன் மிகவும் இரசிப்பான்.

கண்ணன்: என்ன தாத்தா! இந்தப்பாடலைக் கேட்டதும் உங்களையே மறந்து விடுகிறீர்களா?

தாத்தா: இந்தப் பாடலைக் கேட்டதும் என் கண்முன்னே காஞ்சிப்பெரியவரே வந்து நிற்பதுபோலத் தோன்றும் கண்ணா! அதனால்தான் கண்ணை மூடிக்கொள்வேன்.

கண்ணா: அப்படியா தாத்தா? அவ்வளவு பக்தி வருமா?

தாத்தா: ஆமாம் கண்ணா! பாடலின் பொருளைப் புரிந்து கொண்டால் பக்தி வரும். பாடலுக்கேற்ற நல்ல இசையும் சேர்ந்துவிட்டால் சொல்லவே தேவையில்லை

கண்ணா: "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்று சைவ முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூசையின்போது சொற்பொழிவாற்றிய ஒருவர் சொன்னது ஞாபகம் வருகிறது தாத்தா!

தாத்தா: கேட்கும் நல்ல விசயங்களை மறக்காது மனதில் வைத்திருக்கிறாயே கண்ணா! கெட்டிக்காரன்! மாணிக்கவாசகர் பாடிய திருவாசகங்கள் எல்லாமே அவரது அளவு கடந்த பக்தியைக் காட்டுகின்றன..

கண்ணன்: எனக்குத் தெரிந்தவற்றுள் மிகவும் பிடித்தவை இரண்டு. ஒன்று 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ; மற்றது 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே'

தாத்தா: இவையிரண்டும் இனிமையான பாடல்கள். எவருக்கும் பிடிக்கத்தக்கவை. மணிவாசகர் பாடிய 'பிடித்த பத்து' என்னும் பகுதியில் உள்ளன.

கண்ணன்: அதற்கு ஏன் 'பிடித்த பத்து' என்று பெயர் வந்தது?

தாத்தா: தாய் தன் குழந்தையை யாரிடமாவது விட்டுவிட்டு வேலைக்கோ அல்லது வேறு எங்காவது போகும்போது குழந்தை அம்மாவின் காலை இறுக்கிப்பிடித்துக் கொண்டு போகவேண்டாமென்று அழுவதை நீ பார்த்திருப்பாயே கண்ணா!

கண்ணன்: ஆமாம் தாத்தா! எல்லாக்குழந்தைகளும் அப்படி அழும்.

தாத்தா: அதைப்போலவே மாணிக்கவாசகரும் இறைவனின் காலைப் பிடித்துக்கொண்டு எங்குமே உன்னைப் போகவிடமாட்டேன் என்று சொல்வதாக இந்தப் பாடல்களின் முடிவில்வரும் வரிகள் உள்ளன.

கண்ணன்: அம்மாவிடம் குழந்தை எவ்வளவு அன்பாக இருக்கிறதோ அவ்வளவு இறைவனிடம் அன்புள்ளவராக மணிவாசகர் இருந்திருக்கிறார் என்ன தாத்தா?

தாத்தா: அம்மாவின் அன்பைவிட இறைவனின் அன்பு அதிகமானது என்பதை 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ' என்று ஆரம்பிக்கும் பாடலில் மணிவாசகர் கூறுகிறார் கண்ணா!

கண்ணா: அம்மாவின் அன்பைவிட ஆண்டவனின் அன்பு அதிகமானதா? அதெப்படித் தாத்தா?

தாத்தா: உலகில் அம்மாவின் அன்புக்கு இணையாக எதுவும் இல்லை கண்ணா! ஆனால் ஆண்டவன் எல்லாம் அறிபவர். சர்வசக்தி (சர்வவல்லமை) உடையவர். எங்களுக்கு எது நல்லது, எது தீமையானது என்பது கடவுளுக்குத் தெரியும்.

அம்மாவுக்கு நாளைக்கு எது நடக்கும் என்பது தெரியாது. நடக்க இருப்பதைத் தடுக்கவும் அம்மாவால் முடியாது. ஆண்டவனால் எதையுமே செய்யமுடியும். அவரது பெருங்கருணையினால் எங்களைக் காத்துவருகிறார்.

**கண்ணா:** காஞ்சிப்பெரியவரும் தமது அடியார்களுக்கு அவர்கள் வேண்டிய வற்றையெல்லாம் அருளி துன்பத்தைப் போக்குகிறார். அதுபோலவா தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! ஒருமுறை அவருக்குத் தொண்டு செய்துகொண்டிருக்கும்ஒருவரை உடனடியாக வீட்டிற்குப் போகும்படிபணிக்கிறார்.

**கண்ணா:** ஆமாம் தாத்தா! அவருக்குப் போகவே மனமில்லை. பெரியவரின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தே போகிறார். வீட்டிற்குப்போனதும்தான் தன்தாயார் கடுமையான நோயால் துன்பப்படுவதைக் கண்டார்.பெரியவரின் பெருங்கருணையை எண்ணிப்பார்க்கிறார். பெரியவரின் அற்புதங்களைப் பார்க்கும்போதுதான் கடவுளின் கருணை என்னஎன்பது புரிகிறது தாத்தா!

**தாத்தா:** மக்களுக்கு வழிகாட்டி அவர்களை நல்வழிப்படுத்தவே கடவுள் காலத்திற்குக் காலம் மகான்களை உலகத்திற்கு அனுப்பி வைக்கிறார்.

**கண்ணன்:** போனமுறை வெளிவந்த கலசம் இதழில் சுவாமி விவேகானந்தரைப்பற்றி வந்ததே தாத்தா! அவரும் இப்படி ஒரு மகான்தானே!

**தாத்தா:** ஆமாம் கண்ணா! அவரும் கடவுள் உலகுக்கு அனுப்பி வைத்தமகான்களில் ஒருவர்தான். முதன்முதல் இந்துசமயத்தைப்பற்றிஉலகம் அறியும்படியாக 1892ஆம் ஆண்டு அமெரிக்காவில் சமயச் சொற்பொழிவாற்றியவர் சுவாமி விவேகானந

**கண்ணா:** காஞ்சிப்பெரியவரே மக்களுக்காக எவ்வளவு செய்திருக்கிறார் என்பதை இந்தப் படத்தைப் பார்க்கும்போதுதான் எங்களுக்குத்தெரிகிறது தாத்தா!

**தாத்தா:** இதற்காகவே கடவுள் உருவில் மகான்களைப் படைக்கிறார். இவர்களின் அருள் வாக்குகள் எல்லாம் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. காஞ்சிப்பெரியவரின் அருள்வாக்கு “தெய்வத்தின்குரல்” என்ற புத்தகமாக வந்துள்ளது.

**கண்ணன்:** அதில் என்ன விசயங்கள் இருக்கிறது தாத்தா?

**தாத்தா:** அதனைப் படிப்பதால் எமது சமயத்தைப்பற்றிய தெளிவான அறிவு வரும். எங்களுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் போய்விடும்.நாங்கள் எப்படி வாழவேண்டும் என்பதை எல்லோருக்கும் விளங்கும் வகையில் கூறியிருக்கிறார்.

**கண்ணன்:** அவரை நாங்கள் சந்திக்கவில்லையே என்ற குறையை இந்தப் புத்தகம் போக்கிவிடுமா தாத்தா?

**தாத்தா:** நிச்சயமாகக் கண்ணா! கடவுளே அடியாரின் துன்பத்தைத் தீர்க்க அவர்கள் வேண்டிய உருவில் வந்து அருள்புரிந்திருக்கிறார் கண்ணா! திருவிளையாடற்புராணம் என்னும் புத்தகத்தில் கடவுளின் திருவருள்பற்றிய கதைகள் உண்டு.

**கண்ணன்:** அதனை நான் கட்டாயம் படிக்கவேண்டும் தாத்தா! எங்கே எனக்கு அதில் உள்ள கதை ஒன்று சொல்லுங்கள் தாத்தா. பார்ப்போம்.

**தாத்தா:** சரி! நினைவிலுள்ள ஒரு கதையைச் சொல்கிறேன் கேள். சிவபெருமான் தாயாகிவந்து ஒரு பெண்ணுக்கு உதவி செய்கிறார்.

**கண்ணன்:** சிவபெருமான் தாயாகி வந்தாரென்றால் அந்தப்பெண் மிகுந்த பக்தி யுடையவளாக இருந்திருப்பாள் இல்லையா தாத்தா?

**தாத்தா:** அந்தப்பெண்ணின் தாயார் மிகுந்த சிவபக்தியுடையவள் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி என்ற நகரில் ஒரு மலைக்குன்றில் ஒருசிவன் கோயில் இருக்கிறது. அதன் வடக்கே இருக்கும் திருவானைக்கா என்ற ஊரிலிருந்து ஒரு மூதாட்டி தினமும் பூமாலை கட்டிக் கொண்டுவந்து சிவனுக்குச் சாத்தி

வணங்குவார். அவ்வழியில் இருக்கும் காவிரி என்னும் பெரிய ஆற்றைக் கடந்தே கோயிலுக்கு வருவார்.

**கண்ணன்:** அந்தப் பெரிய ஆற்றை அந்த மூதாட்டி எப்படிக் கடக்க முடியும் தாத்தா?

**தாத்தா:** அந்தக்காலத்தில் ஓடத்தின் மூலமாகத்தான் ஆற்றைக் கடப்பார்கள். இப்போது உள்ளதைப்போலப் பாலங்களோ, வண்டி வசதிகளோ இருக்கவில்லை கண்ணா!

**கண்ணன்:** அப்படியிருந்தும் அந்த மூதாட்டி ஒவ்வொருநாளும் கோயிலுக்குப் போய்வருவது அவரின் மிகுந்த பக்தியைக் காட்டுகிறது தாத்தா!

**தாத்தா:** ஆமாம் கண்ணா! ஒருநாள் அவர் கோயிலுக்குப்போய்த் திரும்பும்போது கடும் மழை பெய்து காவிரி ஆறு பெருக்கெடுத்து ஓடியது.ஓடங்கள் எதுவுமே ஓடவில்லை. அன்று காலை அவளின்மகளுக்குக் குழந்தை பிறக்கப்போவதற்கான அறிகுறி தோன்றியிருந்தாலும் விரைவாகக் கோயிலுக்குப் போய்வந்துவிடலாமே என்று எண்ணியே அந்த அம்மையார் புறப்பட்டிருந்தார். இப்போது எப்படிவீட்டுக்குப் போய் மகளுக்கு உதவிசெய்வது என்று தெரியாமல் கலங்கினார். கடவுளிடம் மன்றாடுவதைத்தவிர வேறுவழி ஒன்றும் இருக்கவில்லை.

**கண்ணன்:** கடவுள் உதவினாரா தாத்தா? பிறகு என்ன நடந்தது.

**தாத்தா:** மகள் பிரசவவேதனையில் தவித்தாள். உதவ எவருமேயில்லை. அம்மாவைக் காணவில்லையே என்று அழுதுகொண்டேயிருந்தாள். அப்போது அவள் தாய் வருவது போலத் தெரிந்தது. தாயின் உருவில் வந்த இறைவன் அவளுக்கு வேண்டிய உதவிகளை செய்தார். குழந்தை சுகமாகவே பிறந்துவிட்டது. அந்தப் பெண்ணுக்கு வேண்டிய பத்தியங்கள் எல்லாம் குறைவில்லாமல் செய்தார். தாய் வரும்வரை கூடவே இருந்தார்.

**கண்ணன்:** தாய் வந்துவிட்டதாகவே அந்தப் பெண் மகிழ்ந்திருப்பாள். என்ன தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! அம்மாவைக் கடவுள் சரியான நேரத்திற்குஅனுப்பிவிட்டாரே என்று மகிழ்ந்தாள்.

**கண்ணன்:** கடவுள் உணவு சமைத்ததை நம்பவே முடியவில்லை! தாய் எப்போது வந்தா?

**தாத்தா:** மூன்று நாள் கழிந்த பின்பே வெள்ளம் வற்றியது. தாயும் வீட்டிற்கு வந்தார். மகள் எப்படி இருப்பாளோ என்று ஏங்கியபடி தாய் வீட்டினுள் நுழைந்தார். அங்கு மகளும் குழந்தையும் சந்தோசமாக இருப்பதைக் கண்டார். மகளே! யார் உன்னைக் கவனித்துக் கொண்டார்கள் என்று கேட்டாள். "நீங்கள்தானே எனக்கு எல்லாம் செய்தீர்கள்"என்றாள் மகள்.


**கண்ணன்:** அப்போது தாய் என்ன செய்தார்? என்ன சொன்னார்?

**தாத்தா:** தாய் மகளைக் கட்டியணைத்துக்கொண்டு கடவுளே உனக்கு எல்லா உதவிகளையும் செய்தார். நான் காவிரியாற்றின் மறுகரையிலிருந்து அழுதுகொண்டே கடவுளை வேண்டிக் கொண்டிருந்தேன். நான் அவ்வளவு பாக்கியசாலியா? கடவுளின்கருணையே கருணை! அம்மா உங்களின் கடவுள் பக்தியே என்னைக் காப்பாற்றியது என்று தாயைக் கட்டியணைத்துக் கண்ணீர் விட்டாள் மகள். இறைவனின பெருங்கருணையை நினைத்து மனம் உருகினார் தாயான அந்த மூதாட்டி.

**கண்ணன்:** கடவுள் தாயைவிட அன்பு கொண்டவர் என்று மாணிக்கவாசகர்சொன்னது மிகவும் உண்மையே தாத்தா.

**தாத்தா:** கண்ணா! உனக்கும் கடவுளின் கருணைபற்றிப் புரிய முடிகிறது என்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. மகாபாரதம் தொலைக்காட்சியில் வரப்போகிறது. வா. பார்ப்போம். கண்ணனும் தாத்தாவும் மகாபாரதம் தொடர்பார்க்கத் தயாராகிறார்கள்.

# நான் – எனது



நான்என்பது ஆணவம். எனது என்பது அகங்காரம். நமக்கென்று இந்த பூமியில் எதுவுமே இல்லை. பிறக்கும்போது உடலில் ஆடைகூட இல்லை. போகும் போது சிதை சுட்டவுடன் முதலில் பொசுங்கிப் போவதும் ஆடைதான்! எதையும் கொண்டு வரவுமில்லை. கொண்டு போகப் போவதுமில்லை. ஆனாலும் இந்த பூமியில் ஏதோ ஒன்றைத்தேடி நாம் படும் அல்லல் கொஞ்ச நஞ்சமல்ல. வாழ்க்கையின் சூட்சுமம் நமக்கு புரியவில்லை என்பதற்காக அந்த ஆண்டவன் போடுவதைத் தப்புக்கணக்கு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
இப்படித்தான் இருந்தார் சுகதேவர் என்ற முனிவர். முனிவர் என்பவருக்கு எந்தவித கெட்ட குணமும் இருக்கக்கூடாது. ஆனால் இவருக்கு பொறாமை என்கிற கெட்ட குணம் இருந்தது. யார் மீது தெரியுமா? சீதையின் தந்தை ஜனகர்மீது. இந்த ஜனகரை எல்லாரும் ராஜரிஷி என்கிறார்களே! ராஜாவாக இருப்பவர் எப்படி ரிஷியாக முடியும்!

அவரை சோதித்துப் பார்த்துவிட வேண்டியது தான் என்று மிதிலைக்கு கிளம்பிவிட்டார். ஜனகர் அவரை மிகுந்த பணிவுடன் வரவேற்றார். 'சுகதேவரே! தங்கள் வருகையால் தேசம் பெருமை பெற்றது. தாங்கள் அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டும். வாருங்கள் உணவருந்தலாம்' என உபசரித்தார். அவர்கள் உணவருந்தி முடிக்கவும் ஒரு அமைச்சர் வந்தார். ஜனகரின் காதில் ஏதோ சொன்னார். ;முனிவரே! தாங்கள் இளைப்பாறிக் கொண்டிருங்கள்! ஒரு பணியின் காரணமாக நான் வெளியே செல்ல வேண்டியுள்ளது. வந்தவுடன் நான் தங்களுடன் உரையாடுகிறேன். தங்கள் அனுமதி வேண்டும்' என்றார். முனிவரும் அனுமதியளித்தார். சிறிது நேரம் கழித்து ஜனகர் திரும்பினார். இருவரும் பலவிஷயங்கள் குறித்து பேசியபடியே நடந்து கொண்டிருந்தனர்.



பேச்சு சுவாரஸ்யத்தில அவர்கள் நீண்ட தூரம் சென்றுவிட்டனர். அப்போது குதிரையில் ஒரு வீரன் வேகமாகவந்தான். 'மகாராஜா, மகாராஜா, தாங்கள் அவசரமாக அரண்மனைக்கு வரவேண்டும். அரண்மனையில் தீப்பிடித்து தங்கள் உடமைகள் எரிந்து விட்டன' என்று பதட்டமாகச் சொன்னான். 'எனது உடமைகளா! அப்படி ஏதும் அங்கு இல்லையே' என்று அமைதியாகச் சொன்னார் ஜனகர். சுகதேவர ஐயையோ! தீப்பிடித்து விட்டதா! எனது கமண்டலத்தையும் ஆடைகளையும் அங்கே வைத்திருந்தேனே! அவை எரிந்திருக்குமே'! எனறு பதறினார். சற்று நேரம் கழித்து நிதானித்தார். 'ஆம், நான் என்ன பதில் சொன்னேன்! சாதாரண கமண்டலத்திற்கும் உடைகளுக்குமே பதறிப்போனேன். இந்த மன்னரோ அரண்மனையே எரிந்தும் பதட்டமில்லாமல் இருக்கிறார்.

தனக்கென்று அங்கே எதுவுமில்லை என்கிறார். நிஜத்தில் இவர்தான் ரிஷி என்று தன்னையறியாமலே மனதிற்குள் சொல்லிக்கொண்டார்.

-நன்றி தினமலர்

# அறத்தால் வருவதே இன்பம்

கண்புரை அகற்றும் திட்டத்தில் சங்க மூத்தோர் நிலையம்
Project : Cataract Surgery – Kilinochchi & Mullaitivu District

21-04-2014 அன்று சைவமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் முதியோர் நிலையத்தின் கூட்டம் சமூக சேவைச் செயலாளரான திருமதி புவனேஸ்வரி சபாரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அன்று சங்க யோகா அமைப்பைச் சேர்ந்த திரு. சிவ. அசோகன் அவர்கள் பங்கு பற்றியிருந்தார். அவர் அங்கு சங்கத்தின் யோக நிலையத்தினரால் இலங்கையின் மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களிற்கு செய்தும், தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் அறப்பணிகள் பற்றி மிகவும் விளக்கமாக ஒளிப்படக்காட்சிகளின் மூலம் திரையில் காட்டி விபரமாக உரையாற்றினார்.

தற்போது கண்பார்வை குறைந்தவர்களுக்கு சத்திர சிகிச்சை மூலம் கண்புரை அறுவை வைத்தியம் (Cataract) செய்வதற்கு ஒழுங்குகள் செய்திருப்பதாகவும் கூறியிருந்தார். ஒருவருக்கு சத்திர சிகிச்சை செய்வதற்கு பிரித்தானிய பணத்தில் £22.00 தேவையெனவும் கூறி, அதற்கு உதவியாக தாங்கள் இரு அமைப்புகளுடன் (ASST RR, Vision 2020) தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் உதவ முன்வந்துள்ளதாகவும் கூறினார். கண் சிகிச்சையாளரான Dr.Dias என்பவர் எதுவித கட்டணமுமின்றி சத்திரசிகிச்சை செய்வதற்கு சம்மதித்துள்ளார் என்றும் எடுத்துரைத்தார்.

இது மட்டுமல்லாமல் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடி தண்ணீர் வசதியற்றவர்களுக்கு குழாய்க்கிணறு அமைத்தல், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்குவது பற்றியும் எடுத்து விளக்கினார். உதவி செய்ய விரும்புபவர்கள் சைவ முன்னேற்றச் சங்க சமூகச் செயலாளர் மூலம் உதவலாம் என்றும் குறிப்பிட்டார். இப்பணிகளுக்கு சைவமுன்னேற்றசங்க மூத்தோர் நிலைய உறுப்பினர்கள் பலர் தாமாகவே முன்வந்து தங்களின் பங்களிப்பை மனமுவந்து வழங்கினார்கள்.

அவர்களின் விபரம்:-

| | | |
|---|---|---|
| திருமதி கனகாம்பிகை ராஜகுலசூரியர் | £ | 220.00 (Rs.50,000.00) |
| திருமதி. பாலாம்பிகை வேலாயுதம் | £ | 245.00 |
| திருமதி. விஜி.கனகேந்திரன் | £ | 200.00 |
| திருமதி. சரவணபவானந்தசிவம் தங்கரட்னம் | £ | 200.00 |
| திருமதி .வசந்தா மகாதேவன் | £ | 100.00 |
| திருமதி. புவனேஸ்வரி சபாரட்ணம் | £ | 100.00 |
| திருமதி. சத்தீஸ்வரி பத்மநாதன் | £ | 100.00 |
| திருமதி. ஶ்ரீபதி பொன்னுத்துரை | £ | 100.00 |
| திருமதி. இரட்னேஸ்வரி நவரட்ணம் | £ | 100.00 |
| திருமதி. அன்னலட்சுமி மூர்த்தி | £ | 100.00 |
| திருமதி. சிவபாக்கியம் கதிரவேலு | £ | 50.00 |
| திருமதி. பர்வதம் சிவபாதம் | £ | 50.00 |
| திருமதி. தவரட்னம் செல்லத்துரை | £ | 50.00 |
| திருமதி. மனோன்மணி குணரட்னம் | £ | 50.00 |
| திருமதி. சிவஞானவதி கந்தப்பு | £ | 50.00 |
| திரு. ஆறுமுகம் குமாரவாமி | £ | 50.00 |

# சைவ முன்னேற்றச் சங்க அறப் பணி

## மூத்தோர் நிலையமும் சிவபூமியும்

28-04-2014 அன்று சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் முதியோர் நிலையத்தின் கூட்டம் சமூக சேவைச் செயலாளரான திருமதி புவனேஸ்வரி சபாரட்னம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அன்றைய பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து பிரித்தானியா வருகை தந்திருந்த தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலரான கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் பங்குபற்றினார்கள்

அவர் தமது உரையில் தாங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் செய்யும் சேவைகளை விளக்கமாக அங்கு சமூகமளித்திருந்தவர்களுக்கு கூறினார்.-

1) சிவபூமி முதியோர் பராமரிப்பு இல்லம் - தொல்புரம், சுழிபுரம்
2) சிவபூமி வலது குறைந்தோருக்கான நிலையம் - கோண்டாவில்
3) சிவபூமி தங்கும் இல்லம் - கீரிமலை
4) ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லம் - தெல்லிப்பளை

முதியோர்களைப் பராமரிப்பதற்கு சகல செலவுகளுமாக மாதம் 7 இலட்சம் ருபாவரையில் தேவைப்படுவதாகவும் கூறினார். இந்த இல்லத்தில் மட்டும் ஆண்களும் பெண்களுமாக 60 பேர் வரையில் இருப்பதாகக் குறிப்பிட்டார். ஆதரவற்ற பெண்பிள்ளைகளைப் பராமரித்து, அவர்களுக்கு கல்வியறிவு தந்து, திருமணமாகும் வயதில் அவர்களுக்கு 15இலட்சம் ரூபா செலவில் வீடு ஒன்றும் அமைத்துத் தந்து திருமணம் செய்து கொடுப்பதாவும் குறிப்பிட்டார்..

அவரது பேச்சைத் தொடர்ந்து அங்கத்தவர்கள் பலர் சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் நன்கொடை தருவதாக கூறினார்கள். அவ்விபரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. ஞானம் அல்லிராஜா | 3,000.00 |
| 2 | திருமதி. தங்கரடணம் சரவணபவாந்தசிவம் | 2,000.00 |
| 3 | திருமதி. நாகேஸ்வரி ராசரட்ணம் (திரு. முருகானந்தம) | 1,000.00 |
| 4 | திருமதி. பாலாம்பிகை வேலாயுதம் | 500.00 |
| 5 | திருமதி ஜனகா தவமணி | 200.00 |
| 6 | திருமதி விஜி கனகேந்திரன் | 200,00 |
| 7 | திருமதி. சாந்தமணி வைத்தீஸ்வரன் | 200.00 |
| 8 | திருமதி. சிவகாம்பிகை நடராசா | 200.00 |
| 9 | திருமதி. இராணிமலர் விஸ்வநாதபிள்ளை | 100.00 |
| 10 | திருமதி சத்தியலட்சுமி நடராசா | 100.00 |

இந்தப்பணத்தை இக்கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துமாறும் அதில் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூத்தோர் நிலையத்தினரால் கட்டப்பட்டது என்று குறிப்பிடப்பட வேண்டுமென்றும் அங்கத்தவர்கள் கலாநிதி ஆறுதிருமுருகனிடம் கேட்டுக்கொண்டார்கள்.

# இலங்கை தென்மராட்சியின் மரபுரிமைச் சின்னமாகத் திகழும் மிருசுவில் கொட்டிகை அம்மன் கோவில்

(பேராசிரியர் ப. புஸ்பரட்னம் - தலைவர். வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



தென்மராட்சியில் ஆகம மரபு சாராத, ஆகமமரபு சார்ந்த ஆலயங்கள் பலவற்றைக் கொண்டுள்ள கிராமங்களுள் வரணி, கச்சாய், மிருசுவில், எழுதுமட்டுவாள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. யாழ்ப்பாணத்தில் மறக்கப்பட்டு வரும் பாரம்பரிய மரபுரிமைகள் பல தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டுவரும் கிராமங்களாக இவை காணப்படுகின்றன. ஒல்லாந்தரது ஆட்சியின் பிற்பகுதியில் இந்துமதம் மறுமலர்ச்சியடைந்தபோது பல புதிய ஆலயங்கள் இக்கிராமங்களில் தோற்றம் பெற்றன. ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய சமய விழிப்புணர்வால் குடாநாட்டில் ஆகமமரபு சாந்த பல ஆலயங்கள் தோன்றியபோது அதன் செல்வாக்கு தென்மராட்சியிலும் ஏற்பட்டது. அதேவேளை ஆகமமரபு சாராத புராதன ஆலயங்கள் பலவற்றிற்குப் புத்துயிர் அளித்த பிராந்தியமாகவும் தென்மராட்சி காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.

**தென்மராட்சியின் வரலாற்றுப் பின்னணி**

வட இலங்கையில் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு கொண்ட பிரதேசங்களில் தென்மராட்சியும் ஒன்றாகும். 90 சதுரமைல் பரப்புக்கொண்ட இப்பிராந்தியத்திற்குள் புராதன வரலாறு கொண்ட பல கிராமங்கள் காணப்படுகின்றன. 1980களில் யாழ்ப்பாணத்தின் பூர்வீக குடியிருப்புக்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட கலாநிதி இரகுபதி தென்மராட்சியில் நாவற்குளி, கச்சாய், வரணி, மந்துவில், மிருசுவில், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களில் கிறிஸ்துவ சகாப்த காலத்தில் இருந்து மக்கள் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்களை வெளிக்கொணர்ந்தார். 1994-95 காலப்பகுதியில் தென்மராட்சியில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட இக்கட்டுரை ஆசிரியர் இப்பிராந்தியத்தில் கிறீஸ்தவ சகாப்தத்தில் இருந்து புழக்கத்தில் இருந்த பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தார். அவற்றுள் உரோம மற்றும் தென்னிந்திய, இந்திய நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் பண்டைய காலத்தில் தென்மராட்சி மக்கள் பிறநாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமைக்குச் சான்றாகும்.

தமிழகத்தில் பல்லவராயன் பேட்டை, திருவாலங்காடு ஆகிய இடங்களில் கிடைத்த கி.பி.12ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக்கல்வெட்டுகள் வடஇலங்கைமீது படையெடுத்த சோழர் மட்டிவாழ் என்ற இடத்தில் நிலைகொண்டிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைப்பிடித்து தமிழ்நாடு கொண்டு சென்றதாகக் கூறுகின்றன. இக்கல்வெட்டுகளில் வரும் மட்டிவாழ் என்ற இடத்தை அறிஞர்களில் சிலர் தற்போது தென்மராட்சியிலுள்ள மட்டுவில் கிராமம் எனவும் வேறுசிலர் எழுதுமட்டுவாழ் எனவும் கூறுகின்றனர். இவ்விடம் எதுவாக இருப்பினும் இவ்விரு இடங்களும் தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைந்திருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரம் சோழர் ஆட்சியில் தென்மராட்சிப்பிரதேசம் வரலாற்றில் சிறப்புப் பெற்றிருந்தமைக்குச் சான்றாகும். 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நம்பொத்த என்ற சிங்கள இலக்கியம் வடஇலங்கையை தமிழ்ப் பட்டிணம் எனக்கூறும்போது தென்மராட்சிக்கு அண்மையில் உள்ள நாகர் கோவில் என்ற இடத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது.. 15ஆம் நூற்றாண்டில் எழுந்த கோகிலசந்தேஸ என்ற சிங்கள மொழியிலமைந்த குயில்விடு தூதுப்பிரபந்தம் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உட்பட்டிருந்த தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரியை சாவககோட்டை எனக் கூறுகின்றது. இதேபோல 16ஆம் நூற்றாண்டெழுந்த திரிசிங்கள கயிடம்ஸஹவித்தி என்றொரு இன்னொரு சிங்கள இலக்கியம் இவ்விடத்தை சவகிரி எனக் கூறுகிறது. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னர் வடஇலங்கையில் சாவகன் ஆட்சி இருந்ததை பாளி சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. அக்காலத்தில் தென்மராட்சி சாவகன் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததையே மேற்பட்ட இடப்பெயர்கள் உறுதி செய்கின்றன.

13ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண இராசதானியின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிராந்தியங்களில் தென்மராட்சியே மிகப்பெரிய நிர்வாகப் பிரிவாகும். இக்காலப்பகுதியில் தமிழகத்திலிருந்து ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வில் பல குடியேற்றங்கள் தென்மராட்சியில் ஏற்பட்டதை வையாபாடல் சுட்டிக்காட்டுகிறது. மேலும் இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான அரசியல், வாணிபத் தொடர்பில் தென்மராட்சிப் பிரதேசம் முக்கிய கேந்திரமாகத் திகழ்ந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் பெருநிலப்பரப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட வணிக உறவில் வன்னியில் இருந்து பொதி சுமக்கும் வண்டில்களுக்கு வரி அறவிடும் கடவைகள் (ஆயம்) பல தென்மராட்சியில் இருந்துள்ளன. யாழ்ப்பாண அரசு காலத்தில் தமிழ்மொழி, இந்துமதம், தமிழ் இலக்கியம், சோதிடம், சுதேச மருத்துவம் என்பன நன்கு வளர்ச்சி பெற்ற காலமாகும். இக்காலத்தில் தென்மராட்சி யாழ்ப்பாண இராசதானியின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததனால் அக்காலப் பண்பாடு அதிகம் வளர்ச்சியடைந்த பிராந்தியங்களுள் தென்மராட்சிக்கு தனித்துவமான இடம் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றை அடையாளப்படுத்தும் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகத் தென்மராட்சியில் கிராமங்கள் தோறும் காணப்படும் ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தென்மராட்சியின் பாரம்பரியம் மிக்க மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தக்கூடிய ஆலயமாக **கொட்டிகை அம்மன் ஆலயம்** காணப்படுகின்றது.

வடஇலங்கையில் குறிப்பாகத் தென்மராட்சியில் உள்ள இந்து ஆலயங்களை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம் 1). ஆகமமரபு சாராத கிராமிய ஆலயங்கள் அல்லது நாட்டுப்புற ஆலயங்கள் 2). ஆகமமரபிற்கு உட்பட்ட ஆலயங்கள் 3). கிராமிய ஆலயங்களாக இருந்து ஆகம மரபிற்கு உட்பட்ட ஆலயங்கள். அவற்றுள் மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் கிராமிய ஆலய மரபில் இருந்து ஆகம மரபிற்கு மாறிய ஆலயமாகும். ஆயினும் இவ்வாலயத்திற்குரிய தனித்துவமான சிறப்பு தற்போதைய ஆலயம் ஆகமமரபில் கட்டப் பட்டாலும் அதன் நீண்ட பாரம்பரிய வரலாறு அவ்வாலய வரலாற்றோடு இணைந்திருப்பதன் காரணமாக ஆக மரபு சாராத பல அம்சங்களும் அவ்வாலய வழிபாட்டின் கிரியைமுறை, சடங்குகள், வழிபடப்படும் சமய நம்பிக்கைகளில் கலந்து காணப்படுகின்றன. இதுவே இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

## மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் - ஒரு வரலாற்று நோக்கு



இவ்வாலயம் தொன்மை வரலாறு கொண்டது. இதன் தொடக்க காலம் கண்ணகை அம்மன் ஆலயம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. தமிழகத்தில் கி.பி.6ஆம் நூற்றாண்டில் பத்தி இயக்கம் எழுச்சி பெறமுன்னர் தமிழகத்திலும், இலங்கையிலும் கிராமிய ஆலயங்களே இருந்துள்ளன. இவ்வாலயங்களில் வைக்கப்பட்டுள்ள தெய்வ உருவங்கள் திராவிடத் தெய்வங்கள் அல்லது நாட்டுப்புறத் தெய்வங்கள் என அழைக்கப்பட்டன. இத் தெய்வங்கள் மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த இடங்களில் வீடுகளில், மரநிழலின் கீழ், நீர்நிலைகளை அண்டி அழியும் பொருட்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் வைத்து வழிபடப்பட்டன.தமிழரின் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களை அடையாளப்படுத்தும் பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழரின் தனித்துவமான நாட்டுப்புற தெய்வங்களாக அண்ணமார், நாகதம்பிரான், வீமன், வைரவர், கண்ணகி, துர்க்கை, காளி முதலான தெய்வங்களைக் கூறுகின்றன. சமகாலத்தில் இவ்வகையான தெய்வங்களே இலங்கைத் தமிழரிடம் செல்வாக்குப் பெற்றிருந்ததைப் பாளி இலக்கியங்களும், பிராமிக் கல்வெட்டுகளும் மறைமுகமாகக் கூறுகின்றன. இவ் ஆகமமரபு சார்ாத கிராமிய வழிபாட்டு ஆலயங்கள் பலவற்றைக் கொண்டுள்ள பிராந்தியமாக தென்மராட்சி குறிப்பாக மிருசுவில் வட்டாரம் காணப்படுகின்றது. அவற்றுள் கண்ணகி வழிபாட்டு ஆலயத்திற்கு தனித்துவமான வரலாறு காணப்படுகிறது.

வடஇலங்கையில் உள்ள பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வங்களில் கண்ணகி வழிபாட்டிற்குரிய ஆலயங்களே எண்ணிக்கையில் அதிகமாகும். இவ் வழிபாட்டின் தோற்றம் பற்றி ஆராய்ந்தோர் இவ்வழிபாட்டை 2ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தினான் என்பது மரபு. இதனால் வடஇலங்கையில் உள்ள கண்ணகி ஆலயங்கள் பலவற்றின் வரலாற்றை கஜபாகு அல்லது சிலப்பதிகார காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறும் மரபு இன்றும் காணப்படுகிறது. ஆனால் இவற்றை உறுதிப்படுத்தப் பொருத்தமான ஆதாரங்கள் எல்லா ஆலயங்களுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கொட்டிகை

அம்மன் ஆலயத்திற்கு முன்னோடியாக இருந்த கண்ணகி ஆலயத்திற்கு நீண்ட வரலாறு உண்டு எனக் கூறுவதற்குச் சில காரணங்கள் உண்டு

இலங்கைக்கு கண்ணகி வழிபாடு அறிமுகமான வரலாறு பற்றிய கதையில் இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற கஜபாகு மன்னனிடம் செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும் ஒரு காற்சிலம்பையும் சந்தனப் பேழையில் வைத்து கஜபாகு மன்னனிடம் கையளித்தான் என்றும் கஜபாகு மன்னன் விக்கிரகத்துடன் இலங்கை திரும்பும்போது தன்னுடன் பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பல்குடி மக்களையும் அழைத்து வந்தான் எனவும், இம் மன்னன் சிலையுடன் மாதகலுக்கு அருகேயுள்ள சம்புகோளத் துறைமுகத்தில் வந்திறங்கி, இங்கிருந்து யானைமேல் கண்ணகி சிலையை வைத்துப் பல யானைகள் பின்னே வர ஊர்வலமாய் பல இடங்களுக்கு எடுத்துச் சென்றான். ஊர்வலம் நின்ற இடமெல்லாம் கண்ணகி வழிபாடு தோன்றியது எனவும் கூறப்படுகின்றது. கஜபாகு மன்னனால் யாழ்ப்பாணத்தில் 1ஆவது கண்ணகி கோவில் ஸ்தாபிக்கப்பட்ட இடம் அங்கணாங்கடவை எனப்படும். அங்கணா என்பது அம்மனைக் குறிக்கும். ஒல்லாந்தர் காலத்தில் இக் கோயிலும் சிலையும் யானையால் சிதைக்கப்பட்டுள்ளது. இராசநாயகம் முதலியார் இச்சிலைகளின் காலும் அதன் தலையும் இந்நூற்றாண்டின் இருபதுகளில் இப்பகுதியில் பேராய்வு செய்த பீரிஸினால் இனங்காணப்பட்டன எனவும் இவ் எச்சங்கள் பின்னர் இப்பகுதி நூதனசாலையில் வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அங்கணாங்கடவையில் வந்திறங்கி வற்றாப்பளை செல்லும் வழியில் கண்ணகி தரிசனம் பெற்ற இடங்களில் ஒன்றாக மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் அமைந்த இடமும் ஒன்று என்ற ஐதீகம் காணப்படுகின்றது. இந்த ஐதீகத்துடன் தொடர்புடையதாகக் கொட்டிகை என்ற பெயர் தோன்றிய வரலாறு பற்றி இரண்டு ஐதீகங்கள் காணப்படுகின்றன. அவ்வைதீகக் கதைகள் எந்தளவுக்கு உண்மையென்பதை உறுதி செய்யமுடியாவிட்டாலும் அக் கதைகள் இவ்வாலயத்திற்குத் தொன்மையான வரலாறு இருப்பதைக் காட்டுகிறது.






(1817ஆம் ஆண்டு கட்டப்பட்ட கொட்டிகை அம்மன் தேரில் காணப்படும் புடைப்புச்சிற்பங்களும், ஆலய முகப்புத்தோற்றமும்)

தற்போதைய ஆலயம் 17ஆம் நூற்றாண்டில் சிறு கோவிலாக அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. 1814ல் இக்கோவிலிற்குத் திருப்பணி நடந்ததாக ஆலயத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கூறுகிறது. அங்கிருக்கும் பழமையான தேரில் உள்ள சாசனம் 1817ல் செய்து முடிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இவ்வாதாரங்கள் தற்போதைய அம்மன் ஆலயத்தை ஆகமமரபிற்கு மாற்றிய காலம் 17-19ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டதென்பதை உறுதி செய்வதால் இங்கிருந்த கண்ணகி ஆலயத்தின் தோற்றம் இக்காலத்திற்கு பல நூற்றாண்டு முற்பட்டதென்பது உறுதியாகத் தெரிகிறது.

இலங்கையின் அழியாப் பொருட்களைப் பயன்படுத்தி ஆகமமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பின்னரே தோற்றம் பெறத் தொடங்கின. அவ்வாறு தோன்றி வளர்ந்த ஆலயங்கள், 16ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இடித்தழிக்கப்பட்டன. போர்த்துக்கேய ஆசிரியரான குவேறா சுவாமிகள் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து

500க்கு மேற்பட்ட ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டதாக தனது நூலில் கூறியுள்ளார்.

அக்கலையழிவுக் கொள்கையால் தென்மராட்சியில் இருந்த ஆலயங்களும் இடித்தழிக்கப்பட்டன. அதில் கொட்டிகை கண்ணகியும் அடங்கி இருக்கலாம். ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் ஆகமமரபு சார்ந்த, ஆகமமரபு சாராத ஆலயங்களாக இருந்தவை 19, 20ஆம் நூற்றாண்டுகளில் மாற்றமடையத் தொடங்கின. ஆகமமரபு சாராத ஆலயங்கள் ஆகமமரபு சார்ந்த ஆலயங்களாக மாறின. இம்மாற்றத்திற்கு தென்னிலங்கையில் அநாகரிக தர்மபால பௌத்த சிங்கள தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டபோது வடஇலங்கையில் தமிழ் சைவத்தை முன்னிலைப்படுத்தி ஆங்கிலேயரை எதிர்த்த ஆறுமுகநாவலர் ஆகம மரபுசாராத ஆலயங்கள் ஆகமமரபிற்கு மாறவேண்டும் எனவும் போரிட்டார். இதன் விளைவால் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக தென்மராட்சியில் இருந்த ஆகமமரபு சாராத பல ஆலயங்கள் ஆகம மரபிற்கு மாற்றப்பட்டன. அதன் காரணமாகவே பராம்பரிய வரலாற்றுப் பெருமையுடன் விளங்கிய கண்ணகை அம்மன் ஆலயம் கொட்டிகை அம்மன் ஆலயமாக மாறுவதற்குக் காரணம்.


தற்போதைய அம்மன் ஆலயம் ஆகமமரபில் கருங்கல், சுண்ணக்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆகமமரபிற்கு உட்பட்ட வகையில் கர்ப்பக்கிருகம், அதன்மேல் விமானம், அந்தராளம், முன்மண்டபம், மகாமண்டபம், கொடித்தம்பம், பரிவாரக் கோவில்கள்,மற்றும் எமது பாரம்பரிய சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் புடைப்புச் சிற்பங்களுடன் கூடிய தேரையும் கொண்டுள்ளது. ஆயினும் இவ்வாலயம் அம்மன், சிவன், விநாயகர் தெய்வங்களுடன் இவ்விடத்திலிருந்த எமது தனித்துவமான பண்பாட்டு அடையாளமான கண்ணகிக்குத் தனிக் கோயிலமைத்துப் பாரம்பரிய சமய சடங்குகளை, சமயச் சின்னங்களை தொடர்ந்தும் பேணிக்கொள்வதுடன், பிராமணர் அல்லாதோர் இன்று இவ்வாலயத்தில் பூசை செய்து வருவது இவ்வாலயத்தின் பழமையையும், பெருமையையும் இக்கிராம மக்கள் மறக்கவில்லை என்பதை அடையாளப்படுத்தி நிற்கின்றன.

(நன்றி- மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலய கும்பாபிசேக மலர்-2014)

(கண்ணகி அம்மனைத் தரிசிக்க விரும்புகிறவர்கள் யாழ் கண்டி வீதியில் மிருசுவிலில் இறங்கி வடக்கு வீதி வழியாகச் சென்றால் ஒரு மைல் கல் தொலைவில் அங்கு வீற்றிருக்கும் அம்பாளைத் தரிசிக்கலாம்)

---

# HARD WORK-KEY TO A GOLD MINE




Once upon a time there was a very hard-working farmer. He had developed a grapery that used to give a rich crop of grapes every year. He had three sons but none of them bothered to help their father in his work. They were very easy-going kind of people. So, the farmer was very worried about their future.

One day, the farmer fell ill as of old age. He called his son and said, "Dear sons! I doubt my end is near and before dying I want to tell you that, in my grapery, there lies a hidden treasure. Dig it out after my death. "Saying this, the old farmer died.

After performing the last rituals of their father, the sons began digging the vine-yard. They dug every inch of it but found nothing.

But the digging led to such a rich crop as had never been there before even when their father was alive.

So, the sons came to know what their father meant by hidden treasure.


***The End..***

*Courtesy: kidsfront.com*

# வினைப்பயன்கள்

-தி.முரளீதரன்

தமிழ் மொழியில் "செய்" என்பது பொதுவினைச் சொல்லாகும். இச் செயல்களால் ஏற்படும் பயன்களை அனுபவிக்கவே உயிர்கள் மறுபிறப்புகள் எடுக்கின்றன என்பது இந்திய உபகண்டத்தில் தோன்றிய பெரும்பாலான மதங்களின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றாகும். செயல் என்பது வினை எனப் பொருள்படும். பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்னும் சுழற்சியில் ஏற்படும் அனுபவ நிலைகளை ஊழ்வினை எனப் பொதுவாக இந்திய சமயத் தந்துவங்கள் குறிப்பிடுகின்றன. இது பழவினை, கர்மவினை, கன்மம், ஊழ், விதி எனப் பலவாறாக அழைக்கப்படும். இவ் ஊழ்வினைப் பயன்கள் வெறும் தத்துவங்களாக மட்டுமின்றி இம் மதங்களில் தார்மிகக் கோட்பாடுகளாகவும் பரிணமிக்கின்றன. இக்கோட்பாடுகள் உயிர் அனுபவிக்கும் இன்ப துன்பங்களிற்கும் இவ் வினைப்பயன்களே காரணம் என ஏற்றுக்கொள்கின்றன.



மேலைத்தேய சமயங்கள் பொதுவாக வினைப்பயன்களைத் தத்துவரீதியாக ஏற்றுக்கொள்கின்றனவே தவிர தார்மிக அடிப்படையில் பொறுப்பு ஏற்பதில்லை. முற்பகல் செய்யும் வினையால் பிற்பகல் அதன் பலாபலன்களை எதிர்பார்க்கலாம் என்னும் வகையில் மேலோட்டமாக அதன் விளைவுகளை அணுகுகின்றன. உயிரின் இன்ப துன்பத்திற்கு ஊழ்வினை அல்லாத பிற விளக்கங்களை அளிக்கின்றன.

இந்திய உபகண்ட மதங்களான சமணம், பௌத்தம், வைணவம், சைவம் ஆகியவை பிறவிச் சுழற்சிக்கு ஊழ்வினைகள்தான் காரணம் என ஏற்றுக்கொண்டாலும், அவை எப்படி உயிரைப் பற்றுகின்றன, இத் தொடர் பிறப்புச் சுழற்சியை எவ்வண்ணம் அறுக்கலாம் என்பன போன்றவற்றிற்கு வேறுபட்ட முறைகளில் விளக்கங்கள் அளிக்கின்றன.


ஊழ்வினைகள் என்பது பிரபஞ்சத்தில் உள்ள எண்ணற்ற நுண்ணிய துகள்கள் என்கின்ற அடிப்படையில் சமண சமயம் இதனை விளக்குகின்றது. இக்கன்மங்கள் (ஊழ்வினைகள்) உயிரின் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப அவற்றால் கவரப்பட்டு அவற்றுடன் கலந்து செயற்படுகிறது. இக்கன்மங்கள் இரு வகைப்படும். ஒன்று உயிருடன் ஒன்றுபட்ட பாவ கன்மம். மற்றையது உடலுடன் சேர்ந்த திரவிய கன்மமாகும். உயிரானது உடலை விட்டு நீங்கும்போது கூட பாவ கன்மமானது அதனை விட்டு நீங்காது அதனுடன் பல பிறப்புக்களில் தொடரும். இதிலிருந்து விடுபட்டுப் பேரின்பநிலையினை அடைவதற்கு உயிர்களானவை புதுக்கன்மத்தைக் கூட்டாமலும், சேர்ந்த கன்மங்களை அழிக்கவும் வேண்டும். இதை மூன்று சாதனங்கள் மூலம் அடையலாம் என்கிறது சமண சமயம். அவையாவன சரியான கொள்கை. சரியான ஞானம், சரியான சீலம் என்பனவாகும். இவற்றுள் சரியான சீலம் மிக முக்கியமானது. இதில் ஐந்து விரதங்கள் பேசப்படுகின்றன. இவ்வைந்துள் அகிம்சையே பிரதானமானது.

பௌத்தம் உயிர்களின் இன்ப துன்பங்களிற்கு ஊழ்வினை மட்டுமின்றி பேதமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் ஆக மொத்தம் பன்னிரு சார்புகளும்(நிதானங்கள்) காரணம் எனக் கொள்கிறது. இச் சார்புகளின் தன்மையினால் ஏற்படும் பிறவிச் சுழற்சியை அறுத்தால் நிர்வாண மோட்சம் எனப்படும் பேரின்ப நிலையை அடையலாம் என்கிறது. இச் சார்புகள் ஊழ் வட்டம் அல்லது ஊழ் மண்டலம் என அழைக்கப்படும். இதிலிருந்து விடுபட, துக்கம், துக்கத்திற்கான காரணம், துக்க நிவாரணம் ஆகிய மூன்று உண்மைகளையும் உணர்ந்து துக்க நிவாரண மார்க்கம் எனப்படும் நான்காவது உண்மை வழியை உணர்ந்து ஒழுகினால் நிர்வாண மோட்சம் கிட்டும் என்பது பௌத்தத்தின் தத்துவமாகும். இத துக்கநிவாரண மார்க்கத்தில் சீலம், தியானம், ஞானம் ஆகிய முக்கிய நெறிகள் உள்ளடக்கப்பட்ட எட்டு நெறிகளைப்பற்றி விரிவாக விளக்கப்படுகின்றது.

மேற்கூறிய இரு மதங்களும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைசக்தி என்று ஒன்று உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஐம்புலன்களின அடக்கம், வாய்மை, தூய்மை, மன ஒழுக்கம், மன ஒடுக்கம் முதலியவற்றை பின்புலமாகக் கொண்டு தனி முயற்சிமூலம் பிறப்பில்லா பேரின்ப நிலையை அடையலாம் என்பதனை சுட்டிக்காட்டுகின்றன. அனைத்திற்கும் மேலான பரம்பொருள் என்று ஒன்று உண்டு என ஏற்றுக் கொள்ளும் வைணவ சமயத்திற்கும்,

சைவசமயத்திற்கும் தத்துவரீதியில் பலவேறுபாடுகள் இருந்தாலும் பழவினையைப் பற்றிய விளக்கத்தில் ஒத்துப்போகின்றன.

எச்செயல் செய்தாலும் அதற்குரிய நல்வினைப்பயனோ, தீவினைப்பயனோ உண்டு. செயலைக் கடமையாகச் செய் அதன் பலன்களில் பற்று வைக்காதே என வைணவ நூல்களில் ஒன்றான பகவத்கீதை தெளிவாகக் கூறுகின்றது. பலனை விரும்பாது செய்யும் செயல் "நிஷ்காமிய கன்மம்" எனப்படும். இந்தத் தத்துவம் பகவத்கீதை முழுக்கத் திரும்பத் திரும்பப் பேசப்படுகின்றது.




வைணவ மகானாகிய திருமங்கையாழ்வார் அவர்கள் "அறிவுகெட்டவர்களே, எல்லாவற்றிற்கும் காரண பூதனான எம்பெருமாளை வழிபட்டு, உங்கள் பிறவிச் சுழற்சியை அறுவுங்கள்" என பின்வரும் பாசுரத்தில் கூறுகினறார்.

*காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்*
*பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவரை*
*ஆண மென்றடைந்து வாழும் ஆதர்காள்! எம் ஆதிபால்*
*பேணிநும் பிறப்பெனும் பிணக்கு அறுக்க கிற்றிரே*

(நாலாயிர திவ்வியப் பிரபந்தம் -820)

இறை, உயிர், தளை(பாசம்) இம்மூன்றும் அநாதியானவை என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும். பாசம் என்பது ஆணவம், கன்மம்(பழவினை) மாயை என மூவகைப்படும்.

இப்பழவினையானது உயிர்களெடுக்கும் உடம்புகளிற்கும் அவை அனுபவிக்கும் போகங்களிற்கும் காரணமாக இருக்கும். சங்கிலித் தொடர்போல் ஒரு வினை கெடும்போது மற்றொன்றை உற்பத்தி பண்ணும். இந்த வினை மூன்று வகையானவை. அவையாவன: சஞ்சிதக் கன்மம், பிராரத்தக் கன்மம், ஆகாமியக் கன்மம் எனப்படும்.
சஞ்சிதம் என்றால் கூடிக்குவிந்து கிடப்பது என்பது பொருள். இதை தொகை வினை, இருப்பு வினை, ஊழ்வினை எனவும் அழைப்பர்.
பிராரத்த கன்மம் என்பது தொடக்க வினை, அல்லது நுகர்வினை எனப் பொருள்படும்.

ஆகாமியம் என்பது நிகழ்வினையாகும். அதாவது ஒரு பிறப்பில் செய்த வினைப்பயன்களின் ஒரு பகுதியை அப்பிறப்பிலேயே அனுபவித்தலாகும்.
இம்மூல வினைகள் (கன்மங்களை) காரணமாகவும் நல்வினை தீவினைகளை காரியங்களாகவும் சித்தாந்த தத்துவங்களில் கொள்வர். ஒரு காரியத்திற்கு பல காரணங்கள் இருப்பினும் அவற்றுள் ஒன்றே முதன்மையானதாக இருக்கும். ஏனையவை, அது காரியப்படுத்துவதற்கு துணைக் காரியங்களாக அமையும். இது எவ்வாறு என்றால் இன்ப துன்பங்களிற்கு வினைதான் முதற்காரணம். ஆனால் அவற்றின் துணைக் காரியங்களாகிய முயற்சி, அறிவு எல்லாவற்றையும் வினையே அளிக்கும். தாம் செய்த வினைகள் முழுவதையும் அப்பிறப்பிலேயே உயிர்கள் அனுபவித்து முடிக்க இயலாது. அனுபவிக்கப்படும் ஒவ்வொரு வினையின் சார்பிலும் புதுவினைகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். ஆககே கன்மத்தொலைவிற்காக உயிரானது முடிவில்லாப் பிறவிகள் எடுக்க நேரிடும். ஓர் பிறப்பில் குறிப்பிட்ட சிறு தொகுதி வினைகளே ஓர் உயிர் அனுபவத்திற்கு வரும்.

ஒவ்வொரு உயிரும் பிறவி பெறப்பட்டு, அதன் தாயின் கர்ப்பத்தில், உறையத் தொடங்கும், ஒவ்வொரு முறையும் அவ்வக் கணத்திலிருந்தே தொடக்கவினைத்(பிராரத்த) தொகுதிக்கு அனுபவங்கள் ஆரம்பமாகிவிடும்.
எனவே தொடக்கவினை என்றால், அவ்வவ்வுயிர் அவ்வப் பிறப்பில் அனுபவிப்பதற்கென, அதனதன் பழவினை(இருப்புவினை) அல்லது சஞ்சிதத்திலிருந்து எடுத்து ஒதுக்கப்பட்டு இருக்கும் ஒரு பகுதியான நல்வினை, தீவினைகளாகும்.

தொடக்கவினை பயன்தரும்போது, தான் நேரே நின்று தராமல் பிறவழிகளிலும் தரும். அவையாவன: தன்னாலேனும், பிற உயிர்களாலும், பஞ்சபூதங்களாலும், துர்தேவதைகள் என்பவற்றாலும் வருவனவாகும்.

ஒரு பிறப்பில் செய்த வினை மறுபிறப்பில் வந்து பயன் தரும் என்பது பொது விதி. சில நல்வினை, தீவினைகள் செய்த பிறப்பிலேயே பலன் தருதலும் உண்டு. இந்த நிகழ்வினை,

இருப்பு வினையுடன் சேர்ந்து செயல்படும்.

கன்மமானது மனம், வாக்கு, காயங்கள்ால் செய்யப்படும் நிலைகளில் நல்வினை, தீவினை என்னும் நிகழ்வினையிலிருந்து (ஆகாமியத் திலிருந்து) பின் அவற்றின் பதிவு புண்ணிய, பாவங்கள் என்னும் நிலையில் தொகைவினை(சஞ்சிதம்)யாக இருந்து, மேலே இன்பம், துன்பம் என உணரப்படும் நிலையில் தொடக்கவினை(பிராரத்த)யாக தொடர்ந்து கொண்டிருக்கும். தொடக்கவினை அனுபவத்திற்குரியது. அருவமான உயிரானது தத்தம் அனுபவப்பேற்றிற்கு உருவமாக உடல்களை சாதனங்களாக கொண்டு செயற்படும்.

மேலும் வினைப்பயன் யாவற்றிற்கும் மேலாக இறைவன் ஒருவன் உள்ளான் என்பதை சைவசமயம் வலியுறுத்துகின்றது. அவனைச் சார்ந்தால் எச்செயலும் அவன் செயலாகி வினைகள் கெடுகின்றன. பலன் ஒன்றையும் எதிர்பாராமல் எல்லாம் திருவருள் என்னும் உணர்வுடன் செயற்படுதலை பற்றற்ற வினையாகும். இந்நிலை சைவ சமயத்தில் இருவினை ஒப்பு என அழைக்கப்படுகின்றது.

ஆழ்நிலைப் பக்தி என்பது "தான்","இறைவன்" என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணரும் உணர்வு நிலையாகும். இறைப்பொருள் ஏதோ கருத்துப் பொருளாக இல்லாமல், அன்றாடம் வாழ்வுடன் தொடர்புடைய உட்பொருளாக, அனுபவப் பொருளாக இந்நிலையில் உணருப்படும். எச்செயலும் தாங்களாகவே செய்வதாக கருதாமல் எதனைச் செய்ய நேர்ந்தாலும், உள்ளுணர்வின் தூண்டுதலால் தன் அறிவு இன்றி இருப்பதனால், அதனை இறை செயலாகவே இந்நிலையில் கருதுவார்கள். *"சித்தன் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன்"* என்கிறார் மாணிக்கவாசகர்.
இப்பக்தி நெறியால் பழவினைகளை அறுக்கலாம் என்பதனை

*"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பக்திநெறி அறிவித்துப்* **பழவினைகள்** *பாறும்வண்ணம்*
*சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தனெனக் கருளிவா றார்பெறுவார் அச்சோவே"*

என மாணிக்கவாசகர் அச்சோப் பதிகத்தில் பழவினைகள் அறுக்கும் வழியைத் திடமாகக் கூறுகின்றார்.

*"நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத*
*என்னடியான் உயிரை வவ்வேல் என்று அடற்கூற்று உதைத்த*
*பொன்னடியேபரவி நாளும் பூவொடுநீர் சுமக்கும்*
*நின்னடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே"*

என திருஞானசம்பந்தசுவாமிகள் பக்தி செறிந்த மார்க்கண்டேயரின் வினைப்பயனை இறைவன் தன் பெருங்கருணையினால் அழித்ததை எடுத்துச் சொல்கினறார்.

*விருது குன்றமா மேருவில் நாண் அரவர் அனல்எரி அம்பாப்*
*பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி எந்நாளும்*
*கருது கின்றவூர் கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்*
*கருத நின்றகே தீச்சரம் கைதொழக்* **கடுவினை** *அடையாவே"*

எனத் திருக்கேதீசுவரப் பதிகத்திலும் திருஞானசம்பந்தசுவாமிகள் வினைகள் அழிக்கும் வழியினை எடுத்துரைக்கின்றார். இதன்மூலம் ஆழ்நிலைப் பக்தர்கள் மட்டுமின்றி இறையன்புள்ள சாதாரண நம்பிக்கையுள்ள பக்தர்கள்கூட ஊன் உருக, உளமுருக இறைவனை இருகைகூப்பி வணங்கினால் அவர்கள் வினைகள் எல்லாம் அகலும் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

இறையருளால் மட்டுமே, உயிரானது தன் வினைப்பயன்களை அழித்து, பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட்டு, முத்திநிலையினை அடைய முடியும் என்பதில் வைணவமும் சைவமும் மிகத் தெளிவாக உள்ளன.
*"சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்*
*மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்*
*வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்*
*கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே"*(கந்தரலங்காரம்)

(இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்ட ஒரு கட்டுரையின் சாரம்)

# நமது சமயமும் இன்றைய தலைமுறையும்

- விஜய் சூர்யா

நமது உள்ளத்திலும். உறவுகளுக்குள்ளும், பொதுவாக நிலவ வேண்டிய ஒழுக்கங்களை எங்கள் சமயம் எமக்குத் தந்துள்ளது. அது அனுபவ அறிவிவைக் காட்டி நிற்பது. பல தலைமுறைகளுக்கும் அறம் நிலைக்க வேண்டும் என்ற அன்பினால் உருவானது.

இன்றைய தலைமுறையினரின் கண்ணோட்டம் எதையும் கண்ணால் கண்டு அலசி ஆராய்ந்து தெரிந்து கொண்டதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டது. அறிவியலின் அடிப்படையில் இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணுவதில் தவறில்லை. முதலில் அவர்கள் எமது முன்னோர் என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரிந்தால்தானே அது உண்மையா இல்லையா என்று அவர்களால் கணிக்க முடியும்.

விஞ்ஞானி ஐசாக் நியூட்டன பார்ப்பதற்கு முன்பும் அப்பிள் தரையில் விழுந்து கொண்டுதான் இருந்தது. டார்வின் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உயிர்கள் பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டுதான் இருந்தன. ஐயன்ஸ்டீன் சொல்வதற்கு முன்பும் அணுவுக்குள் ஆற்றல் பொதிந்துதான் இருந்தது. இவை எல்லாம் ஏற்கனவே இருந்தவை. நமக்கு இருப்பது இவற்றைக் கண்டறியும் ஆற்றல் மட்டுமே. ஆனால் இதற்கெல்லாம் மூலாதாரமாக ஓர் ஆற்றல் இருக்கிறது. அது பேராற்றல். சிலருக்கு இது இயற்கையின் பேராற்றலாகவும் தெரிகிறது.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதை 'அணுவுள் அவனும், அவனுள் அணுவும்' என்றார் திருமூலர். அவர் கடவுளை அணுவின் அணுவாகப் பார்க்கிறார்.
அணுவின் அணுவினை ஆதிப்பிரானை
அணுவின் அணுவினை அணுகவல்லார்க்கு
அணுவின் அணுவினை அணுகலுமாமே என்று திருமூலர் விளக்கும் அந்த அணுவின் அணுவை இன்றுதான் விஞ்ஞானிகள் அணுகியுள்ளார்கள். 'போசவன்' (Boson) என்று விஞ்ஞானிகள் இன்று அழைப்பதை. அன்று ஈசன் என்று திருமூலர் கூறி அவனை அணுவின் அணுவாகச் சொல்லிச் சென்றுள்ளார்.

எங்கள் ஈசன். நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவமும், விஞ்ஞானிகள் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ந்து கொண்டிருக்கும் Cosmic dance எனப்படும் அணுவின் ஆட்டமும் ஒரே வகையான நகர்வின் அடிப்படையில் இருப்பதால்தான் ஆராய்ச்சி மையத்தின் வாசலில் நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவ சிலையை அமைத்துள்ளார்கள்.

இன்று மில்லியன் டலர்கள் செலவு செய்து ஆராய்ந்து வருவதை அன்றே சித்தர்களும், ஞானிகளும் உணர்ந்து எங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.
காஞ்சி மகா பெரியவர் "கடவுள் என்பது ஒரு தத்துவம். அதனிடம் மனதை நிலையாக நிறுத்தி பக்தியில் தோய்க்க வேண்டும் என்று மட்டும் சொன்னால் சாமானியர்களால் அதனை ஸ்திரமாகச் செய்ய முடியவில்லை. பக்தியையும் காரிய ரூபத்தில் காட்டுவது என்றால் அது அவர்களால் முடிகிறது. அதற்காகத்தான் சமயத்தில் சடங்குகள் வந்துள்ளன" என்றார்,

ஆலயத்திற்குச் செல்வதும், தியானத்தில் ஆழ்வதும் அதன் மூலமாக எங்கள் ஆற்றலை அண்டசராசங்கள் எங்கும் நிறைந்துள்ள பேராற்றலுடன் இணைக்கும் வழிமுறையாக எமது சமயம் இருக்கிறது.

அறிஞர்கள் இன்று தியானம் (Meditation) பற்றி பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள் இதில் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு தியானம் செய்பவர்கள் மூளையில் 'காமா பிரைன் வேவ்' (Gamma brain wave)ன் செயற்பாடு மிக உயர்ந்த நிலையில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளார்கள். இந்த gamma wave என்பது ஒவ்வொருடைய அறிவு கூர்மையுடனும், மனதின் கட்டுப்பாட்டுடனும். மற்றும் உள்மனத்தின் நீடித்த அமைதியுடனும் தொடர்புடையது. ஆதலால் எங்கள் சமயப் பெரியவர்கள் எங்களை மேன்மைப்படுத்த தியானத்தை வலியுறுத்துகிறார்கள். அதைப் புரிந்து கொள்ளத் நாம் எமது மனக் கண்ணைத் திறக்க வேண்டியுள்ளது.

நாம் உள்ளுணர்வின்பால் ஆழ்நத பிடிப்பு கொண்டு செயற்படும்போது எமது விருப்பம் நிறைவேறுவதைக் காண்கிறோம். இதை சுவாமி விவேகானந்தர் "ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் மூளை ஒரு தீர்வையும், இதயம் ஒரு தீர்வையையும் காட்டும். ஆனால் நீங்கள்

எப்போதும் இதயம் சொல்லும் வழியையே பின்பற்ற வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

நம்மனதை தெளிவுபடுத்த ஆலய வழிபாடு. தியானம் என்ற வழிமுறைகளை ஏற்படுத்தித் தந்த மகான்களின் உருவங்களின் படங்களில் அவர்களைச் சுற்றி ஓர் ஒளி வட்டம் இருப்பதை பார்த்திருப்பீர்கள். இது ஏதோ படம் வரைபவரின் கற்பனை என்று கருதிவிடக் கூடாது. இதைத்தான் இன்றைய விஞ்ஞானிகள் மின்காந்தப் புலம் (Electro magnetic field) என்று கூறுகிறார்கள். இது நமது உடல், உள, உணர்வு மற்றும் ஆன்மிக (Physical, mental, emotional and spiritual energy) நிலையை அடிப்படையாகக் கொண்டது. மனத்தாலும், உடலாலும் ஆரோக்கியமான ஒவ்வொரு மனிதனையும் சூழ இந்த மின்காந்தப் புல அலைகள் 4 முதல் 5 அடிகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதைத்தான் எங்கள் சமயத்தில் ஆரா (Aura) என்கிறார்கள்.

இந்தக் மின்காந்தப் புலம் நம் உள் மனதின் வெளிப்பாடாக மற்றவர்க்கு எம்மைப் பற்றிச் சொல்லாமல் சொல்கிறது. ஒருவரைக் கண்டவுடன் அவரைப் பற்றிய நேர்மறையான அல்லது எதிர்மறையான எண்ணத்தை நம் மனது எடை போடுவது இந்தக் மின்காந்த அலைகளின் அதிர்வால்தான்.

இறை வழிபாடு, தர்ம சிந்தனையுள்ளவர்களைச் சுற்றி இருக்கும் 'ஆரா' அதன் உயர்ந்த ஒளி நிலையை எய்துகிறது. இதற்காகத்தான் எம்முன்னோர் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார்கள். காரணம் இறைவன் சந்நிதியில் அங்குள்ள சூழலில் எம்மை நாம் ஒன்றாக்கிக் கொள்ளவும் அதே சமயம் எம் மனக் கசடுகளைக் கழியவும் வழிபாடு உதவுகிறது.

பல்வேறு சமயத்தினரும் உலகம் எங்கும் உள்ள அவர்களின் அமைப்புகள் மூலமாக தமது மதத்தினை வளர்க்கச் செயற்படுகிறார்கள். எங்கள் சமயம் பிரச்சாரம் செய்யும் சமயமாக இருந்ததில்லை. எம்மதத்தில் உள்ள உண்மையை உணர்ந்து ஒருவர் தானாக வந்தால்தான் உண்டு. அதற்கும் பல தடைகள் உள்ளன.

ஆனால் அன்பர்களே ஆண்டாண்டு காலமாக ஒரு சமயத்தின் கருத்து பரவுதல் என்பது அம்மதத்தின் அடியார்களின் கடும் உழைப்பும், மன்னர்களின் ஆதரவும் இருந்ததால்தான் சாத்தியமாயிற்று என்பதை வரலாறு எமக்குக் காட்டுகிறது.

மௌரிய மன்னன் அசோகன் இல்லை என்றால் புத்த மதம் இந்தளவிற்கு வளர்ந்திருக்காது. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் என்ற ரோமானிய மன்னனை கிறிஸ்த்துவத்திற்கு மாற்றியிருக்க இல்லையென்றால் கிறிஸ்த்தவ சமயம் பரவியிருக்காது. அதுபோல் இஸ்லாமிய மன்னர்கள் மற்ற நாடுகளின் மேல் படை எடுத்து வென்று ஆண்டு தமது சமயத்தை பரப்பியிருக்காவிட்டால் இஸ்லாம் ஒரு குறுகிய வட்டத்துக்குள்தான் இருந்திருக்கும். இதன் தொடர்ச்சியாக பல சமயத்தவர்களும் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப அவரவர்களின் சயமத்தைப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

நாம் நமது சமயத்தை வீடுவீடாகச் சென்று பரப்புரைச் செய்யத் தேவையில்லை. ஆனால் எங்கள் சமய ஆழமான உண்மைகளைக், கருத்துக்களை இன்றைய தலைமுறையினருக்கும், அடுத்த சந்ததிக்கும் பயன் உள்ள வகையில் எடுத்துச் சொல்வது அவசியம் அல்லவா? உதாரணமாக 1973ம் ஆண்டில் கவியரசர் கண்ணதாசன் எழுதிய அர்த்தமுள்ள இந்து மதத்தை பொது மக்களிடையே பரப்பு வேண்டும் என்ற சமய முன்னெடுப்பை ஒருவரும் எடுக்கவில்லை என்பது வருத்தமான உண்மை.


நம் சமயக் கருத்துக்களை இன்றைய தலை முறையினர் உணரும்படி எடுத்துச் சொல்வது எமது கடமை. அக்கருத்துக்களை அவர்கள் பிறரிடம் எடுத்துச் சொல்லும் உறுதியுடனும், எங்களின் பண்பாடு, பாரம்பரியச் சிந்தனையுடனும் வளரவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

## சிரமாறுடையோன் யார்?

சீறாப்புராணம் எழுதிய உமறுப்புலவரை அவருடன் நெருங்கிப் பழகிய அன்பர் ஒருவர் அவரிடம் "நீங்கள் வணங்கும் தெய்வம் யார்" எனக் கேட்டார் அதற்கு அவர் "சிரமாறுடையோன்" என்றார்.

சிரமாறு உடையோன் யார்? ஒருவரா? அல்லது பலரா?

சிரமாறுடையோன் யார்? சிவபெருமானா? விநாயகரா? முருகக் கடவுளா? அல்லது திருமாலா?



எவர் என்று பார்ப்போம்.

தமிழில் சிரம் என்றால் தலை என்று பொருள். ஆறு என்றால் ஆறு (இலக்கம்), நதி, ஆறுதல். மாறு என்றால் மாறுதல், மாற்று. உடையான் என்றால் உடையவன்.

சிரமாறுடையோன் : கங்கை நதியைத் தன் தலையில் சூடியவன். சிவபெருமான்.

சிரமாறுடையோன்: : மாற்றுத்தலையை கொண்டவன் விநாயகன்

சிரமாறுடையோன்: ஆறுமுகங்களைக் கொண்ட ஆறுதலைகளை உடையவன் முருகன்.

சிரமாறுடையோன் : திருப்பாற்கடலில் வீற்றிருந்து களைப்பாற ஒரு கையினால் தன் தலையைத் தாங்கி ஆறுதலுக்காக இருக்கிறாரே திருமால்.

## நன்றி

அன்றொரு நாள் அருமை நண்பர்களாய் அருகிருந்து கலசத்தைப் பிரசவிக்கப் பண்ணித் தொட்டிலில் இட்டவர்களை மறவோம்.

வளர்த்தெடுத்து முன்னிலைப் படுத்திய முன்னாள் ஆசிரியர்களை மறவோம்.


அச்சேற்றி அழகாக்கி ஆடையும் அணியும் தந்தவர்களை மறவோம்.

ஆக்கமான கருத்துக்களை எழுதித் தரமுயர்த்தி அறிவாக்கிய கட்டுரையாளர்களை மறவோம்.

விளம்பரம் தந்துதவி சமயக் கத்துக்களை எழுத்துருவில் நடை பயிலப் பண்ணிய நல்ல உள்ளங்களை மறவோம்.

ஆதரவளித்து போற்றிப் பாதுகாத்து வாழ்த்தும் வாசகர்களை மறவோம்.

ஆதலால் **நன்றி! நன்றி! நன்றி!**



ஆசிரியர் ஆனந்ததியாகர்


குங்கிலிய கலைய நாயனார்

# 2. Kunkiliya Kalaya Nayanar

*Story* : **Namasivayam** *Graphics* : **Sankar**


1

Kalayanar is one among the 63 great devotees of Siva. He lived in Thirukkadavur. He used to serve Goddess Abhirami and Lord Amritaghatesa by burning incense in front of them.




2

His service which lasted several years came to face a difficulty. Poverty crept into Kalayanar's home.





3


Day by day the poverty became more and more distressing. Kalayanar sold away the silver utensils, as also the cattle he had in his house.




4

Finally he had to sell away the piece of land he owned in order to continue the service of burning incense.





5
Kalayanar's wife came to a decision. She removed the Mangalyam (an auspicious golden emblem worn by a married woman round her neck) and tied a piece of turmeric in its place.
Please sell this and get some grain. The children are in agony because of hunger.
6
Having no other go Kalayanar set out with moist eyes.
Don't be anxious. As soon as father returns I shall cook food for you.
7
As he was going along the street with the Mangalyam Kalayanar saw the temple tower.
Ah! Today I have not sent incense for the Lord. Today is Monday, an auspicious day for Siva.
Just then a hawker came there with a bag of incense. Seeing it Kalayanar forgot about his wife and children tortured by hunger.
I have gold in hand, and before me is incense. How gracious the Lord is!
8
Sir, I have a golden Mangalyam with me. Will you give me the bag of incense in exchange for it?
Why not? You can certainly have the incense.


9 Burning the incense before goddess Abhirami.





10 Happy that he was able to burn the incense Kalayanar felt relaxed and fell asleep in the temple itself.




11 Just then the Lord and Mother showered all prosperity on Kalayanar's house.





12 Waking up, Kalayanar rushed home highly agitated.




13 This miracle came to be known throughout the village.

The leaders of the village assembled in the temple. Worship was done.





14 In Thirupananthal Lord Siva bent his linga a little to the side to oblige a woman devotee.

The Chola King tried to straighten the linga. But even elephants could not move it.




15 Kalayanar came to Thirupananthal on pilgrimage and worshipped the Sivalinga that was inclined. He wound a flower garland round a rope and tied one end of the rope on the linga. The other end he tied round his own neck and pulled.




16 The next moment the linga got straightened.

The Chola King bestowed on Kalayanar wealth and royal honours and saw him off to Thirukadavur.




JR Print
www.jrprint.com
- experience of the power -

25 years experience in the Printing World

59-61 Hoe Street, London E17 4QR

0208 503 6643 | ravi@jrprint.com




* Arangetram Books
* Souvenirs & Invoices
* Leaflets, Visiting Cards
* Letter Heads
* Wedding Cards
* Raffle Tickets
* Cake Boxes
* Bill Books, Invoices
* Rich Cakes & Boxes
* Birthday Cards
* Short Eat Boxes
* Compliment Slips
* Colour Printing
* Invitation Cards
* Sign Writing
* Banner Printing



பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|






**திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா**





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton THISTLE HOTEL London Heathrow Holiday Inn

**உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற**

**தரம் மிகு இலங்கை மற்றும்**

**தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......**

Tel: **020 8799 7180**

**mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk**


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Srilankan Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5,Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporim Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)
Designed & Printed @ JR Print, Tel: 0208 503 6643

# பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்

19-20. 04. 2014 திகதிகளில் இலண்டனில் நடைபெற்ற பிரித்தானிய
சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 15வது மாநாட்டில் எங்கள் சங்கத்தின் காப்பாளர்
திரு விஜயரத்தினம் நாகரட்ணம் அவர்கள்
"சமூகசேவகர்" என்ற பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.




திரு நாகரட்ணம் அவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும்,
பொருளாளராகவும் மற்றும் பல பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பான பணி செய்தவர்.
தற்போது காப்பாளராகக் கடமை ஆற்றுகிறார்.

இவருக்குக் கிடைத்த இப்பெருமையை நாம் பாராட்டுகிறோம் இவரின் பணிகள் மேலும் வளர்ந்து
பல்லாண்டு வாழ்க வாழ்க என கலசம் வாசகர்கள் வாயிலாக
**சமூக சேவர் திரு நாகரட்ணம்** அவர்களை வாழ்த்துகிறோம்



# SIVARATHY & CO


**APPROVED BY CIMA. SAGE ACCOUNTANTS CLUB MEMBER**

* 25 YEARS OF EFFICIENT SERVICE TO SUIT THE NEEDS OF THE CLIENTS

* VAT RETURNS
  PAYROLLS
  BUSINESS PLANS
  & ADVICE

* TAX RETURNS
  TAX & VAT
  SELF ASSESSMENT
  INVESTIGATIONS

* ACCOUNTS &
  BOOK-KEEPING



CUTTING EDGE QUALITY AND PRICE ASSURED
100% GENUINE FRIENDLY SERVICE VISIT US
AND FEEL THE DIFFERENCE

CIMA
Chartered Institute of Management Accountants

MR.R.SIVANANTHARAJAH ACMA, CGMA
89 SPRINGFIELD DRIVE
ILFORD, ESSEX, IG2 6QS

TEL: 0208 518 1490 MOB: 07946545144

www.accountingilford.co.uk email: accountant.sivarathy@gmail.com

சங்கத்தில் 29.03.2014 அன்று GTV நிறுவனத்தினர் நடத்திய
இளவயது நட்பின் விளைவுகள் பற்றிய விவாதத்தின்போது




14.04.2014 அன்று நடைபெற்ற புத்தாண்டுப் பிறப்புப் பூசையின் போது
எங்கள் ஆலயத்தில் அடியார்கள்



19.04.2014 அன்று நடைபெற்ற சைவத் திருக்கோயில்கள் ஒன்றிய நிகழ்வில்
கலந்து கொண்ட நால்வர் மூத்தோர் நிலையத்தினருடன் பொதுச் செயலாளர்



எங்களை விட்டுப் பிரிந்த எமது அன்னையின் நினைவாக
கலசத்தின் பணிகளை வாழ்த்துகிறோம்

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழபவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



அன்னை மடியில்
05 - 03 -1942

ஆண்டவன் அடியில்
09-09-2013

அமரர்

# அமரர் திருமதி தம்பிராசா சிவஞானம்மாள்

அவர்கள்

## திதி வெண்பா

விஜய வருஷமானதோர் ஆவணித் திங்கள்
சதுர்த்தி திதிதனில் - தீங்கறியார்
தவமுடையாள் சிவஞானம்மாள் மண்ணுலகில் யாக்கை விட்டு
சிவசோதியில் சங்கமித்த நாள்.

பிள்ளைகள்: கிருபாகரன்
பிரபாகரன்
ரூபாகரன்

# S I Builders & DIY Ltd

Central Heating, Plumbing, Sanitary Ware,

Bathroom Suites, Electrical goods and paints

90-96 Katherine Road, London E6 12EN

Tel: 020 8471 1677

Open 7 days a week

Web: www.siplumbingandheating.co.uk

E-mail: si.buildres@hahoo.co.uk





SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

# ALL CARS WORKSHOP LTD

FULLY QUALIFIED MECHANIC

MOT
Servicing
Electrics
Diagnostics
Air Cond.
Head Gaskets
Clutches
etc.


"For all your Car Needs"






**30 Years's Experience**

Repairs to all makes & Models
no job too big or small




Costas
*Director*

Tel: 020 8501 0000
07802 259 101

# SANAT Ltd

Meridien House
69, Clarendon Road
Watford
Hertfordshire
WD17 1DS

web: sanatltd.com
email: info@sanatltd.com

Customer Service: 0203 630 0500

TEL: 0203 362 0455
0203 362 0456
FAX: 0203 362 0457


CALL AROUND THE










***Key Features:***


***HIGH QUALITY CALLS***


***LOW COST CALLS***











# E GLOBE FOR LESS

INVESTORS IN PEOPLE | Gold

community care at HOME

skills for care Accolades

# SATASH COMMUNITY

Care Quality Commission

Ofsted raising standards improving lives

CQC Reg. No Adult/Domiciliary Care: 1-10164578

Ofsted Reg. No for Children Service's: SC462450

## PROVIDING SPECIFIC & UNIQUE INDIVIDUALISED PERSON CENTRED CARE FOR PEOPLE WITH LEARNING DISABILITIES AND ASSOCIATED MENTAL HEALTH NEEDS (AUTISM/ASPERGERS)

**ADULT RESIDENTIAL CARE SERVICES**

**CHILDREN RESIDENTIAL CARE SERVICES**

**DOMICILIARY CARE**

**SHORT BREAK / RESPITE**

**OUTREACH**

உடல் வலிமை குறை அல்லது மன நோய் காரணமாக உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்ற பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்து அதற்கொப்ப செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பல ஆண்டுகளாகப் பாராட்டப்பட்டு வருகின்றது. மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Contact Us

01708 856592 (Adult's services)
01708 851189 (Children's services)
0203 200 1047 (Domiciliary care services)
07966 377298 (Logan)
07957 869620 (Letchmi)
logan@satashcommunitycare.com
letchmi@satashcommunitycare.com

# your choice is CLEAR!




**Come to Bluebell for..**

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

**Book your FREE consultation today!**

## Bluebell is an Invisalign® Platinum Elite Provider.

**If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.**



*Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.*



Bluebell
dental practice & clinic
*Making a Difference*

CHIGWELL
**020 8500 6789**

STRATFORD
**020 8555 1144**

**www.bluebelldp.co.uk**

Pharmacy

# SOLANKI CHEMIST

## Welcome to Solanki Chemist



**Welcome** to Solanki Chemist, a family –run independent pharmacy serving the local community around LondonE12 since 1983




For any medical needs, enquire at SOLANKI CHEMIST.

We Do:

Repeat prescriptions

Electronic prescriptions

Minor ailments

Medicines check ups

### Opening Times

| | |
|---|---|
| Monday | 9.00 am- 8.00 pm |
| Tuesday | 9.00 am- 8.00 pm |
| Wednesday | 9.00 am- 8.00 pm |
| Thursday | 9.00 am-7.00 pm |
| Friday | 9.00 am- 8.00 pm |
| Saturday | 9.00 am- 5.00 pm |

எம்மிடம்:

நவீன எலக்ட்ரானிக் முறையில் மீள்/தொடர் மருந்துகளைப் பெறலாம்

உங்களின் தேவைகளுக்கு பல மொழிகளிலும் அறிவுரை கிடைக்கும்.

வயதானவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், இலசவமாக வீட்டிற்கு மருந்து அனுப்பப்படும்..

தங்களை அன்புடன் வரவேற்கும் **சோலோங்கி மருந்தகம்** தமிழில் சேவை வழங்கக் காத்திருக்கிறது.

Tel/Fax: 0208 472 2901

324 High Street North, Manor Park, London E12 6SA


# GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
# LONDON - UK














**SENSEI M. RAMATHAS**

TRAINED BY MICHAEL CALANDRA

**THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF**

## ISSHINRYU WORLD KARATE ASSOCIATION

OKINAWA - JAPAN

Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do

NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com

M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do

LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com

Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139

SPICELAND
FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY

Authentic
Sri Lankan & South Indian
Restaurant
020 8667 1700
07984 038 757
Opening Times: 7am to Midnight




212 London Road
Croydon - CRo 2TE
www.spicelanduk.com contact@spicelanduk.com

Spicelandன் புதிய உதயம்
எல்லாளன் Supermarket, Croydon

# Ellalan Supermarket
# எல்லாளன்



உங்களுக்குத்தேவையான
இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள் அனைத்துப்பொருட்களையும்
நியாயமான விலையிலும் தரமான சேவையுடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Tel: 020 8681 7485


234/236 London Road
Croydon CR0 2TF

# சங்க நிகழ்வுகள் சிலவற்றின் பதிவுகள்

குரு பூசையின்போது

திருப்பனந்தாள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுந்தரமூர்த்தி தம்பிரான் அவர்கள் ஆலயத்தில், திருநாவுக்கரசு நாயனார் குருபூசையின் போது

20.04.2014



செஞ்சொற் செல்வர் ஆறதிருமுருகன் அவர்கள் சங்க ஆலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குரு பூசையின் போது உரையாற்றுகிறார்

20.04.2014



நால்வர் மூத்தோர் நிலையத்தினருடன் திரு ஆறதிருமுருகன் அவர்கள்

சங்க ஆலயத்தில் 01,02. 02.2014 திகதிகளில் இடம்பெற்ற வில்வமாலை பிரதிஷ்டா கும்பாபிஷேக யாகசாலைக் கிரியைகளின்போது





இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Pathmini

## 22ct GOLD

## JEWELLERS

892 London Road
Thornton Heath
Surrey CR7 7PD

**Tel: 020 8665 1111**

**Fax: 020 8664 8999**